
கல்கி





KALKI
19.9.65
35 காசு

உங்களுடைய கேசம் ஆரோக்யமாகவும்
பளபளப்புடனும் விளங்கும்

பிரில்க்ரீம்

தடவி நேர்த்தியாக தலையை வாரிக்கொண்டால்!





பிரில்க்ரீம் மட்டுமே

* அதிக எண்ணெய்ப்பசை இல்லாமலும், தாறுமாறாக உரோமம் கலையாமலும் நேர்த்தியாக தலையை வார உங்களுக்கு உதவுகிறது.
* மிகவும் சிக்கனமானது—ஒருமுறை தடவி வாரிக்கொண்டால் நாள் முழுவதும் உங்கள் தலை கலையாது அழகாக தோற்றமளிக்கும்.
* உரோமம் உதிர்ந்து வழுக்கை விழாமல் தடுக்கக்கூடிய, ஆரோக்யமான உரோம வளர்ச்சியைத் தூண்டக்கூடிய, சேர்த்தியான கலவை வாய்ந்தது.
* உங்களுடைய கேசத்தின் இயற்கையான வண்ணத்தைப் பாதுகாக்கிறது.

எனவே இனிமேல் பிரில்க்ரீமையே உபயோகியுங்கள்!

உலக முழுவதிலும் லக்ஷக்கணக்கான நேர்த்தியான மனிதர்கள் இதையே உபயோகிக்கிறார்கள்

BP/1/P/1165 TM


நாளுக்கு நாள்...
உங்கள் மேனியெழிலை
ஓங்கச் செய்வது
ரெக்ஸோனா
அழகுசாதனத் தைலங்கள் இணைந்த விசேஷக் கலவை
யாகிய 'கேடில்' அடங்கியது ரெக்ஸோனா ஒன்றுதான்.
பூரிக்கும் இன்ப நறுமணம் நேரமெல்லாம் உங்கள்மீது
நின்றுநிலவச் செய்வது ரெக்ஸோனா ஒன்றுதான்.
அன்றாடம் உபயோகியுங்கள் ரெக்ஸோனா.
Rexona
GOOD FOR YOUR SKIN
'கேடில்' அடங்கிய ரெக்ஸோனா
உங்கள் மேனியெழிலுக்கு உகந்தது
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு


பரம்பரை சௌந்தர்யத்தைக்
குறிக்கும் தூண்கள்...
அரவிந்த்
SANFORIZED
Arvind
Quality
அரவிந்த் மில்ஸ் லிமிடெட்

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



சமுதாய சீர்திருத்தமோ, பொருளாதார முன்னேற்றமோ, அரசியல் சுதந்திரமோ ஏற்படவேண்டுமானால், அது வெளியிலிருந்து கிட்டாது. உங்கள் உரிமைகளை நீங்களே முயன்று பெற வேண்டும். அந்த முயற்சியில்தான், அவை பெறுவதற்கான தகுதியையும், பெற்றதைக் காப்பாற்றிக் கொள்வதற்கான சக்தியையும், பெற்ற உரிமைகளைச் சரியானபடி உபயோகிக்கும் திறமையையும் பெறுவீர்கள். - பிபின் சந்திரபாலர்

வீர திலகம்





மலர் 25 ★ இதழ் 8

நம் கடமை

மூன்பு ஒரே நாடாக இருந்த உபகண்டம் இன்று இரண்டாகி ஒன்றோடொன்று போரிடும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்போது போர் மூண்டிருப்பதற்கு முழுப் பொறுப்பும் பாகிஸ்தானைத்தான் சேரும் என்பதில் எள்ளத்தனையும் சந்தேகமில்லை. தனி மனிதன் கடமையும் ஒரு ஜன சமூகத்தின் கடமையும் அவ்வப்போது நேரிடும் சம்பவங்களை யொட்டி வடிவம் கொள்ளும். நமது வீரர்கள் புரிந்து வரும் சாதனைகளை எண்ணி நம் தோள்கள் பூரிக்கின்றன. அவர்களுக்குத் தேசம் தன் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

பயபீதி கொள்வது எவ்வளவு தவறோ, அதே போல் நமது ராணுவ வெற்றிகளைக் கண்டு அளவுக்கு மீறி மகிழ்ச்சியடைந்து, எதிரியின் பலத்தைக் குறைவாக மதிப்பிட்டு அஜாக்கிரதையாகவோ மெத்தனமாகவோ இருப்பின் அதுவும் தவறாகும். இதனை ஆட்சித் தலைவர்களும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். தேசத்துக்குப் பேராபத்து வந்துவிட்டது என்று கதிகலங்காவிடினும் நாட்டுக்கு எந்த வித அபாயமும் இல்லை என்றும் அசட்டுத் தைரியமாக இருந்துவிடலாகாது. அபாயத்தின் அளவை மிகைப்படுத்தாமலும், குறைவாக மதிப்பிடாமலும் உள்ளபடி உணர்ந்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்; யுத்த காலத் தியாகங்களுக்கு மக்கள் தயாராக வேண்டும்.

பாகிஸ்தானை ஆக்கிரமித்து நமது சுவாதீனத்துக்குள் அடக்கிக் கொள்ளும் எண்ணம் இந்தியாவுக்கு ஒருகாலும் இல்லை. பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்காகவே அந்நாட்டுக்குள் புகுந்து அதன் ராணுவ தளங்களை முற்றுகையிட வேண்டியுள்ளது. இதனை நமது பாதுகாப்பு மந்திரி தெளிவுபடுத்திய போதிலும், அஸ்ஸாம், மேற்கு வங்காளப் பகுதியிலும் யுத்தத்தை விஸ்தரிக்க பாகிஸ்தான் முயலுகிறது. இதன் மூலம் அந்த எல்லையிலுள்ள சீனர்களையும் இந்தியாவுக்கு எதிராக யுத்தத்தில் ஈடுபடுத்த வேண்டுமென்பதே பாகிஸ்தானின் உள்நோக்கம் என்று ராஜதந்திரிகள் கருதுகிறார்கள். இந்த யோசனையில் சீனாவும் கலந்தே இருக்கலாம்.

நமது போர் முயற்சிக்கு மக்கள் பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். எனினும் விவேகத்தை இழந்து வெறித்தனம் காட்டக் கூடாது. பிரச்னையைத் தெளிவாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நாடுகளைக் கண்டனம் செய்வதைக் குறைத்துக் கொள்ள வேண்டும். பாகிஸ்தான் கேட்பது காஷ்மீரைத் தனக்குக் கொடுத்துவிடவேண்டுமென்றல்ல. காஷ்மீர் மக்களின் அபிப்பிராயத்தைக் கேட்டு அந்தப்படி செய்ய வேண்டும் என்றுதான். ஆனபடியால் அந்தக் கோரிக்கையிலும் நியாயமிருப்பதாகப் பல நாடுகள் கருதுகின்றன. அதற்காக அவற்றை நாம் கண்டனம் செய்வதில் பயனில்லை.

ஐ. நா.வின் சர்வ காரியதரிசி ஊ-தாண்ட் அவர்களின் சமாதான முயற்சிக்கு நாம் மதிப்பும் பூரண ஒத்துழைப்பும் தர வேண்டும். அப்படிச் செய்தால் தான் உலகத்தில் நமக்கு நல்ல பெயரும் மதிப்பும் அதன் வழி பலமும் உண்டாகும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப்
பெற்ற
தாயென்று கும்பிடடி —
பாப்பா
— பாரதியார்

ராஜாஜியின் கருத்துக்கள்

நிரமிக்க நமது வீரர்கள் தங்கள் திறமையை நிரூபித்து விட்டனர். மக்களின் பாராட்டுதலும், நன்றியும் அவர்களைச் சேர்கிறது. ஆக்கிரமிப்பாளரை முறியடித்து, எதிரியின் விஷமத்தை ஒருகாலும் பொறுத்துக்கொள்ள முடியாது என்பதை உணர்த்தி வருகிறோம்.

யுத்தம் நீடித்துக் கொண்டே போகக் கூடாது என்பதில் உலக நாடுகள் கவலை கொண்டுள்ளன. ஐ. நா. பாதுகாப்புச் சபையின் போர்நிறுத்தக் கோரிக்கைக்கு இக்கவலையே காரணம். பழைய போர்நிறுத்த எல்லையை மீறிப் பாகிஸ்தான் பிரவேசித்து விட்ட பின்பு, புதிய நிலைகளில் இரு தரப்பும் அப்படியே யுத்தத்தை நிறுத்த வேண்டுமெனில் அது பாகிஸ்தானுக்கு இடம் கொடுப்பதாகவே ஆகும். இச்சிக்கலே உலக நாடுகளின் போர்நிறுத்தக் கோரிக்கைக்கு நாம் இணங்க முடியாதபடி செய்துள்ளது.

ஊதாண்ட் அவர்களும், நல்லெண்ணம் கொண்ட நாடுகளும், ஐ. நா. பாதுகாப்புச் சபையும் கோருகிற போர்நிறுத்த யோசனைக்கு நாம் மதிப்பும் மரியாதையும் தர வேண்டுமெனினும் இதில் ஒரு நிபந்தனை உள்ளடங்கியுள்ளது. பாகிஸ்தான் தனது ராணுவ வீரர்களை ஏவி ஊடுருவல் நிகழ்த்தியது என்பது வெளிப்படை ஒப்புக்கொள்ளப் படாவிடினும், இவ்வுண்மை நிதர்சனமாகி விட்டது. எனவே இப்போது பாகிஸ்தான் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு, இனி இது போன்ற ஊடுருவல்கள் நிகழா என்று வாக்குத் தந்தாலே போர்நிறுத்த உடன்பாடு எதுவும் வலுவாக நிற்கும்.

ஃஃஃ

ஐ. நா. பிரதம காரியதரிசி ஊதாண்ட் அவர்கள் இந்தியாவுக்கு விஜயம் செய்யும் போது, நம்மிடம் மதிப்பும், நம்பிக்கையும் கொண்டு தமது பணியின் வெற்றியை விரும்பும் மக்களிடையே வந்திருக்கிறோம் என்ற உணர்வை அவர் பெறச் செய்ய வேண்டும். நம் நாட்டுப் பத்திரிகைகளும் பொதுமக்களும் அவருக்கு இத்தகைய உணர்வை ஊட்ட முயல்வார்கள் என்று நம்புகிறேன். வாதப் பிரதிவாதங்களைக் கூப்பாடு போட்டு, ஏற்கனவே சிக்கலாகியுள்ள பிரச்னையை மேலும் சிக்கலாக்காமல் இருப்போமாக. போர்—சமாதானம் ஆகிய விஷயங்கள் வெறும் சர்ச்சையும், சட்ட வாதமும் மட்டுமல்ல. கோடிக் கணக்கான மக்களின் உணர்ச்சிகளைப் பக்குவமாகக் கையாள வேண்டிய பிரச்னை இது. மக்களைக் கோபத்தினின்று திருப்பி, அநுதாபம் — சமாதானம் இவற்றில் ஈடுபடச் செய்யும் பிரச்னை இது.

ஒரு தேசத்துக்குரிய கௌரவம் என்ன என்பதையும், அது பெறவேண்டிய நியாயமான உரிமை என்ன என்பதையும் நாட்டின் கௌரவம், நியாயம் இவ்விரண்டையும் எவ்வாறு சமாதானத்துடன் இணைப்பது என்பதையும் ஊதாண்ட் அவர்கள் அறிவார். மதிப்புடனும், கூடியவரையில் மௌனமாகவும் அவரது பணி தடங்கலின்றி நடைபெற உதவி புரிவதே நமக்கு அழகு. பாகிஸ்தான் மக்களிடம் நாம் விரைப்பான மனப்பான்மை பெற்றிருக்கிறோம் என்ற எண்ணத்தை அவருக்கு ஏற்படுத்தாமலிருப்போம். அடிப்படைப் பிரச்னைக்கு முடிவு கட்டுவதற்காக அவர் வரவில்லை என்பதையும் தற்போதைய போரைத் தடுக்க முயலுவதற்காகவே வருகிறார் என்பதையும் நாம் மறக்கலாகாது. எந்த விவகாரத்தையும் நியாயமாகத் தீர்ப்பதற்கு ஆயுத பலத்தை மட்டும் சார்ந்திருப்பதில் பயனில்லை என்பதை அறிவு மிக்க சான்றோர் அனைவருமே பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

ஃஃஃ

மனிதனின் வளர்ச்சியில் யுத்தம் என்பது ஓர் ஆன்மிகமான உதவி புரிகிறது என்று மாஸ் — ஸே — துங் கூறுவதில் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது. பாகிஸ்தானின் துரதிர்ஷ்டவசமான ஆக்கிரமிப்புக்குப் பின் இந்திய மக்களின் ஒழுக்க நெறியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதில் ஐயமேயில்லை.

பாகிஸ்தானின் போக்கைச் சரியான பாதையில் திருப்ப முடியாது என்பதால் சமாதானத்தில் ஆர்வமுள்ள பாரதமும் யுத்த விஸ்தரிப்புக்கு ஆட்பட நேரிட்டு விட்டது. இச்சமயத்தில் யுத்தத்தால் அநேக உயிர்களை இழக்க வேண்டியிருப்பதைக்கண்டு நாமே வருத்தம் கொள்ளக் கூடும். ஆனால் யுத்தம் என்பதன் போக்கே இதுதான் என்று அறிந்தால் நாம் அதிகமான துயர உணர்ச்சிக்கு ஆளாக மாட்டோம்.

பழைய போர்கள் சிலவற்றை நாம் இப்போது நினைவுகொள்வோம். 1915ம் ஆண்டில் ஜெர்மானியர்களை விரட்டுவதற்காக பிரான்ஸ் எடுத்த தீவிரமான யுத்த நடவடிக்கை காரணமாக லட்சத்து நாற்பத்தையாயிரம் பிரெஞ்சு வீரர்கள் உயிர் துறந்தனர்; அல்லது சேதமுற்றனர். இதன் விளைவாக பிரான்ஸ் மூவாயிரம் கெஜங்கள்தான் முன்னேறித் தன் நாட்டுடன் அதைச் சேர்த்துக் கொள்ள முடிந்தது. 1916ம் ஆண்டு முழுவதிலும் வெர்டுன் யுத்தத்தின் வெற்றி—தோல்வி மாறி மாறிச் சாய்ந்துகொண்டேயிருந்தது. இரு தரப்பிலும் சுமார் ஏழரை லட்சம் மக்கள் உயிர் துறந்தனர்; அல்லது சேதமுற்றனர். கடைசியில் போர் முனை என்னவோ முதலில் இருந்த இடத்தை விட்டு எந்தப் பக்கமும் முன்னேறவில்லை. ஸோம்பியில் நடந்த யுத்தம் காரணமாக பிரிட்டிஷ் துருப்புகளில் உயிரிழந்தவர்கள், சேதமுற்றவர்கள் ஆகியோரின் எண்ணிக்கை நாலரை மாதங்களில் மாதத்துக்குச் சுமார் ஒரு லட்சம் என்ற விகிதத்தில் அமைந்தது. முடிவில் முன்னேறிய தூரமோ மைல்கணக்கில் இல்லை; கெஜக் கணக்கில்தான் இருந்தது. 1917ல் மூன்றரை மாதங்களுக்கு நடைபெற்ற மூன்றாவது ஒய்பிரெஸ் யுத்தத்தில் இரண்டரை லட்சம் பிரிட்டிஷ் வீரர்கள் மரணமோ, படுகாயமோ அடைந்தனர். இதன் பயனாக அவர்கள் முன்னேறியது

ஏழே மைல்கள்தான். 1914லிருந்து 1918 வரை நடைபெற்ற முதல் உலகப் போரின் முதல் இரு ஆண்டுகளில் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளின் ஆற்றல் வாய்ந்த இளம் பரம்பரை முழுதும் அடியோடு அழிந்தது என்று சரித்திர நிபுணர்கள் கூறுகிறார்கள்.

* * *

பிரிட்டிஷ் சர்க்காரும், அமெரிக்க அரசாங்கமும் இந்தியாவின் பட்சத்தில் பூரணமாக நிற்கவில்லை என்பதற்காக அவற்றை நம் நாட்டுப் பத்திரிகைகளின் அயல் நாட்டு நிருபர்கள் குற்றம் கூறுகிறார்கள். இது மிகவும் வருந்தத்தக்கது. அந்நாடுகளின் அநுதாபமும், உதவியும்தான் நமக்குத் தேவையேயன்றி நம் கட்சியை அவர்கள் பூரணமாக ஒப்புக் கொள்ள வேண்டும் என்பதல்ல. நம் கட்சியையே அவர்கள் முற்றிலும் ஆதரித்து வெளிப்படப் பேசினால் சமாதானத்துக்கு அவர்கள் பாரபட்சமின்றி உழைக்க முடியாது. இந்தியாவுடன் நட்புக்கொண்டுள்ள நாடுகள் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகத் தங்கள் சக்தியைப் பிரயோகிப்பதற்கு உரிமை பெற்றுள்ளன. புதுதில்லி பார்லிமெண்டில் உள்ள காங்கிரஸ் அங்கத்தினர்கள் போலவே பிரிட்டனும், அமெரிக்காவும் இந்திய சர்க்கார் கூறுவதையெல்லாம் அப்படியே ஒப்புக்கொண்டு உலக அரங்கில் அதற்குச் சாதகமாகத்தான் 'வோட்' அளிக்க வேண்டுமென எதிர்பார்த்தால், அந்த நாடுகள் சமாதானத்துக்காக நேர்மையாக உழைக்கும் நற்பெயரை இழக்க நேரிடும். நம்மிடம் குற்றமில்லை என்பதைப் பற்றி நமக்கே உறுதி ஏற்படவேண்டியதுதான் அவசியம். நம்மிடம் நட்புக் கொண்ட மற்ற நாடுகளின் நற்சான்றை நாம் நாடுவதில் பொருளில்லை. அப்படி ஏதேனும் ஒரு நாடு நம்மைப் பாராட்டி விட்டதெனில் அதற்காக ஓரேயடியாக மகிழ்ச்சி யடைவதிலும் அர்த்தமில்லை. பிறரது நற்சான்றுகளைப் பெற வேண்டும் என்பதில் நமது விசாரத்தைக் காட்டிக் கொள்வதை விட நட்பு நாடுகள் தங்கள் விவேகத்தைச் சுதந்திரமாகச் செலுத்தி முடிவுகள் காண அநுமதிப்பதே அழகு.

* * *

உளவாளிகளின் ஊடுருவல் பற்றிப் பொதுமக்களுக்கு எச்சரிப்பது நல்லது. அவர்களை உடனடியாகப் பிடிப்பதற்கு மக்களின் உதவியைக் கோருவதும் சரி. சில இடங்களில் இந்த நடவடிக்கை மிகவும் அவசியமாகும். ஆனால் மற்ற இடங்களிலும் இந்த எச்சரிக்கையை மிகைப்படுத்துவதால் மக்கள் அவசியமின்றிப் பரபரப்பு அடைவார்கள். அல்லது மற்றவர்களைப் பரபரப்பு அடையுமாறு தூண்டி விடுவார்கள். 'எதிரி'களைப் பிடித்துத் தரவேண்டும் என்ற ஆர்வம் தீவிரமாகி விட்டால், ஹிந்து முஸ்லிம்களிடையே மோதல் ஏற்படக் கூடும். ஏனெனில் 'எதிரி' என்ற பதப் பிரயோகம் மிகவும் கவனமாகச் செய்யப்பட்டாலன்றி, முஸ்லிம் மக்களை எல்லாம் ஹிந்துக்கள் தவறாக நினைக்கக்கூடும். இதனால் எச்சரிக்கையைப் பெறும் மக்கள் சர்க்காரின் சிரமத்தைத் தீர்ப்பதற்குப் பதில் அதிகமாக்கி விடுவார்கள். இந்தியாவிலுள்ள பிரத்தியேகமான சமூக அமைப்புக் காரணமாக, இங்கு நாட்டுப் பற்றும், யுத்த கோஷமும் மிகவும் உஷாராக, பக்குவமாகக் கையாளப்பட வேண்டியவையாகும்.

இதுவரை மோதல்கள் ஏதும் ஏற்படாமல் நல்லபடியாக உள்நாட்டு விவகாரங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்தியா–பாகிஸ்தான் போர் தீரும்வரையில் இதே நிலை நீடிக்குமாக. நான் மேலே கூறிய அபாயத்தைத்தான் பாகிஸ்தான் சர்க்கார் எதிர்பார்க்கிறது எனலாம்.

* * *

ரேஷன் முறை வருவதால் மக்கள் பண்டத்தைச் சிக்கனமாக உபயோகிப்பார்கள் என்று எண்ணப் படுகிறது. இது தவறு. புதிர் போலத் தோன்றினாலும், ரேஷன் முறை வந்தாலே மக்கள் வாங்கும் அளவும் உயரும். ஏனெனில் ரேஷன் வந்தவுடன் ஆபத்துக் காலம் வந்து விட்டது என்று கருதி, மக்கள் தாங்கள் நிகழ்காலத்தில் உபயோகிப்பதற்காக வாங்குவதோடு, வருங்காலத்துக்காக நிறையச் சேர்த்து வைத்துக்கொள்ளவும் முற்படுவார்கள். தட்டுப்பாட்டுப் பயமே சேமிப்புக்கு ஒரு தூண்டுகோலாகும். எனவே ரேஷன் வருவதால் மக்கள் வாங்குவது குறையும் என்றோ, கையிருப்பு உயரும் என்று எதிர்பார்ப்பதோ பலிக்காது. பொதுச் செலவு உயர்ந்து, சில வர்க்கத்தைச் சேர்ந்தார்க்கு உத்தியோகம் கிடைப்பதற்கே ரேஷன் உதவும். ஆனால் பிற்பாடு 'ஆட் குறைப்பு' செய்யும்போது இப்போது வேலை பெற்றவர்கள் புதுப் பிரச்னையை உண்டாக்குவார்கள்.

* * *

மதத்துக்காகச் செய்யப்படும் நன்கொடைகளுக்கு வரி விலக்குக் கிடையாது என நிதி மந்திரி முடிவு செய்து விட்டார். இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு என்பதால் இவ்வாறு அவர் முடிவெடுத்திருப்பது சற்றும் தகாது. 'மதச் சார்பற்ற' (Secular) நாடு என்று இந்தியாவைச் சாஸனம் குறிப்பிடுவதன் உட்பொருள் அது எந்தத் தனியொரு மதத்துக்கு மட்டும் ஊக்கமளிக்காது என்பதுதான். எல்லா மதங்களும் ஒரே இலட்சியத்தை அடைய உதவும் பல பாதைகளே என்ற ஹிந்து மதக் கொள்கையைத் தான் அரசாங்கத்தின் 'மதச் சார்பின்மை' குறிப்பிடும். மத நோக்கங்களைப் புறக்கணிக்க வேண்டும் என்பது அதன் அர்த்தமல்ல. மக்களின் நியாயமான மத உணர்வைச் சிதைப்பதுதான் சர்க்காரின் 'மதச் சார்பின்மை' என்றால் காந்திஜி இதற்கு ஒப்புதல் அளித்தே இருக்க மாட்டார். எல்லா மதங்களுக்கும் சமமாக ஊக்கமளிக்க வேண்டுமென்பதுதான் சாஸனத்தின் கருத்து.

மதங்களை யெல்லாம் புறக்கணிப்பது எனில் தான தருமங்கள் அவ்வளவையுமே நசிக்கச் செய்வதில்தான் இது முடியும். இந்தச் சமய விரோதமான 'மதச் சார்பின்மை'யை காந்திஜி ஒரு நாளும் அங்கீகரித்திருக்க மாட்டார்.

வணக்கத்துடன் வரவேற்கிறோம்

பெருமை வாய்ந்த சிருங்ககிரி பீடத்தில் எழுந்தருளியுள்ள ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த சங்கராச்சாரிய ஸ்வாமிகள் சென்னையம்பதிக்கு விஜயம் செய்து கோலாகலமான நவராத்திரி பூஜையை இங்கு நடத்துகிறார்கள். அதைத் தொடர்ந்தே ஸ்வாமிகளின் ஜன்ம தினமும் நிகழ்கிறது. இத்திருநாட்களை யொட்டி அற்புதமான வேள்விகள் நடக்கவிருக்கின்றன. இவற்றைக் காணக் கொடுத்து வைத்திருப்பது சென்னை மக்களுக்கு ஒரு பாக்கியமாகும்.

ஸ்ரீ சிருங்ககிரி ஆசாரிய ஸ்வாமிகள் தினந்தோறும் புரிகிற மகா மந்திர ஜபங்களும், அவர் வழங்கும் உபதேசங்களும், அவரது ஆதரவில் நடைபெறும் வைதிகப் பணிகளும் நம் நாட்டுக்கு ஸ்தூலமாகவும் சூட்சுமமாகவும் பெரும் பலன் அளித்துள்ளன. முன்பு சீனாவின் கடும் ஆக்கிரமிப்பு நேர்ந்த சமயத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆணைப்படி அற்புதமான ஸஹஸ்ரசண்டி யக்ஞம் நிறைவேறியது. ஆக்கிரமிப்பின் கடுமையும் எவ்வாறோ குறைந்தது. புதியதொரு போர் உக்கிரமாகி வரும் தற்போது சென்னையில் அவர்கள் தங்கும் போது இங்கு நடக்கவிருக்கும் வேள்விகளும் அவ்வாறே புறத்துக்கும் அகத்துக்கும் நலன் பயக்கும் என்று நம்புகிறோம். ஜகத்குரு ஸ்ரீ சிருங்ககிரி பீடாதிபதிகளைச் சென்னை மக்களின் சார்பில் வணங்கி நல்வரவு கூறுகிறோம்.

என்ன சேதி?

எது ஒழுக்கக் குறைவு?

நமது அரசியல் சாஸனப் பகுதி ஒன்றின் 'டைப்' பிரதி ஒருவரிடம் இருக்குமாயின் அது அவருக்குச் சொந்தமான ஒரு பொருள். தம்முடைய அந்த நகலை அவர் பகிரங்கமாகக் கொளுத்துவது ஒழுக்கக் குறைவைக் காட்டும் என்று நீதிபதி கே. ஸ்ரீனிவாசன் அவர்கள் சமீபத்தில் தீர்ப்புக் கூறியுள்ளார். சாஸனத்தின் ஆட்சிமொழிப் பகுதியின் 'டைப்' பிரதியைக் கொளுத்திய ஒருவரை ஒழுக்கக் குறைவுள்ளவராகக் கருதி, எனவே அவர் பஞ்சாயத்துக்குத் தேர்வு செய்யப்படத் தகுதியற்றவர் என இத்தீர்ப்புக் கூறுகிறது. இவ்விஷயமாக நீதிபதி அவர்களுக்குச் சிறிது சந்தேகம் இருந்திருக்கலாமெனத் தோன்றுகிறது. எனினும் அவர் சந்தேகத்தின் பலனைச் சர்க்காருக்கு அளித்திருக்கிறார். இம்முடிவு சரிதானா என்று கேட்கத் தோன்றுகிறது.

முன்பு அசாதாரணமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்த பல நடவடிக்கைகள் காலக்கிரமத்தில் சகஜமாகவும் உப்புச் சப்பற்றதாகவும் ஆகியுள்ளன. உதாரணம்: சட்ட சபைகளில் நடக்கும் 'வாக் அவுட்' (வெளி நடப்பு)கள். இவை யாவும் எதிர்ப்பைத் தெரிவிக்கும் பகிரங்க அரசியல் நடவடிக்கைகள் தாமேயன்றி, இவற்றை ஒழுக்கக் குறைவான செயல்களாகக் கருதுவது தவறு என்றே தோன்றுகிறது.

'திருத்தம்' என்ற பெயரில், அரசியல் சாஸனத்தில் 'ஜீவாதாரமானவை' என்று கூறப்பட்ட ஷரத்துக்களின் தானிய மணியை எறிந்துவிட்டு, தவிட்டை மட்டுமே விட்டு வைத்துள்ள நிலையில் ஒருவர் தமக்குச் சொந்தமான ஒரு சாஸனப் பிரதியை எரிப்பது சாஸனத்தை அவமதிப்பதாகும் என்று கருதுவது மூட நம்பிக்கைக்கு ஒப்பாகும். ஒருவரை நேரடியாகத் தாக்கலாம்; ஆனால் அவருடைய படத்தைக் கொளுத்துவது கூடாது என்பது போன்றதே இது.

சபாஷ், சுதந்திரக் கட்சி!

சென்னை ஜில்லா சுதந்திரக் கட்சி அங்கத்தினர்கள் ஒரு நல்ல காரியம் செய்திருக்கிறார்கள். ஆட்சி மொழி விஷயமாகப் பொதுமக்களின் அபிப்பிராயத்தை நேரடியாகக் கண்டறியச் சென்னை எழும்பூர் பகுதியில் 60 தொண்டர்கள் 4 அல்லது 5 பேர் கொண்ட குழுக்களாகப் பிரிந்து வீடுதோறும் சென்று, வாக்காளர்களிடம் 'ஆங்கிலம்', 'படிப்படியாக ஹிந்தி' என்று குறிக்கும் இரு வாக்குச் சீட்டுகளை வழங்கி அவர்கள் கருத்தைத் தெரிவிக்கச் சொன்னார்கள். 2449 வாக்குச் சீட்டுகள் வழங்கப்பட்டன. அவற்றில் 2221 பேர்கள் ஆங்கிலத்துக்கு ஆதரவாக வாக்களித்திருக்கிறார்கள். 215 பேர்கள் சர்க்கார் நிலைக்கு ஆதரவாக வாக்களித்திருக்கிறார்கள். 13 வாக்குகள் செல்லுபடியாகாதவை. ஒரு பானைச் சோறுக்கு ஒரு சோறு போதுமல்லவா? தமிழகத்தின் ஒரு சிறு பகுதியாயினும் ஆங்கிலத்துக்குக் கிடைத்துள்ள அமோக ஆதரவு தமிழகத்தின் கருத்தைச் சந்தேகத்துக்கு இடமின்றித் தெரிவித்து விட்டது எனலாம்.

வரதன் திருப்பணி

திருச்சி மாவட்டம், முசிறி தாலுகாவைச் சேர்ந்த வெள்ளூர்க் கிராமத்தில் ஸ்ரீ வரதராஜப் பெருமாளுக்கு ஓர் ஆலயம் உள்ளது. வருகிற உத்தராயணத்துக்குள்ளேயே இத்திருக்கோயிலை ஜீர்ணோத்தாரணம் செய்யச் சில அன்பர்கள் முயற்சி எடுத்து வருகின்றனர். இத்திருப்பணியில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் ஸ்ரீ வி. எஸ். ராமரத்தினம், சி-51, நாலாவது க்ராஸ் ரோடு, தில்லை நகர், திருச்சி என்ற விலாசத்துக்குப் பொருளுதவி அனுப்பி வைக்க வேண்டும்.

சென்னைக்கு விஜயம் செய்யும் சிருங்கேரி சாரதா பீடாதிபதிகளின் திருவுருவப் படத்தை இவ்விதழ் அட்டையில் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி யடைகிறோம்.

— ஆசிரியர்.

ஸ்ரீ சிருங்கேரி பீடாதிபதிகள்

பேராசிரியர் கே. ஆர். ஆர். சாஸ்திரி

1861ம் வருஷத்துக்கு முன் கம்பெனியாருக்கு ஹிந்து சட்டங்கள் சம்பந்தமான விஷயங்களுக்கு ஸ்மிருதியிலும், தர்ம சாஸ்திரத்திலும் வல்லவரான தர்ம சாஸ்திரி என்பவர் யோசனை கூறி வந்தார். இவ்வாறே மைசூர் அதாலத்து கோர்ட்டில் கைபு சீதாராம சாஸ்திரி என்பவர் நீதிபதியாயிருந்தார். அவரது கொள்ளுப் பேரர் கைபு ராமா சாஸ்திரி. அவருக்கு நள வருஷம் தீபாவளியன்று (நவம்பர் 13, 1917) சுவாதி நட்சத்திரத்தில் ஸ்ரீநிவாசன் என்ற புதல்வன் பிறந்தான்.

ஸ்ரீநிவாஸன் பாலியப் பருவத்திலேயே பஜனையிலும் பூஜையிலும் புராண பிரவசனத்திலும் ஈடுபட்டிருந்தான்.

சதா காலமும் அந்தர்த்தியானத்திலேயே ஈடுபட்டிருந்த 34வது சிருங்கேரி பீடாதிபதிகளான ஸ்ரீ சந்திரசேகர பாரதீ சுவாமிகள் இந்தப் பாலனைத் தம் தபோபலத்தால் அறிந்து, பங்களூரில் படித்தவரைச் சிருங்கேரிக்கு வரவழைத்து, ஸ்ரீ சாராதாம்பாள் சந்நிதியில் உபநயனம் நடக்க ஏற்பாடு செய்தார்.

1931, மேமாதம் 22ந்தேதி பிரம்மச்சாரி ஸ்ரீநிவாசனுக்கு ஸ்ரீ அபிநவவித்யா தீர்த்தர் என்ற தீக்ஷாநாமத்துடன் சந்நியாச ஆச்ரமம் கொடுத்தார், ஸ்ரீ சந்திரசேகர பாரதி ஸ்வாமிகள். 1931 முதல் 1954 செப்டம்பர் 26 வரை, அதாவது மஹான் ஸ்ரீ ஜகத்குரு சந்திரசேகர பாரதிகள் ஜலசமாதி அடையும் வரை சிருங்ககிரி பீடம் இந்த இரண்டு தவயோகிகளின் மேற்பார்வையில் சோபித்தது.

1954, அக்டோபர் 15ந் தேதியன்று ஸ்ரீ அபிநவ வித்தியார்தீர்த்தரின் பீடாரோகண பட்டாபிஷேகம் வெகு விமரிசையாக நடந்தது.

குருவின் மகிமையை உரைப்பது பகவானின் பெருமையைச் சொல்லி வணங்குவதேயாகும். மகிமை பொருந்திய ஆஸ்திகப் பணி புரிந்து வரும் ஸ்ரீ சிருங்கேரி ஸ்வாமிகள் தமிழ்நாடு ஆந்திர தேசம் முதலிய இடங்களெல்லாம் சென்று, பக்தகோடிகளைத் தமது திவ்விய சாரதா, சந்திர மௌளீசுவர பூஜையாலும், உபதேசத்தாலும் கவர்ந்திருக்கிறார். தமது தீவிர ஆலோசனையால் ஸ்ரீமடத்தின் நிர்வாகங்களையும் சிறப்பாக மேற்பார்வையிட்டு வருகிறார்.

அவர்கள் அதிகாலையில் எழுந்து ஆன்ஹிகங்களை முடித்துத் தவமுனியாக விளங்கும்பொழுது கண்டால் நம் மனத்தில் சாந்தி நிலவும். சுக்கிரவாரத்தன்று ஸ்ரீ சக்கிர பூஜையையும், சந்திர மௌளீசுவர பூஜையையும், மாசு மறுவற்ற புஷ்பங்களால் வேதகோஷங்களுக்கிடையில் புரிந்துவிட்டு, அவர்கள் மனத்தைச் சிவசக்தியின்பால் பறி கொடுத்துத் தியானம் செய்யும் காட்சியை விநயத்துடன் கவனித்தால் நாமும் நமது பூஜையை இறைவனுடன் ஒன்றியிருக்கும், ''ஸோஹம்'' பாவத்தில் செய்ய முடியும்.

சாதுர் மாஸ்யத்தில் நரசிம்ம தபோவனத்தில் ஆச்சாரிய புருஷரைத் தரிசித்தால் வாய்மையும் தூய்மையும் நம்மை நாடி ஓடி வரும்.

ஸ்ரீ சிருங்கேரி ஆச்சாரியாள் தமது சம்ஸ்கிருத ஞானத்தையும் பரிபாகத்தையும் பண்டிதரும் வியக்கும் வண்ணம் அமைதியாகத் தெரிவிக்கிறார். ஹிந்தியில் வெகு சரளமாகப் பேசுகிறார்:

ஸ்ரீமடத்துக்கு ஹரித்வாரம், காசி, கல்கத்தா, பிரயாகை, நாசிக் முதலிய இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் இருப்பதால் அவைகளின் பராமரிப்பில் ஸ்ரீ மகா சந்நிதானத்துக்கு வெகு ஊக்கமுண்டு.

இம்மகான் சென்னையம்பதிக்கு மறுபடியும் ஸ்ரீ சாரதா நவராத்திரிக்கு வருகிறார். ஸ்ரீசங்கர மடங்களெல்லாம் அத்வைதத்துக்குகந்த ஸ்தாபனங்களானதால், சிருங்கேரியில் நூறு பிரம்மசாரிகளுக்கு மேல் சாஸ்திர பாடம் நடக்கிறது. வெகு வருஷங்களாகவே சிருங்கேரி பள்ளிக்கூடத்து ஏழை மாணவர்களுக்கு மத்தியான அன்னதானம் நடந்து வருகிறது.

ஸ்ரீ சாரதாம்பாள் சதாகாலமும் ஸ்ரீ சங்கராசாரியாருடன் இருப்பதால் நவராத்திரியில் தரிசனம் செய்து பராசக்தியின் விசேஷ அனுக்கிரகத்துக்குப் பாத்திரர்களாவோம். ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குருவை வணங்கிப் போற்றுவோம்.

ஸ்ரீ குருப்யோ நம:

சர்க்கரை கசக்குமா?



சர்க்கரை இனிப்பானதுதான். என்றாலும் சிலருக்கு அது கசப்பாகத்தான் தோன்றுகிறது. உடம்பில் 'பிளட் சுகர்' என்னும் இந்த 'பிளட் சுகரை' சக்தியாக மாற்றுவதற்கு உடலில் போதுமான அளவு இன்சுலின் இல்லாதபோது நீரிழிவு நோய் வருகிறது. நீரிழிவு எவருக்கும் வரலாம். ஒரு குடும்பத்தில், பாட்டனுக்கோ தந்தைக்கோ இருந்தால் மற்றவர்களுக்கும் இது பெருக வாய்ப்புண்டு. சிறுநீரைச் சோதித்துப் பார்ப்பதன் மூலம், இவருக்கு நீரிழிவு இருக்கிறதா இல்லையா என்பதை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து விடலாம். நடுவயதினருக்கும் அதைத் தாண்டியவர்களுக்கும், சிறுநீரில் சர்க்கரையின் அறிகுறி அதிக அளவு தென்பட்டாலும் 'குளுகோஸ்-டாலரென்ஸ்' சோதனையை மேற்கொள்வது சிறந்தது. உங்கள் நீரிழிவு நோயினால் தொல்லைப்பட்டால், புரதச்சத்து நிறைந்தும் கொழுப்பு குறைந்தும் உள்ள உணவை உண்ணவும், சர்க்கரையை நேரடியாக உபயோகிப்பதற்குப் பதிலாக சர்க்கரைச் சேர்க்கையுள்ளவற்றையே உபயோகிக்கவும். நீங்கள் எடுத்துக்கொள்ளும் மாவுப்பொருட்களின் அளவு குறைந்த அளவிலேயே இருக்கட்டும். நீரிழிவு இருப்பினும், முறையான கவனத்தோடு இருந்தால் பிறரைப்போல் வாழ்க்கை நடத்த இயலும்.

நீரிழிவினின்று உங்களைக் காத்துக்கொள்ள கீழ்க்கண்டவற்றைக் கத்திரித்து வைத்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு உதவும்.

அறிகுறிகள்	சிகிச்சை	முன்னெச்சரிக்கைகள்
அதிக வறட்சி. அதிகப் பசி. எடை பெருமளவில் கூடுவதோ-குறைவதோ. அடிக்கடி சிறுநீர் வெளியாதல். தோலில் கட்டி போன்ற வியாதிகள் அடிக்கடி வருதல். பொதுவான பலவீனம்.	புரதச்சத்து நிறைந்தும் மாவுப்பொருட்கள் குறைந்தும் உள்ள உணவை உண்ணவும். சர்க்கரையை நேரடியாக உபயோகிப்பதற்குப் பதிலாக சர்க்கரைச் சேர்க்கையுள்ள பொருட்களையே உபயோகிக்கவும்.	நீரிழிவுக்கு தொற்றுநோயைத் தடுக்கும் சக்தி குறைவு. தொற்றுநோய் வராமல் தடுத்துக்கொள்ள சாதாரண எச்சரிக்கைகளை மேற்கொள்ளவும். இருப்பிட அளவு எப்பொழுதுமே சுத்தமாக இருக்கட்டும். சிறுசிறு காயங்களை குறிப்பாக காலில் வருபவற்றை உடனுக்குடன் குணப்படுத்திக்கொள்ளுங்கள். மருந்துகளினாலோ, இன்சுலின் இன்ஜெக்ஷன்களினாலோ உபயோகித்து சிறுநீரிலுள்ள சர்க்கரையைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும். இன்சுலின் இன்ஜெக்ஷனை எடுத்துக்கொள்ளும் போது சிரிஞ்சையும் ஊசியையும் நன்றாகக் கழுவவும்.


முதல் அறிகுறி தோன்றியவுடனேயே உங்கள் மருத்துவரைக் கலந்தாலோசியுங்கள்

வாழ்க்கை ஒப்பற்றது. அதனைக் காப்பீர்
ஆயுள் இன்சூரன்ஸ் மூலம்

ASP-LIC-4D-10

கத்திமுனையில் கல்யாணம்!

மொராக்கோவில் உள்ள காபிலில் என்ற சாதியா ரிடம் தாலி கட்டுவதற்குப் பதில், மணப் பெண்ணின் தொண்டையில் அவர்கள் மதகுரு இலேசாகக் கத்தியால் காயப்படுத்துவாராம். ரத்தத் துளிகள் சிந்தினதும் அவள் குறித்தவனை மணந்தவ ளாகக் கருதப்படுவாள். - பி. வி. ஜி



காரணம்

கோயிலிலே உள்ள தெய்வத்தின் சிலை முன்னால் நின்று கொண்டு, தன் கோரிக்கைகளை, ஒவ்வொன்றாகக் கூறியபடி, அவைகளை நிறைவேற்றித் தருமாறு வேண்டிக் கொண்டிருந்தான் ஒருவன். சிலை பேசவில்லை.

''என்ன, நான் சொல்வது காதில் விழவில்லையா?'' என்றான் அவன் ஆத்திரத்தோடு.

''உயிரோடு நிற்கும் உங்கள் காதிலேயே இந்த ஏழையின் வேண்டுதல் விழாதபோது, சிலையாய் இருக்கும் தெய்வத்தின் காதில் மட்டும் எப்படி விழுந்துவிட முடியும்?'' இப்படிக் கேட்டது, பக்கத்திலிருந்து ஒரு குரல்.

திரும்பிப் பார்த்தான்; மெலிந்த பிச்சைக்காரனின் உருவம் ஒன்று. அவ்விடத்தைவிட்டு மெல்ல மெல்ல அப்பால் நகர்ந்து போய்க் கொண்டிருப்பது தெரிந்தது! - தமிழழகன்



தென்றல் - காற்று - புயல் - சூறாவளி இவற்றின் வேகம் என்ன?

- தென்றல் மணிக்குச் சுமார் ஆறு மைல் வேகத்தில் வீசும்; சாதாரணக் காற்று மணிக்குச் சுமார் பன்னிரண்டு மைல் வேகத்தில் வீசும்; கடுமையான காற்று மணிக்குச் சுமார் இருபது மைல் வேகத்திலும், புயல் சுமார் நாற்பது மைல் வேகத்திலும் சூறாவளி சுமார் அறுபது மைல் வேகத்திலும் வீசும்.

- இரவில் சாதாரணமாக ஒருவரது பார்வைக்குச் சுமார் ஆயிரம் நட்சத்திரங்கள் தென்படும். சக்திவாய்ந்த காமிராவினால் ஆகாயத்தைப் படம் பிடித்தால் அதில் ஏறக்குறைய ஆறு லட்சம் நட்சத்திரங்கள் விழும்.



- கடற்கரையிலிருந்து அடிவானத்தை நாம் பார்க்கும்போது கடற் பரப்பில் சுமார் மூன்று மைல் தூரம் நமது பார்வையில் விழும். நூறு அடி உயரம் ஏறிப் பார்த்தால் கடற்பரப்பில் சுமார் பதின்மூன்று மைல் தூரத்தை நம்மால் பார்க்க முடியும்.



- நம்மிடையே வழக்கிலுள்ள அரேபிய எண்கள் அரேபியாவில் கண்டு பிடிக்கப்பட்டவை அல்ல. அவற்றைக் கண்டுபிடித்தவர்கள் நம் இந்தியரே.

- நிர்மலமான வானத்தில் திடீரென்று கருமேகங்கள் குவிந்து, இடி இடித்து மழை பெய்தால் அந்த இடிகளால் ஆபத்து இருக்காது. வெகுநேரம் வானம் மப்பும், மந்தாரமுமாக இருந்து, கருமேகங்கள் குவிந்து, தூறலில் ஆரம்பித்து, வர வர மழை அதிகரிக்கும்போது ஏற்படும் இடிமின்னல்தான் ஆபத்து அதிகம். கருமேகங்களின் குவியல் வானத்தில் அதிக நேரம் தங்கினால் அவற்றின் அழுத்த சக்தி அதிகமாகி இடியும் சக்தி வாய்ந்ததாகிறது. அதனால் ஆபத்தும் அதிகரிக்கிறது.



பல்சுவைப் பக்கம் 2

ஏழின் மகாத்மியம் !



சமையல் நினைவுகள்

இவான் ஜோன்ஸ் தம் மனைவி மே ஜோன்ஸிடமிருந்து விவாக ரத்து கோரி, வழக்குத் தொடர்ந்திருந்தார். மீண்டும் கணவனும் மனைவியுமாக இருவரையும் வாழச் செய்ய நீதிபதி செய்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. எனவே விவாகபந்தத்திலிருந்து அவர்களுக்கு விடுதலை கொடுத்துத் தீர்ப்பு வழங்கினார் ஜட்ஜ் துரை.

தீர்ப்பும் பெற்றுக் கொண்டு, நீதிமன்றத்தின் வாசலுக்கு வந்த இவான், தமக்கு முன்னே சென்றுகொண் டிருந்த தம் முன்னாள் மனைவியைப் பார்த்தார். முன்னர் அறுசுவையோடு அவள் தயாரித்துத் தந்த உணவு வகைகள் அவர் நினைவுக்கு வந்தன.

'மே! ' என்று மெதுவாகக் கூப்பிட்டார்.

அவள் திரும்பினாள்.

'அருமையாகச் சமைத்துப் போட்டாய். சாப்பாட்டுக்கு இனி எங்கெல்லாம் திண்டாட வேண்டுமோ?' என்று பெருமூச்சு விட்டார்.

'நானும் இனி ஏதேனும் வேலை தேட வேண்டியதுதானே, வயிற்றுப்பாட்டுக்கு?' அவளும் பெருமூச்செறிந்தாள்.

'சாப்பாடு போக வாரம் முப்பது டாலர்! சமையல் வேலையை நீயே ஏற்றுக் கொள்' என்று முடித்தார் இவான்.

அங்கேயே ஓர் ஒப்பந்தத்தை எழுதிக்கொண்டு வீடு திரும்பினார் இருவரும்.

மனைவி போனால் என்ன; அருமையான சமையல்காரி கிடைத்து விட்டாளே !

எதுவும் நடக்கும் அமெரிக்காவில் இல்லினாய்ஸ் மாகாணத்தில் நிகழ்ந்த சம்பவம் இது! - பாருக்


கீழ் உலகம் ஏழு. மேல் உலகம் ஏழு: பதினான்கு லோகமென்று சொல்வதைக் காட்டிலும், ஈரேழு பதினான்கு லோகமென அழைப்பதில் ஏழு பெற்றுள்ள விசேஷத் தன்மை விளங்கவில்லையா? கருணைக் கடலான கடவுள் கடல்களை, உப்புக் கடல், கருப்பஞ்சாற்றுக் கடல், கள் கடல், நெய்க் கடல், தயிர்க் கடல், பாற்கடல், நன்னீர்க் கடல் என சப்த சமுத்திரங்களாகப் படைத்துள்ளார்.

நாம் போற்றி வழிபடும் புண்ணிய நதிகளைத்தான் எடுத்துக் கொள்வோமே! கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதை காவேரி, குமரி, கோதாவரி என்று ஏழுதான்! புண்ணிய நதிகள் மட்டுமா? புண்ணிய க்ஷேத்திரங்களும் ஏழுதான்! அவை: அயோத்தி, மதுராபுரி, மாயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்பவையே. முக்தி தரும் நகரங்களை விடுத்து, முற்றும் துறந்த முனிபுங்கவர்களைத்தான் எண்ணிப் பார்ப்போமே! அகத்தியன், புலத்தியன், அங்கிரஸ், கௌதமன், வசிட்டன், காசிபன், மார்க்கண்டேயன் என்னும் இவர்தாம் ஏழு ரிஷிகள் என வேதங்கள் கோஷிக்கின்றன. 'சகரன், காரி, நளன், துந்துமாரி, நிருதி, செம்பியன், விராடன், — வரையின்றி வாரி வழங்கிய தலைவள்ளல் ஏழுவர் என்பதை அறியாதவர் யாரே!

'ஏழிசை வல்லபி' என்ற பட்டத்தைப் பிரமுகர்கள் அளிக்கக் கண்டிருக்கிறோம். ஏழிசையாவன: குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன. ஏழிசைக்கு அடிப்படையான தாளங்களின் வகையும் ஏழே! துருவ தாளம், அட தாளம், ஏகதாளம், திரிபுடை, ரூபகம், ஜம்பை, மட்டியம். இவையன்றி ஏழு அளவைகள், ஏழு மூடி, ஏழு முரசு, ஏழு உலோகங்கள், ஏழு அவஸ்தைகள், ஏழு வகை பிறப்புகள், ஏழு வகையான பெண் பருவங்கள் முதலியன ஏழு என்கிற எண்ணின் சிறப்பைத்தானே எடுத்துக் காட்டுகின்றன?

'உலகத்தின் ஏழு அதிசயங்கள்' என்ற வாசகம் ஏழின் ஏற்றத்தையே பறைசாற்றுகிறது! அதிசயமான ஒன்றைச் செய்ததாக எவனாவது பெருமைப்பட்டுக் கொண்டால் அவனைச் சுட்டி 'உலகத்தின் எட்டாவது அதிசயம்' என்று மட்டம் தட்டுகிறோம்.

ஏழின் மகிமையை முற்றிலும் உணர்ந்தவர்கள் தமிழ் சினிமா அதிபர்கள்தாம். எட்டெழுத்துப் பெயரில் படத்தை வெளியிட்டால் போட்ட பணத்தைத் திரும்பப் பெற முடியாமல், படம் 'பப்பட'மாகிவிடும் என்ற பயத்தில் கடைசி நிமிஷத்தில் படத்தின் பெயரை 'ஏழு' எழுத்தாக மாற்றி விடுவார்கள்! 'ஏழு'மலையானுக்கு எதிரே சப்தநாடிகளும் ஒடுங்க நிற்கும் பக்தர்களை நாம் கண்டிருக்கிறோம். உலகில் ஏழு பெற்றுள்ள முக்கியத்துவத்துக்கு எல்லை ஏது? — ஜயா



பல்சுவைப் பக்கம் 3

கடக்கட!

அமெரிக்காவில் உள்ள ஒரு நகரில் காலை 7-35 மணிக்கு ஒரு மரத்தை வெட்டினார்கள். பின்பு அதைக் கூழாக்கி, 9-35க்குள்ளாக அச்சுக் கேற்ற காகிதமாக்கினார்கள். பத்து மணிக்கு அது ஒரு பத்திரிகையாகிவிட்டது. அந்தத் தெருவிலுள்ள பத்திரிகைப் பையன்கள் சரியாக 2-25க்கு அதை விற்றுக் கொண்டிருந்தார்கள்.



"உங்க வீட்டிலே எல்லாமே பெண் மூட்டைப்பூச்சிகளாக இருக்கே!"
"பெண் மூட்டைப்பூச்சிகளா?!"
"ஆமாம்! எல்லாம் காதைக் கடிக்கிறதே!"

உருப்படியான காரியம்!

ஒரு கமிட்டி ஒழுங்கானதாக அமைய அதில் மூன்றே பேர் இருக்க வேண்டும். அது உருப்படியான செயல் ஏதாவது செய்ய வேண்டுமானால் ஒருவருக்குக் காய்ச்சலாக இருந்து, இன்னொருவர் வெளியூருக்குப் போய்விட வேண்டும்!

- இரா. சண்முகம்

ஒரு சமயம் பிரிட்டிஷ் பத்திரிகையாளர் ஒருவர் டில்லி அசோகா ஹோட்டலுக்கு விஜயம் செய்தார். ஹோட்டல் 'பாரி'ல் ஐரோப்பியர்களுடன் சர்வ சகஜமாக விஸ்கி அருந்திக் கொண்டிருக்கும் இந்தியர்களைக் காண அவருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. தமது இந்திய நண்பரை 'பார்' ஒன்றுக்கு எப்படிக் கூப்பிடுவது, கூப்பிட்டால் தவறாக நினைத்துக் கொள்ளாமல் வருவாரா என்று வெகு நாட்களாக அவர் தயங்கிக்கொண்டிருந்தார். இப்பொழுது தைரியமாக அன்று மாலை தம்முடன் 'பாரி'ல் வந்து சேர்ந்து கொள்ளுமாறு நண்பரை அழைத்தார். அந்த நண்பரும் மறுக்காமல் வந்து சேர்ந்தார். இரு விஸ்கி சோடாவுக்கு ஆர்டர் கொடுத்துவிட்டு இருவரும் பேசிக்கொண்டிருந்தனர்.

'பாரி'ல் மது வழங்குபவர், "குறுக்கிட்டதற்கு மன்னியுங்கள். தங்களது நண்பர் இந்தியர்தானா என்று அறிய ஆசைப்படுகிறேன்!" என்று ஆங்கிலேயரிடம் வினவினார்.

ஆங்கிலேயர் திகைத்தார். உடனே இந்திய நண்பர் சட்டென்று "ஆமாம், ஏன் பார்த்தால் தெரியவில்லையா?" என்றார்.


"அப்படியென்றால் தங்களுக்கு விஸ்கி சப்ளை செய்யமுடியாமைக்கு வருந்துகிறோம்."

"என்ன? நீங்கள் சொல்வது புரியவில்லையே? இதோ இத்தனை இந்தியர்கள், மது அருந்திக் கொண்டிருப்பது உங்கள் கண்ணில் தென்படவில்லையா?"

"உண்மை, சார்! உங்களிடம் கேட்ட மாதிரியே அவர்களிடமும் கேட்டேன். ஆனால் அவர்கள், தாங்கள் இந்தியர்களே அல்ல என்றல்லவோ சத்தியம் செய்து விட்டனர்!" என்றாரே பார்க்கலாம் 'பார்' நிர்வாகி.



செய்தி: ஸ்டேட்ஸ்மேன். தகவல்: பா. கண்ணன்



பிளான் 303



1944ம் ஆண்டு. இரண்டாவது உலகப் போர் உச்ச கட்டத்திலிருந்த வேளை. ஒரு நாள் காலையில் படைத் தலைமைக் காரியாலயத்தைச் சேர்ந்த ராணுவ விமானம் ஒன்று இங்கிலாந்திலிருந்து வந்து ஜிப்ரால்டரில் இறங்கியது. உயர் அதிகாரிகள் வரிசையாக விமான தளத்தில் நின்றார்கள். விமானத்திலிருந்து ஜெனரல் மான்ட்காமரி இறங்கினார். அதிகாரிகள் அளித்த மரியாதை அணிவகுப்பை ஏற்றுக் கொண்டு கவர்னர் மாளிகையை நோக்கிக் காரில் ஊர்வலமாகக் கிளம்பினார்.

விமான தளத்தில் இருந்தவர்களும் வியப்புடன் பிரசித்திபெற்ற ராணுவத் தளபதியான ஜெனரல் மான்ட்காமரியைப் பார்க்க நின்று விட்டார்கள். அவர்களில் பலர் ஜெர்மானிய உளவாளிகள். தளபதியின் இந்தத் திடீர் விஜயம் அவர்களுக்குத் திகைப்பை ஊட்டியது.

மான்ட்காமரியின் கார், ஜிப்ரால்டர் கவர்னர் மாளிகை வாயிலை வந்தடைந்தது. கவர்னர் சர் ரால்ப் ஈஸ்ட்வுட் மான்ட்காமரியின் நெடுநாளைய நண்பர். "ஹலோ, மான்டி! உங்களை மீண்டும் பார்ப்பதில் மிக்க மகிழ்ச்சி" என்று வரவேற்றார்.

"என்ன ரஸ்டி! ஆள் ஒரு சுற்றுப் பருத்திருப்பதாகத் தோன்றுகிறதே" என்று மான்ட்காமரி குசலப்பிரசனம் செய்தார். சர் ரால்ப் ஈஸ்ட்வுட்டை அவர் அப்படித்தான் செல்லமாக 'ரஸ்டி' என்று அழைப்பார். இருவரும் மாளிகையினுள் நுழைந்தார்கள். சில நிமிடங்கள் கழித்து மான்டி பால்கனிப் பக்கம் வந்த போது எதிர் மாளிகையின் மேல் தளத்தில் கொத்து வேலை செய்து கொண்டிருந்தவன் போலக் காணப்பட்ட ஆசாமி கையில் ஒரு தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலம் அவரைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கவனித்தார்.

மேலும் சில நிமிடங்கள் கழித்து மான்டியும் ரஸ்டியும் மாளிகையின் தோட்டத்தில் உலாவக் கிளம்பினார்கள். 'ரஸ்டி'யின் மாளிகையிலிருந்த சில அபூர்வ ரத்தினக் கம்பளங்களைப் பார்வையிட இரண்டு ஸ்பானிய பாங்கர்கள் அந்த நேரத்தில் வருவதாக இருந்தது. அவர்களைத் தோட்டத்திலேயே சந்தித்து உள்ளே அனுப்பிவிட்டு 'ரஸ்டி'யும் 'மான்டி'யும் அங்கே யுத்த விஷயங்களைப் பற்றிப் பேசலாம் என்று ஏற்பாடு. மான்டி உற்சாகத்துடன் தோட்டத்தில் நுழைந்தவுடனேயே, யுத்த நிலவரங்களைப் பற்றிப் பேசிவிட்டுப் பிளான் 303ஐப் பற்றி ஏதோ ஆரம்பித்தார். அப்போதுதான் அவருடைய கடைசி வார்த்தைகளைக் காதுகளில் வாங்கிக் கொண்டே குறிப்பிட்ட அந்த இரண்டு ஸ்பானிய பாங்கர்கள் உள்ளே வந்தார்கள். மான்டி சட்டென்று பேச்சை நிறுத்தினார். கவர்னர் ரஸ்டி இருவரையும் மான்டிக்குச் சம்பிரதாயமாக அறிமுகம் செய்து விட்டு அவர்களை உள்ளே அனுப்பி வைத்தார். வந்தவர்களில் ஓர் ஆசாமி தன் கண்களை 'மான்டி'யின் மீதிருந்து கடைசி வரை அகற்றவேயில்லை.

அந்த இரண்டு ஸ்பானிய பாங்கர்களும் ஹிட்லரின் கெஸ்டபோ ஏஜண்டுகள். மான்டி ஜிப்ரால்டரிலிருந்து ஆப்பிரிக்க நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்யப் போகிறார் என்று கேள்விப்பட்டதும் பெர்லின் தலைவர்கள், அவர்களுக்கு அவசரம் அவசரமாகப் புதுப் பெயர்களில் பாஸ்போர்ட்டுகள் தயாரித்து அனுப்பி விட்டார்கள். அவர்களுடன் கூட வந்தவர்களில் ஒருவன்தான் கொத்து வேலைக்காரன் போல் தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலம் கவனித்துக் கொண்டிருந்தான். மற்றொருவன் ஜிப்ரால்டர் விமான தளத்திலிருந்த ஹோட்டல் ஒன்றில் பணியாளாகச் சேர்ந்தான். நான்கு பேரும், ஜிப்ரால்டருக்கு நிஜமாகவே மான்டி வந்து விட்டார் என்பதை நேரில் ஊர்ஜிதம் செய்து கொண்டார்கள். அடுத்த இரண்டு மணி நேரத்துக்குள் ஹிட்லருக்கு மான்ட்காமரி ஜிப்ரால்டர் வந்த விஷயமும் அவர் ஏதோ புதிதாக பிளான் 303ஐப் பற்றிப் பேசிக் கொண்டிருந்ததும் தெரிய வந்தது. அந்த பிளான் 303 என்பது என்ன என்பதை எப்படியாவது தெரிந்து கொண்டுவர வேண்டும் என்ற உத்தரவும் ஹிட்லரிடமிருந்து அந்த ஏஜண்டுகளுக்கு வந்துவிட்டது!

பாவம்! அந்தத் திறமையுள்ள கெஸ்டபோ ஏஜண்டுகள் ஏமாந்தார்கள். அவர்கள் பார்த்ததாக நினைத்த மான்டி, அசல் மான்ட்காமரியே அல்ல! நூற்றுக்கு நூறு அவரைப் போல் தோற்றமளிக்கும் லெஃப்டினென்ட் க்ளிஃப்டன் ஜேம்ஸ் என்னும் ஆசாமிதான்! இந்த விஷயம் கவர்னர் சர் ரால்ப் ஈஸ்ட்வுட்டுக்கும், பொறுக்கி எடுத்த சில உயர் அதிகாரிகளுக்கும்தான் தெரியும். மற்ற எல்லா ராணுவ அதிகாரிகளுமே வந்திருப்பது மான்டி என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தார்கள். இந்தப் போலி மான்டியை ஜிப்ரால்டருக்கும் ஆப்பிரிக்க நாடுகள் சிலவற்றுக்கும் அனுப்பி வைத்ததே அசல் மான்டியின் தலைமைக் காரியாலயம்தான்! வெகு

சிரத்தையுடனும் வெகு ரகசியமாகவும் இந்த முயற்சியில் ஈடுபட்டது அந்தக் காரியாலயம். அதற்கான வெற்றியையும்அடைந்தது!

லெஸ்டர் படைக் காரியாலயத்தில் பணியாற்றி வந்த லெப்டினென்ட் க்ளிப்டன் ஜேம்ஸை 1944ம் ஆண்டு வசந்த காலத்தில் ஒரு நாள் லண்டன் படைக் காரியாலயத்திலிருந்த காப்டன் நிவன் டெலிபோன் மூலம் கூப்பிட்டார். ஓர் அவசர காரிய நிமித்தம் ஜேம்ஸை லண்டன் வரும்படி சொன்னார். ஜேம்ஸும் கிளம்பினார். தம்மை வந்து சந்தித்த ஆசாமியை நிவன், கர்னல் லெஸ்டர் என்பவருக்கு அறிமுகப்படுத்தி விட்டு ஒதுங்கினார். ''நான் ராணுவ உளவு இலாகாவில் உள்ள எம். 15 பிரிவைச் சேர்ந்தவன். உங்களை ஒரு முக்கியமான காட்சியில் நடிப்பதற்காக வரவழைக்கச் செய்தேன். நீங்கள் ஜெனரல் மாண்ட் காமரியாக நடிக்க வேண்டும்'' என்றார் லெஸ்டர்.


க்ளிப்டன் ஜேம்ஸுக்குத் தூக்கி வாரிப் போட்டது. தமக்கும் ஜெனரலுக்கும் உள்ள தோற்ற ஒற்றுமையை அவர் தெரிந்து தான் வைத்திருந்தார். சமீபத்தில்கூட 'நியூஸ் க்ரானிகிள்' என்னும் பத்திரிகையில் க்ளிப்டன் படத்தைப் போட்டு 'நீங்கள் ஏமாந்து விட்டீர்கள்! படத்தில் காட்சியளிப்பவர் ஜெனரல் மாண்ட்காமரி இல்லை! லெப்டினன்ட் க்ளிப்டன் ஜேம்ஸ்தான்' என்ற வேடிக்கைக் குறிப்பையும் போட்டிருந்தது. அவருடைய நண்பர்கள் கூட 'இதோ ஜெனரல்!' என்று கேலி செய்வதுண்டு. க்ளிப்டன் இப்போது நிஜமாகவே ஜெனரல் போல் நடிக்க வேண்டுமென்று கேள்விப்பட்டபோது திகைப்படைந்தார்.

கர்னல் லெஸ்டர் தணிந்த குரலில் தெளிவாக விளக்கம் கொடுக்க ஆரம்பித்தார். ''திட்டமிட்டுப் பிரெஞ்சுக் கடற்கரையில் ஒரு ரகசியமான இடத்தில் நமது படைகளை இறக்கி ஜெர்மானியரைத் தாக்கி முறியடிக்கும் வெற்றித் தினத்தைப் பற்றி ஏற்கனவே தீர்மானமாகி விட்டது. இந்த ஏற்பாடு ஓரளவு எதிரிகளுக்குத் தெரிந்திருக்கிறது. அவர்கள் உஷாராக இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு நாம் எப்போது அந்தத் தாக்குதலை நடத்தப் போகிறோம் என்று ஊகிக்க முடியாதபடி இருக்கிறது. அவர்களை மேலும் குழப்பத்துக்குள்ளாக்கி, அவர்கள் கவனத்தை வேறு பக்கம் திருப்ப நமது ஜெனரல் மாண்ட்காமரி வேறு திசையில் ஆப்பிரிக்க நாடுகளுக்கு இந்த நேரத்தில் விஜயம் செய்யப் போகிறார். அந்த ஜெனரல் வேறு யாருமல்ல! நீங்கள் தான். இன்னும் சில நாட்களுக்கு நீங்கள் ஜெனரல் கூடவே இருந்து அவருடைய நடை உடை பாவனை எல்லாவற்றையும் ஒரு நுணுக்கம் விடாமல் தெரிந்துகொள்ள ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது'' என்று விவரித்த கர்னல் லெஸ்டர் ''உங்களுக்கு இதுபற்றி ஏதும் கேள்விகள் கேட்க வேண்டுமென்று தோன்றினால் கேளுங்கள்'' என்றார்.

ஜேம்ஸுக்கு எத்தனையோ கேள்விகள் கேட்க வேண்டும் போல் தோன்றிற்று. அத்தனை புகழ் வாய்ந்த பெரிய ஜெனரலின் போலியாக எத்தனையோ பேரை ஏமாற்ற இயலுமா என்ற அச்சம் எழாமலில்லை. ஆனாலும் அவர் எந்தக் கேள்வியையும் கேட்காமல் சம்மதம் என்று தலையை ஆட்டி விட்டார்.

ஜெனரல் மாண்டியைக் கவனித்துக் கொள்ளும் ரகசியப் பாதுகாப்புக் குழுவுக்கு ஜேம்ஸ் அனுப்பப்பட்டார். பக்கத்திலேயே இருந்து அவரைக் கவனித்து அவரைப் போல் நடிக்க இது ஒரு வாய்ப்பு!

தனிமையில் இருக்கும்போதெல்லாம் ஜேம்ஸ் மாண்டியின் பல புகைப்படங்களை வைத்து அவர் முக பாவங்களையெல்லாம் மனத்திலாக்கிக் கொண்டார். ராணுவ மரியாதை அணிவகுப்புக்களில் மாண்டி கைதூக்கும் விதமே அலாதியானது. அவர் புகை பிடிப்பதில்லை. காலை வேளை ஆகாரத்தில் பாலோ சர்க்கரையோ உதவாது. அடிக்கடி கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு நடப்பார். தீவிர சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் போது அடிக்கடி கன்னத்தைத் தடவிக் கொள்வார்! இந்த விஷயங்களையெல்லாம் ஜேம்ஸ் நன்கு கவனித்துக் கொண்டார். மாண்டி எந்தச் சந்தர்ப்பத்திலும் தடபுடலாகப் பெரிய பெரிய சொற்களை உபயோகித்துப் பேச மாட்டார். சர்வ சாதாரணமாக எளிய வார்த்தைகளைத்தான் உபயோகிப்பார்.



என்ன நான் நாகரிகம் உயர்ந்தாலும் பெண் புத்தி பின் புத்தி தான்!

இந்த நாடகம் தொடங்கப்படுவதற்குச் சில நாட்களுக்கு முன் ஒத்திகையின் கடைசிக் கட்டமாக மாண்டியே ஜேம்ஸைப் பார்த்து ''இந்த நாடகத்தில் வெற்றிகரமாக நடிப்பாய் என்ற நம்பிக்கை இருக்கிறதல்லவா?'' என்றார். ஜேம்ஸுக்கு உடனடியாகப் பதில் சொல்லத்




இப்பொழுது
நடைபெறுகிறது
சென்னை
ஸபையர்
ஒரு விகம்ஸி ஏர்கண்டிஷன்ட் தியேட்டர்
அசோக்
பிரைட்டன்
சயானி
மற்றும் தென்னுடெங்கும்
தேவர் பிலிம்ஸ்
கன்னித்தாய்
டைரக்‌ஷன் M.A. திருமுகம்
தயாரிப்பு
சாண்டோ
M.M.A. சின்னப்பா தேவர்
ELEGANT

தைரியம் இல்லை. மாண்டியே தொடர்ந்து "நீ பயப்பட வேண்டாம்! எல்லாம் சரியாக நடக்கும்" என்றும் சொன்னார். ஜேம்ஸுக்கு இப்போதுதான் பூர்ண தைரியம் வந்தது.

ஜேம்ஸ் பிரதான கதாநாயகனாக மாறும் தினமும் வந்தது. கர்னல் லெஸ்டர், "ஜேம்ஸ்! நாளை மாலை இந்த மகத்தான நாடகத்தின் திரை தூக்கப்படவிருக்கிறது. நாங்கள் எங்களவே கூட்டுப் படைகளைக் கொண்டு, தென் பிரான்ஸ் கடற்கரையில் எங்கு தாக்குதல் நடத்தலாம் என்று ஆலோசிக்க மாண்டி சில ஆப்பிரிக்க நாடுகளுக்கு விஜயம் செய்யப் போகிறார் என்ற வதந்தியைப் பரப்பி விட்டிருக்கிறோம். எதிரிகளும் கெட்டிக்காரர்கள்தான்! நிஜமாகவே மாண்டி இந்தச் சந்தர்ப்பத்தில் அந்தப் பகுதிகளுக்குப் போவாரா என்று சந்தேகிக்கலாம். உங்களைக் கூர்ந்து கவனிக்கலாம். ஆகவேதான் நீங்கள் நூற்றுக்கு நூறு மாண்டியாகவே மாறி விடவேண்டும்" என்று அறிவுரை வழங்கினார்.

லெப்டினென்ட் ஜேம்ஸ் இப்படித்தான் ஜெனரல் மாண்ட்காமரியாக மாறி ஜிப்ரால்டர் வந்து சேர்ந்தார்.

கீ கீ கீ

ஜிப்ரால்டரிலிருந்து அடுத்தபடியாக அல்ஜீயர்ஸுக்கு மாண்டி போவதாகத் திட்டம். ஜிப்ரால்டர் விமான தளத்திலுள்ள ஹோட்டல் வராந்தாவில் கவர்னர் ஈஸ்ட்வுட்டும் 'மாண்டி'யும் தீவிரமாகச் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். மாண்டியின் பேச்சில் பிளான் 303 அடிக்கடி அடிபட்டது. ஹோட்டல் சிப்பந்திகளில் ஒருவனாக வந்து சேர்ந்திருந்த கெஸ்டபோ ஏஜண்ட் காதுகளைத் தீட்டிக் கொண்டு அங்கும் இங்கும் போய்க் கொண்டிருந்தான்.

மாண்டி அல்ஜீயர்ஸில் வந்து இறங்கினார். வழக்கம்போல் ராணுவ வரவேற்பு மரியாதை. அங்கு படைப் பொறுப்பிலுள்ள ஜெனரல் வில்சனும் மாண்டியும் விமான தளத்திலிருந்து நகருக்குக் காரில் காற்றாய்ப் பறந்தார்கள். இடையில் எதிரிகள் மாண்டியின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கலாம் என்ற பயம்.

அல்ஜீயர்ஸிலிருந்து மேலும் சில ஆப்பிரிக்க நாடுகளில் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு மாண்டி அல்ஜீயர்ஸுக்கே திரும்பினார். போன இடங்களில் ஒரு பிரெஞ்சு மேஜர், ஒரு புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர், ஓர் இத்தாலியப் பெண்மணி எல்லோருமே மாண்டியைச் சந்திக்க வேண்டும் என்று தங்கள் வேண்டுகோள்களைப் பதிவு செய்து கொண்டிருந்தார்கள். மாண்டி அவர்களையெல்லாம் சந்தித்துப் பேசினார். அவர்கள் எல்லாம் பெர்லின் ஏஜெண்டுகள் என்று முன்பே தெரியும். அதிகமாக அவர்கள் கண்களில் படவேண்டும் என்றுதானே இந்தப் பிரயாணமே ஏற்பாடானது.

திட்டமிட்ட அசல் படையெடுப்புத் தினம் நெருங்கி விட்டது. அல்ஜீயர்ஸிலுள்ள ஜெனரல் வில்சன் மாளிகைக்குத் திரும்பிய போலி மாண்டி தம் வேடத்தைக் கழற்றினார். அவர் இந்தச் சம்பவத்தில் இங்கிலாந்துக்குத்



"டெலிவிஷன் பாக்ஸ் வந்தாலும் வந்தது. நானும் டெலிவிஷன் பாக்ஸ் மாதிரி இவர் கை நீட்டின மறுகணமே செக் எழுதிக் கொடுக்கும்படியா ஆயிடுத்து!"

திரும்ப வேண்டாமென்று, அவரைச் சாதாரண க்ளிப்டன் ஜேம்ஸாக, கெய்ரோவுக்கு அனுப்பி வைத்தார்கள்.

பிரெஞ்சுக் கடற்கரையில் முன்னேற்பாடாகக் கூட்டுப் படைகள் இறங்கி வெற்றி கண்டதும் பெர்லின் ராணுவம் ஏமாந்தது. மாண்டியின் ஆப்பிரிக்க நாடுகள் விஜயத்திலிருந்து தெற்குக் கடற்கரையில் படையெடுப்பு நடக்கலாமென்று பாதிப் படை வீரர்களை அங்கு அனுப்பி வைத்திருந்தது.

கடைசிவரை பிளான் 303 என்பது என்ன என்று அவர்களால் தெரிந்து கொள்ள முடியவில்லை. அப்படி ஒரு பிளான் இருந்தால் தானே!

இங்கிலாந்துக்குத் திரும்பிய பிறகுதான் க்ளிப்டன் ஜேம்ஸுக்குத் தான் நடித்த நாடகம் என்ன என்று தெரிய வந்தது. 'மாண்ட்காமரி புறப்பட்ட விமானத்தைச் சுட்டு வீழ்த்தவேண்டும். அல்லது ஜிப்ரால்டரில் இறங்கியவுடன் ஆசாமியை எப்படியாவது தீர்த்து விடவேண்டும் என்பதுதான் ஹிட்லரின் முதல் திட்டம். ஆனால் பிளான் 303 என்ற பேச்சு ஆரம்பமானதும் அவர் அது பற்றி முழு விவரங்களையும் தெரிந்து கொள்ள மாண்ட்காமரியை உயிருடன் விட்டு வைக்கத் திட்டமிட்டார்! ஜேம்ஸின் உயிரும் தப்பியது!

இந்தச் சம்பவம் நடந்து வெகு நாட்கள் வரை க்ளிப்டன் ஜேம்ஸ் தான் மீண்டும் பழைய லெப்டினன்ட் ஆகிவிட்டோம் என்பதை மறந்து ஜெனரலாகவே நடந்து கொண்டாராம்! அதிசயபூர்வமான போலி அல்லவா?


— திருவேங்கடத்தான்

வசீகரத்தையும், பெருமிதத்தையும் கொடுக்கும் நறுமணம் உங்களுக்கு பாமாலிவ் லவண்டர் டால்க் உபயோகிப்பதால்.

உங்களுக்கு மிகவும் பிடித்தமான லேவண்டர்—உங்களுக்காகவே மீண்டும் உருவாக்கப்பட்டிருக்கின்றன!

ஒரு காலத்தில் உலக அழகுக் கேந்திரங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவையும், உங்களுக்கு மிகவும் பிடித்தமானவையுமான லேவண்டரின்றி இனி நீங்கள் தவிக்கவேண்டாம்... இன்று பாமாலிவ் லவண்டர் டால்க் மட்டுமே அளிக்கும் வசீகர நறுமணத்தினாலும், பெருமிதத்தினாலும் உங்கள் உடலைச் சொகுசாகப் பராமரிக்க முடியும். பாமாலிவ் லவண்டரை உங்கள் உடம்பு முழுவதும் தூவிக்கொண்டு, சூழ்ந்து நிற்கும் அதன் இனிய வசீகர நறுமணத்தினால் களிப்படையுங்கள்.

எப்பொழுதும் புத்துணர்ச்சியுடனும் நறுமணம் சூழ்ந்த அழகுடனுமிருக்க பாமாலிவ் லவண்டர் டால்க்.







மற்றும் பாமாலிவ் டால்க் டிலக்ஸ் —
மயக்கும் 17 லேவண்டர்களின் அற்புதமான கலவை

சிறப்பான சிக்கல்கள்

கல்விக் கூடங்களை இறைவனின் இருப்பிடத்துக்கு ஒப்பிடுகிறோம். அறிவை வளர்க்கும் ஆலயங்கள், கோயில்கள் என்று கூறுகிறோம். அறிவு என்னும் அந்த இறைவன் அமர்ந்திருக்கும் இடத்துக்கும் அகல நீள உயரக் கட்டுப்பாடுகள் உண்டு. திறந்தவெளியிலே போய் அமர்ந்து தியானம் செய்யும் வழக்கம் முந்திய யுகங்களில் இருந்திருக்கலாம்; இப்போது இல்லை.

இந்தக் கோயிலுக்குப் பக்தர்கள் வருகிறார்கள். வர வேண்டியதுதான்! ஆனால் ஒரேயடியாக முண்டியடித்துக் கொண்டு ஏகமாக உள்ளே நுழைய முயற்சி செய்யும்போது இறைவனுக்கே கொஞ்சம் வியர்க்கத்தான் செய்யும். அவர் மெதுவாகத் தம் இடத்தையும் காலி செய்துவிட்டு நழுவப் பார்க்கிறார்.

உயர்நிலைப் பள்ளிகளில் பல வகுப்புகளில் இப்போதெல்லாம் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அனுமதிக்க முயற்சிகள் எடுத்துக்கொள்வது எனக்குக் கூட்டம் நிறைந்த கோயில்களைத்தான் நினைவூட்டுகின்றன. இந்த விஷயத்தில் கல்லூரிகள் பாடு எவ்வளவோ தேவலை! புகுமுக வகுப்புக்கும் பட்டப் படிப்பு முதலாண்டு வகுப்புக்கும்தான் அனுமதிப் பிரச்னை! கல்வி ஆண்டு ஆரம்பத்தில் இரண்டு வகுப்புகளுமே காலியாக இருக்கின்றன. நூற்றுக் கணக்கான மாணவ மாணவியரை அனுமதிக்க வாய்ப்பு உண்டு! எங்களுக்கு அப்படியில்லை. ஆரம்ப வகுப்பாகிய ஆறும் வகுப்பு ஒன்றுதான் ஓரளவு காலி. அதுகூட முழுக்கக் காலி என்று சொல்ல முடியாது. ஏழாம் வகுப்புக்குப் போகாத மாணவர்கள் தொடர்ந்து அங்கே தானே உட்கார்ந்திருக்க வேண்டியிருக்கிறது. ஆனால் ஆறும் வகுப்பிலிருந்து பதினோராம் வகுப்பு வரை இங்கே அனுமதிப் பிரச்னை உண்டு. வெளியூர்களிலிருந்து மாறுதலாகி வரும் பெற்றோர்கள், நகரத்திலேயே ஒரு பகுதியிலிருந்து வேறு பகுதிக்குக் குடியேறும் பெற்றோர்கள், இந்தப் பள்ளிக்கூடத்தில்தான் என் குழந்தைகள் படிக்க வேண்டும் என்று நினைக்கும் பெற்றோர்கள்-எல்லோருமே இந்தப் பிரச்னையைப் பெரிதுபடுத்துகிறார்கள்.

நாங்கள் பெரிதளவு திறமைக்கு முக்கியத்துவம் கொடுத்து அனுமதிக்க முயன்றாலும் அது சாத்தியமானதாக இருப்பதில்லை. பள்ளிக்கூடம் இருக்கும் பேட்டையில் வசிக்கும் குழந்தைகளுக்கு அனுமதியளிக்கும் விஷயத்தில் கொஞ்சம் சலுகை காட்டத்தான் வேண்டியிருக்கிறது. அவர்களால், பஸ், ரயில் ஏறிப் பள்ளிக்குப் போய் வர முடியாது. பத்திரக் குறைவு. இந்தக் கஷ்டங்களெல்லாம் கல்லூரி முதல்வர்களுக்குக் கிடையாது. மார்க்கு லிஸ்டுகளை வைத்துக்கொண்டு வடிகட்டிப் பொறுக்கி விடுகிறார்கள். அங்கு மாணவர் மாணவியர் எவ்வளவு தூரத்திலிருந்தும் வந்து போகக் கூடிய வயது நிலையை அடைந்தவர்கள்.

நாங்கள், பள்ளியில் நுழைய வரும் ஒவ்வொரு மாணவனையும் கவனித்துச் சேர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. எட்டாவது வகுப்பில் சேர வரும் மாணவன் ஆறாறு பாருவாகப் பதினெட்டு வயதை அடைந்தவனாக இருந்தால் நாங்கள் தாட்சிண்யமின்றி அவன் மனுவை நிராகரிக்க வேண்டியிருக்கிறது. எட்டாவது வகுப்பு மாணவர்கள் சராசரி பன்னிரண்டு பதின்மூன்று வயதும் பிரிவைச் சேர்ந்தவர்கள். அவர்களுடன் அந்த வயதுக்கு மீறிய மாணவனை அமர்த்துவது மனோ தத்துவரீதிப்படி முறையானதல்ல!

பள்ளி மாணவர்களுக்குச் சம்பளமே கிடையாது என்று சமீப காலமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகு எங்கள் சங்கடம் இன்னும் அதிகமாகி விட்டது. 'சம்பளம்தான் கிடையாதே! ஒவ்வொரு வகுப்பிலும் எத்தனை வருடங்கள் வேண்டுமானாலும் தங்கிப் படிக்கலாம்' என்ற மனோபாவம் பலருக்கு ஏற்பட்டு விடுகிறது. இதனால் ஒரு வகுப்பிலிருந்து மேல் வகுப்புக்குப் போவதில் தேக்கம் ஏற்பட்டு விடுகிறது. அதனால் புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது தடைப்படுகிறது.

இது விஷயத்தில் கல்லூரி முதல்வர்கள் கொடுத்து வைத்தவர்கள்! சம்பளச் சலுகையுமில்லை; அதனால் விளையும் சங்கடங்களுமில்லை.

உயர்நிலைப் பள்ளியில்தான் ஒரு சிறுவன் வருங்காலத்துக்காக உருவாக்கப்படுகிறான். அவனிடம் ஆசிரியர்களின் நேரடி கவனமும்

பள்ளிகளில் மாணவர்கள் இடம் பிடிப்பது கஷ்டம்: திரு என். எஸ். விசுவநாதன், M. A. L. T., தலைமை உபாத்தியாயர், தேசிய மாணவர் உயர்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி, சென்னை - 5.

இல்லை! கல்லூரிகளில் இடம் பிடிப்பதுதான் கஷ்டம்: திரு மீர் ஷகபீர் ஹுசேன், M. A. B. T., முதல்வர், அரசினர் கலைக் கல்லூரி, சென்னை - 2.

கண்டிப்பும் தேவை. அளவுக்கு மீறிய மாணவர்கள் இருந்தால் ஆசிரியர்கள் போதிய கவனம் செலுத்த முடியாது. இதனாலேயே ஒவ்வொரு பையனையும் கண்டிப் பார்த்து அனுமதிக்க வேண்டியிருக்கிறது. பள்ளித் தலைவர் பலருடைய கோபத்துக்கும் தாபத்துக்கும் ஆளாகவேண்டியிருக்கிறது. கல்லூரிக்குள் நுழைய வரும் மாணவ மாணவிகள் ஓரளவு உலகமறிந்தவர்கள். அவர்கள் மீது தனிக் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் அங்கு இல்லை! எனவே, அனுமதி விஷயம் கல்லூரிகளில் எழும்பும் பிரச்னைகளைவிட உயர் நிலைப் பள்ளிகளில்தான் அதிகத் தொல்லை கொடுக்கிறது என்பது என் அபிப்பிராயம்.



திரு என். எஸ். விசுவநாதன்

க் க் க்

“இக்கரைக்கு அக்கரை பச்சை” என்ற சொற்றொடர்தான் நண்பர் விசுவநாதன் சொல்வதைக் கேட்கும்போது என் நினைவுக்கு வருகிறது. கல்லூரி அனுமதிப்பு விஷயங்களில் கல்லூரி முதல்வர் கவலைப்படாமல் குஷியாக இருக்கிறார் என்று அவர் நினைக்கிறார். எங்கள் கஷ்டம் எங்களுக்குத் தெரியும். பன்மடங்கு அதிகமும்கூட.

பள்ளியை ஒரு சிறு நதிக்கு ஒப்பிட்டால் கல்லூரியைப் பல நதிகள் சங்கமமாகும் பெரிய சமுத்திரத்துக்கு ஒப்பிடலாம். அவர் சில மாணவர்களைச் சமாளிக்க வேண்டியிருந்தால் நாங்கள் பல மாணவர் கூட்டத்தையே சமாளிக்க வேண்டியிருக்கிறது. யாருக்குச் சிரமம் அதிகம்? நீங்களே சொல்லுங்கள்!

இட வசதி, நெருக்கடி என்று குறிப்பிடுகிறாரே, இவை இரண்டும் சாராருக்குமே பொதுவானவை. பள்ளிக்கூட விஷயங்களில் சர்க்கார் சட்டென்று அதிகப்படி எண்ணிக்கைக்கு அனுமதி கொடுத்துவிடும். ஆனால் சர்வகலாசாலையால் அப்படிச் சட்டென்று செய்ய முடியாது.

நாங்களும் முடிந்த அளவுக்குத் திறமையின் அடிப்படையில் மாணவர்களை அனுமதிக்கிறோம். கூடியவரை விதி விலக்குக் கொடுப்பதில்லை. ஆனாலும் தொல்லைகள் இருக்கின்றன. ஒரே மார்க்குகள் வாங்கியிருக்கும் பல மாணவர்களில் சிலரைப் பிரிவுகளின் இடவசதிக்கு ஏற்பத் தேர்ந்தெடுக்க வேண்டி வரும்போது நாங்கள் மண்டையைக் குடைந்து கொள்ள வேண்டித் தானிருக்கிறது.

இந்த ஆண்டு அனுமதிப்புக்களெல்லாம் கடைசித் தடவையாக முடிந்து அறிவித்த போது, அனுமதியை எதிர்பார்த்து ஏமாந்து கல்லூரி வட்டத்துக்குள் என்னைப் பார்க்கக் கூடியிருந்த மனோர்கள் எத்தனை பேர் தெரியுமா? ஏறத்தாழ மூந்நூறு பேர்கள். ஆவேசம் நிறைந்திருந்தது. அவர்களைச் சமாதானப்படுத்தி அனுப்பு முன்பு நான் என்ன பாடுபட்டிருப்பேன்? இந்த மாதிரி நெருக்கடிகளெல்லாம் நண்பர் விசுவநாதன் போன்றவர்களுக்கு ஏற்படுமா? ஒன்றிரண்டு கோபக்காரப் பெற்றோர்களும் கூடத் தங்கள் அனுபவத்தின் அடிப்படையில் நிலைமையைப் புரிந்துகொண்டு சும்மா போய் விடுவார்கள்!

வயது, தோற்ற விஷயங்களை நாங்களும் கவனிக்காமல் இல்லை. குறிப்பாகப் புகுமுக வகுப்பில் இதைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கிறோம். சராசரி பதினாறு வயதுள்ள மாணவர்கள்தான் அந்த வகுப்பில் நுழைகிறார்கள். அவர்களிடையே இருபது இருபத்திரண்டு வயது நிறைந்த முதிர்ச்சியடைந்த வாலிபர்களைப் புகவிடுவது ஓரளவு ஏற்றத்தாழ்வு மனப்பான்மைகளைத் தோற்றுவிக்கலாம் அல்லவா? என்னுடைய அனுபவத்தைச் சொல்கிறேனே! இருபத்தொரு வயதை எட்டிய பையன் ஒருவன் புகுமுக வகுப்புக்கு மனுச் செய்திருந்தான். அவனுக்கு அனுமதிப்பு கிடைக்கவில்லை. அதுபற்றிச் சிபாரிசுடன் விசாரிக்க வந்தான். அவனுக்கு இந்த வயது வித்தியாசம் சுட்டிக் காட்டப்பட்டது. விண்ணப்பத்திலும் அத்தாட்சிப் பத்திரங்களிலும் போடப்பட்ட வயது தவறானதென்றும் அசல் பிறந்த நாள் பற்றிய சர்டிபிகேட் கொண்டு வருவதாகவும் சொல்லிப் போய் வேறு ஒரு சர்டிபிகேட்டை நான்கு நாட்கள் கழித்து எடுத்து வந்தான். அதில் நாலு வயது குறைந்திருந்தது. ஆனால் இன மாற்றமே கண்டிருந்தது. ஆண் என்பதற்குப் பதில் பெண் என்று தவறாக எழுதப்பட்டிருந்தது! நல்ல வேளை! அந்தத் தவறு அந்தப் பையனை ஒரு மட்டும் நிராகரிக்க உதவியது! பட்டப் படிப்பு வகுப்புகளில் நாங்கள் வயதைக் கவனிப்பதில்லை என்பது வாஸ்தவம்தான்!



திரு மீர் ஷகீர் ஹுஸேன்

பள்ளிக்கூடத்திலாவது உள்ளே வந்த மாணவர்கள் ஓரளவு ஆசிரியர்களின் எச்சரிக்கைக்குப் பயந்து கட்டுப்பாட்டுக்குள் அடங்கி நடந்து கொள்வார்கள்! சிறந்த மாணவர்களை அனுமதித்தோம் என்று பெருவகையடையலாம்!

எங்களுக்கு அப்படிச் சுலபமாக சந்தோஷப்பட முடியுமா? நண்பர் விசுவநாதனே சொல்லட்டும்!

நியாயமான விலையில்

தரம் உயர்ந்த **பின்னி-மபத்லால்** ஜவுளிகள்.

ரெடிமேடு ஆடைகளில்

நாளைய நாகரீக படைப்புகள்

இன்றே முகமலர்ந்த வரவேற்புடன் விற்பனை!

ராமு & கோ.,

ஜவுளிக் கடைகள்:-

1 R.S.புரம்: போன்-4397 2 அவனசி ரோடு: போன்-5124

3 கிராஸ்கட் ரோடு: போன்-5889

ரெடிமேட் கடைகள்:-

1 கிராஸ்கட் ரோடு 2 R.S.புரம்

கோயமுத்தூர்.

OSR



கால்கேட் பேபி பவுடர்

மிக நேர்த்தியானது

..: பெரிய டப்பாகூட

அவ்வளவு அதிக இதமளிப்பது,
அவ்வளவு அதிக மணமுள்ளது,
குழந்தையின் இளஞ் சருமத்திற்கு
மிகவும் உகந்தது

அதிகப் பவுடர்
அதிகச் சிக்கனம்

பக்தி வேண்டுமா?

ரா. கணபதி



'தண்டாயுதபாணி! இன்னிக்கு இப்படித்தான் போது விடியணுமா?' என்று முறைப்பட்டுக் கொண்ட ருக்மிணிக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

'சனியன் பிடித்த துக்கம்! ஏன் தொண்டையிலேயே நின்று மூச்சை அடைக்கணும்? அழுகையா வெளியே வந்து தொலையறதுதானே? எனக்குத்தான் எதுவும் பேச உரிமையில்லே. முரட்டுப் புருஷனுக்காக உணர்ச்சியை எல்லாம் அடக்கிக்கிட்டுக் கிடக்கணும். இந்தத் துக்கத்தை யாரு அடக்கி வச்சுக்கிறது?' என்று தன் துக்கத்துடனேயே மனஸ்தாபப் பட்டுக்கொண்டாள்.

அப்போது அவளுடைய அதிகாரத்தை யெல்லாம் தன் ஐந்து மாசக் குழந்தையின்மீது — அவளுடைய பாட்டியின் பாஷையில் 'சிசு' மீது — தான் காட்ட முடிந்தது. தூளியை ஒரே குலுக்காகக் குலுக்கி ஆட்டலானாள். அவள் என்ன நிர்த்தூளி செய்தாலும் அவளுடைய 'முரட்டு'க் கணவன் பொருட்படுத்த மாட்டான் என்பதையும் அவள் அறிவாள். இருந்தாலும் ஏதோ ஆத்திரத்தை வெளிக் காட்டுவதில் அவளுக்கு ஒரு திருப்தி.

வாசலில் அவள் கணவன் நமச்சிவாயம் சர்வ சாவதானமாகப் பால் வாங்கிக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்தால் யாரும் முரடு என்று சொல்லமுடியாது. ஒருவேளை கொலுப் பொம்மை வாழைப்பழம் போல் பார்த்தால் சொகுசாகவும் தொட்டால் கல்லாகவும் இருப்பானோ என்னவோ?

வழக்கமாகத் தாங்கள் வாங்கும் கால் படிப் பாலை ஒரு பாத்திரத்திலும், புதிதாக இன்னொரு கால் படிப் பாலை இன்னொரு பாத்திரத்திலும் வாங்கினான் நமச்சிவாயம்.

''இந்தா கோவிந்தசாமி! என் பாலுலே வேணுலும் நுரையைப் போடு, மொட்டையா அளந்து போடு. இந்த இன்னொரு பாலு இருக்கே இதிலே உன் வேலைத்தனம் ஒண்ணையும் காட்டக் கூடாது. அப்படிச் செஞ்சே, அது தெய்வக் குத்தத்துக்குச் சமானம்'' என்று பால்காரனிடம் அவன் கூறுவதைக் கேட்ட ருக்மிணிக்கு ஆத்திரம் எல்லை மீறிப் போய்விட்டது.

பேசிப் பயனில்லை என்று தெரிந்தாலும் இப்போது பேசியே தீரவேண்டும் என்று எண்ணித் தூளியை அப்படியே விட்டுவிட்டு வாசலுக்கு விரைந்தாள். குலுக்கி ஆட்டிய தூளியைத் திடீரென்று விட்டதால் அது ஓர் ஆறடி அலாக்காக ஆடி, எப்படியோ குழந்தையின் தலையைக் கதவில் மோதி உடைக்காமல் ஆபத் பாந்தவம் புரிந்தது.

''தெய்வக் குத்தம்னு சொன்னீங்க! நீங்களா சொன்னீங்க? நீங்க செய்யறதுக்குப் பேரு என்னவாம்?'' என்று உடைந்த குரலில் கணவனிடம் உரக்கக் கேட்டாள். அவளுடைய நெற்றிப் பொட்டுக்களும், கழுத்தும் நொறுங்கிவிடும்போல வலித்தன. இரைந்ததால் மட்டுமல்ல. அதற்குப் பிரதியாகக் கணவன் இரைச்சல் போடுவான் என்பதாலுமல்ல. அவன் இரைச்சல் போட்டாலும் கூட அவளுக்குத் திருப்தியாக இருக்கும். அவன் இரைந்தால் தன் வார்த்தை அவனைப் பாதிக்கிறது என்றுதானே அர்த்தம்? ஆனால் அவன் அப்படிப் பாதிக்கப்பட மாட்டான்; எனவே இரையவும் மாட்டான் என்று அவளுக்குத் தெரியும். அதனால்தான் அவளுடைய நெற்றிப் பொட்டுக்களும் கழுத்தும் அப்படி நொறுங்கிவிடும் போல் வலித்தன.

நிதானமாக, ஏன், மென்மையாகவே அவளைப் பார்த்தான் நமச்சிவாயம். ''ருக்கு! ரெண்டு கையிலே ரெண்டு பால் பாத்திரத்தைத் தூக்கிட்டு வர முடியலே பாத்தியா? ஒண்ணை வாங்கிக்கோம்மா'' என்று சர்வ சகஜமாகக் கூறியவன், ''ரெண்டையுமே காச்சிவிடு'' என்றான்.

''முடியாது. நான் ஒண்ணையுமே காச்சப் போறதில்லே.... இல்லே, நீங்க தெய்வக் குத்தம் பண்ணலேன்னு ஒண்ணை மட்டும் காச்சாமே தண்டாயுதபாணிக்காக வைக்கறேன். பிடிவாதமா நீங்க சாமிக்கு அபராதம் பண்ணுவீங்கன்னு நம்ம பாலையும் நான் காச்சப் போறதில்லே; காப்பியும் போடப் போறதில்லே'' என்று புலம்பிக்கொண்டே தூளி அறைக்குள் நுழைந்தாள் ருக்மிணி.

''சனி, காலேவேளையில் ரோதனே. தூங்கித் தொலைக்கிறது தானே? ஒரு காரியமும் செய்ய விடாமே 'ஙய்', 'ஙய்'னு உசிரை எடுக்கிறத்துக்கு இப்போ பிடிச்சே ஏன் முழிச்சுக்கிட்டே?'' என்று குழந்தைக்கு ஸுப்ரபாதம் சொல்லிவிட்டுத் தூளியை



மீண்டும் குலுக்கத் தொடங்கினுள். உண்மையில் குழந்தை இத்தனை ரகளையிலும் நன்ருகத் தூங்கிக் கொண்டுதான் இருந்தது. அப்பாவைக் கொண்டிருந்தது போலும்!

அறை வாசலில் நமட்டுச் சிரிப்புடன் நின்ருன் நமச்சிவாயம்.

''ருக்மிணியம்மா, காரியம் செய்ய விடாமலா கொழந்தை ரோதனை செய்யறது? இன்னிக்குத்தான் உனக்கு 'ரெஸ்ட்' ஆச்சே! இப்போதானே சொன்னே, 'காப்பி போடப் போறதில்லே'ன்னு! அப்படின்னு சமையல் மட்டும் பண்ணுவியாமா? 'ரெஸ்ட்' இருக்கறத்துக்குக் கொழந்தையைத்தான் பாத்துக்கோயேன்'' என்று முகம் நிறையச் சிரிப்பை வழியவிட்டுக் கொண்டு சொன்னுன் அவன்.

'குத்துக்கல்லாட்டமா! பெண்ஜாதி இத்தனை சொல்றுளே என்று கோவம் வரா விட்டாலும் ஒரு புருஷனுக்கு ரோசமாவது வராது? ஆமாம், ரோசமும் கோவமும் எதுக்கு வரணும்? ஒருபிடியா தங்கள் காரியத்தைச் சாதிக்கிறவங்களுக்கு எதிராளி இட்ட ஆத்திரம்தான் ஏன் வரப் போகுது?' என்று தனக்குள் கேட்டுக் கொண்டாள் ருக்மிணி. ''ஆமா, கெடுகெட்ட எனக்கு இந்த வீம்புச் சவாலெல்லாம் முடியுமா? காப்பியும் நான்தான் போடணும், அப்புறம் சமைக்கணும், இன்னும் எல்லா வேலைகளும் நான்தான் செஞ்சாகணும்'' என்று அலுத்துக் கொண்டே சமையலறைக்குள் நுழைந்தாள்.

அவன் ஏற்கனவே மூட்டி வைத்திருந்த அடுப்புடன் இன்னெரு அடுப்பையும் இப்போது மூட்டி வைத்திருந்தது. இரண்டிலும் இரண்டு பால் பாத்திரங்களும் ஆரோகணித்திருந்தன. கணவனுடைய காரியம்தான்!

அடுப்புத் தணலைப் போலவே ருக்குவின் நெஞ்சகம் எரிந்தது.

''இந்தாங்க! எனக்கு நீங்க பதில் சொல்லாம உங்க வழியிலேயே போகலாம். என்னைத் துரும்பா நினைச்சு — இவளோடு சண்டை பிடிக்கிற அளவுக்குக்கூட இவளை இலட்சியம் செய்யக் கூடாதுன்னு நினைச்சு—உதாசீனம் செய்யலாம். ஆனால் ஆண்டவனுக்கு நீங்க ஒரு நாள் பதில் சொல்லத்தான் வேணும்!'' என்று படபடத்த ருக்மிணி

பக்தி புரியவேண்டியதுதான். ஆனால் புத்தி பூர்வமாகப் பக்தி புரிய வேண்டும் என்று இன்றைய உலகம் நினைப்பதுபோலதான் நமச்சிவாயமும் நினைத்தான். ஆனால் பொன்னுத்தாயின் செயல் - பக்தி புரிய புத்தி தேவை தானு என்று அவனைச் சிந்திக்க வைத்துவிட்டது! ★

காப்பி ஃபில்டரைக் கிடுக்கியால் ஒரு தட்டுத் தட்டினான். தடதடவென்று படுவேகமாக 'டிகாக்ஷன்' இறங்கிற்று.

''காப்பி எலெவ்லை அப்படியே விளம்பப் போறதே ருக்கு! கிடுக்கியை ஏன் ஃபில்டர் தலையிலே போடறே? இங்கே கொண்டாம்மா, என் தலையிலே போட்டுக்கறேன்'' என்று கூறியபடி அவளுக்கு அருகிலே வந்து 'பவ்வியமாக' அமர்ந்தான் நமச்சிவாயம். கேலித்தனத்தில் குழைவைப் பிசைந்து அதைத் தன் குரலுக்கு ஊட்டிக்கொண்டு, ''அது போகட்டும், ஆண்டவனுக்குப் பதில் சொல்லணும்னியே. கேள்வி கேட்டாத்தானே பதில் சொல்லணும்? ஆண்டவன் என்ன கேள்வி கேட்டான், அதையும் சொல்லு. நீ தர்மபத்தினியாச்சே, புருஷனைக் காப்பாத்த வேண்டாமா? கேள்வியை நீ சொன்னா நான் பதிலைத் தயாரித்து வைச்சுப்பேன். அப்புறம் ஆண்டவன் கேக்கறச்சே 'ஜம்'னு பதில் சொல்லித் தப்பிச்சுப்பேன்'' என்றான்.

''என்னுங்க வெளையாட்டு வேண்டிக் கிடந்தது? உங்க வீட்டிலே வண்டி மாடா உழைச்சுக் கொட்டற பெண்பிள்ளை இத்தனை தூரம் படிச்சுப் படிச்சுச் சொல்லியும் காதிலேயே போட்டுக்கத் தோணலியே! நீங்க ஒரு மனுஷரா?''

அவள் எதிர்பாராமலேயேதான் அந்தக் கடைசி மூன்று வார்த்தைகள் வந்துவிட்டன. இப்போது அந்தக் 'குத்துக்கல்லு'க்குக்கூடக் கோபம் பொத்துக் கொண்டுதான் வரப் போகிறது என்று விலவிலத்துப் போனாள்.

நமச்சிவாயமோ நமட்டுச் சிரிப்பு மாறாமலே பேசினான்: ''பாத்தியா! அதுதான் தரும பத்தினிங்கறது! உன் வாயாலேயே நான் மனுஷன் இல்லே, தேவன்னு ஒப்புக்கிட்டேயில்லியா? நான் தேவனானபடியாலே ஒரு நாளும் தெய்வக் குத்தம் செய்ய முடியாது.''

பொங்கிக் கொண்டிருந்த பால் பாத்திரங்களில் ஒன்றை அடுப்பிலிருந்து இறக்கினான் அவன். அதுதான் தன் வீட்டுக்கென்று அவன் வாங்கியது. ''என்ன, இந்த அடுப்புலே உலைநீர் வைக்கட்டுமாம்மா?'' என்று மனைவியிடம் பரிவொழுக விசாரித்தான்.

''என் வயித்திலேதான் உலை கொதிக்கிறதே!'' என்ற ருக்கு வெங்கலப் பானையில் நீரைச் சரித்து அந்த அடுப்பில் ஏற்றினாள்.

இதற்குள் இன்னொரு அடுப்பில் காய்ந்து கொண்டிருந்த பாலும் பொங்கிற்று. நுரை கட்டி, கொதிது போடச் செய்து அவன் பார்த்துப் பார்த்து வாங்கியிருந்த பால் இது. அந்தப் பாலையே சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

'என்ன வெண்மை? வெண்மையா, பசுமையா?' உலகத்துக்கெல்லாம் அம்மாவாக மடி கனக்கப் பாலைத் தரித்து நிற்கும் பசு அவன் கண் முன் வந்து நின்றது. 'பசுவின் பால் என்பதால்தான் வெண்மையானாலும் அதில் பசுமை கலந்திருக்கிறதோ? பசு, பசுமை — என்ன அழகாகச் சேருகிறது? பச்சைப் பசேன்ற உடம்போடும், மனசோடும் இருப்பதால் பசு என்ற பெயர்தான் எவ்வளவு அழகாகப் பொருந்துகிறது? பசுவைப் பச்சை வகைகளில் — மரம் செடி கொடி வகைகளில்— தான் சேர்க்க வேண்டும். ஆமாம், அதைச் சுயநலம் பிடித்த மற்ற விலங்குகளோடும், மனிதர்களோடும் சேர்க்கக்கூடாது. மரத்தில் ஊருக்கெல்லாம் பழம் பழுப்பது போலவும், செடியில் ஊருக்கெல்லாம் பூப் பூப்பது போலவும், கொடியில் ஊருக்கெல்லாம் காய் காய்ப்பது போலவும் அல்லவா பசு ஊருக்கெல்லாம் பால் பாலிக்கிறது?'

அந்தப் பசுவின் குணத்தை நாமும்தான் எடுத்துக்கொள்வோமே என்று அவனுக்கு ஆசை. பசு வெளிமனிதருக்கும் பால் தருவது போலவே தானும் பாலுக்கு ஏங்கும் ஓரிரு பாலருக்காவது பால் வாங்கித் தர வேண்டும் என்று அவனுக்கு ஆசை.

இந்த ஆசை அவனுக்கு ஏற்பட்டதற்குக் காரணம் ருக்குதான். சொன்னால் ஒப்புக் கொள்ள மாட்டாள். அவள் சொன்னது ஒன்று; அதிலிருந்து அவன் எடுத்துக் கொண்டது முற்றிலும் மாறுபட்ட வேறொன்று.

திருமணமாகி ஆறாண்டுகளாகியும் தாய்மை எய்தாத ருக்கு பிள்ளை வரம் கிடைத்தால் உள்ளூர் தண்டாயுதபாணிக்குத் தினமும் கால்படி பாலபிஷேகம் செய்து வைப்பதாக வேண்டிக் கொண்டாள். தண்டபாணிக்கு அபிஷேகம் செய்வதைவிட இரண்டு ஏழைப் பிள்ளைகளுக்கு அந்தப் பாலை வார்ப்பது அதிகப் பிரயோஜனமாயிற்றே என்று நமச்சிவாயத்தினுடைய சிந்தனை சென்றது. இதுதான் இன்றைய காலை நடப்புக்களுக்கெல்லாம் காரணம்.

நமச்சிவாயத்தை நாத்திகன் என்று சொல்ல முடியாது. 'இருந்தாலும் புத்தியைப் பறி கொடுக்கும் ஆஸ்திகம் தனக்கு வேண்டாம்' என்றிருப்பவன் அவன். சுவாமிக்குப் பாலை அபிஷேகம் செய்வதைவிடப் பாலுக்குத் தவிக்கும் பிள்ளைகளுக்கு அதை அளிப்பதே முறை என்று அவனுடைய புத்தி கூறிற்று. ஓரிரு நிமிஷங்கள் சிலையின்மீது வழிவதைவிட ஒரு குழந்தையின் வயிற்றுக்குள் சென்று அதற்குப் போஷணை அளிப்பதற்கே ஏற்பட்டிருப்பது பால் என்று அவனுடைய அறிவு கூறிற்று.

இப்போதுதான் பிள்ளைக் குழந்தையைப் பெற்றெடுத்துக் கொண்டு ருக்மிணி தன் வீட்டுக்குத் திரும்பியிருக்கிறாள். முன்பு பிரார்த்தித்துக்கொண்டபடி தினமும் காலை இரண்டு ஆழாக்குப் பால் முருகனுக்காக வாங்கும்படி பால்காரனிடம் பேசிவிட்டாள். ஆனால் நமச்சிவாயமோ அந்தப் பாலை முருகனுக்குச் சேர விடமாட்டேன் என்கிறான். எதிர்ச் சிறகில் சிறிது தள்ளி, தாயைப் பறிகொடுத்த இரண்டு பேரக் குழந்தைகளுடன் வசித்து வந்த பொன்னுத்தாயிடம் அந்தப் பாலைத் தருவது என்று அவன் தீர்மானித்தான்.

இதோ, தீர்மானத்தைக் கிரியாம்சையில் நிறைவேற்றியும்விடப் போகிறான். கடக் கட இருக்கும் பால் பாத்திரத்தை மேல் துண்டினால் பிடித்துக்கொண்டு பொன்னுத்தாயின் வீட்டுக்குக் கிளம்பியே விட்டானே!

ருக்மிணிக்கு உள்ளங்காலிலிருந்து உச்சந்தலை வரையில் ஒரு பதைபதைப்பு உண்டாயிற்று. கத்திவிட்டாள்: "முருகனுக்கு நீங்க பதில் சொல்லணும்னேனே! அது தப்பு. உங்களை அவன் கேள்வி கேக்க மாட்டான். அதோ தூளியிலே கெடக்குதே அந்த அறியாக் குழந்தையைத்தான் கேள்வி கேட்டுப் போறான். 'உன் பிரார்த்தனையை ஏன் செலுத்தலே?'ன்னு அதைப் பழிவாங்கிடப் போறான். நீங்க 'ஒழிஞ்சது பீடை'ன்னு பொன்னுத்தாயின் பேரப் பசங்களையே சுவீகாரம் பண்ணிக்குவீங்க!"


நமச்சிவாயம் தயங்கினான். பால் பாத்திரத்தைக் கீழே வைத்தான். அந்த க்ஷணத்தில் ருக்குவின் வயிற்றில் பாலை வார்த்தாற்போல் இருந்தது. பெரிய வார்த்தையாக அல்லவா போட்டு விட்டாள்? யாரும் கலங்க வேண்டியதுதானே?

ஆனால்... நமச்சிவாயம் புத்திபூர்வமாகச் செயலாற்றுபவனாயிற்றே! அவனுடைய அறிவு ஒருசில விநாடிகளிலேயே விழித்துக்கொண்டு பேசிற்று. அதையே அவன் அவளிடம் பேசினான். ரொம்பவும் கத்திவிட்டாளே என்பதால் அவளிடம் பரிவு கொண்டான் போலும், வழக்கத்துக்கு விரோதமாக அவளிடம் காரண காரியம் காட்டிப் பேசினான்.

"ருக்கு! நீ ரொம்ப அசடாயிட்டே! நான் தெய்வக் குத்தம் செய்யறேன்னு சொன்னியே. உண்மையிலே நீதான் தெய்வக் குத்தம் செய்யறே. ஆண்டவனை இப்படிப் பட்ட பழிகாரனாகவா நினைக்கிறே? ருக்கம்மா, கொஞ்சம் நிதானமா யோசிச்சுப் பாத்தா உனக்கே புரியும். முருகன் தனக்கு அபிஷேகம் பண்றதைவிடப் பொன்னுத்தா பேரங்களுக்கு இந்தப் பால் பிரயோசனமானுத்தான் அதிகம் திருப்திப்படுவான்."

அவள் வாயைத் திறந்து ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஆனால் அவள் கண்களிலிருந்து தாரை தாரையாக வழிந்த நீரே அவனுக்குப் பதில் சொல்லிற்று. நமச்சிவாயத்துக்குப் பரிதாபமாகிவிட்டது.

"இதோ பாரம்மா! நீ வேண்டிக்கிட்ட இரண்டு ஆழாக்குப் பாலுக்குப் பதிலா தினம் புஷ்ப கைங்கரியமா நாலு முழம் பூவுக்குக் கட்டளை செலுத்திடறேன். 'பட்ஜெட்' கொஞ்சம் உதையும் என்றாலும் உனக்காக



"வரன் 'பசை'யுள்ள இடம்தானே?"

"சந்தேகமே வேண்டாம். பெரிய பாக்டரியிலே 'கம்' - பசை தயார் பண்றான்னு!"

இதைச் செய்யறேன். பால் அவன் மேலே விழுந்து ஓடிப்போறாப்பிலே பூ ஓடாது. அடுத்த பூஜை மட்டும் அவன் மேலேயே மணந்துக்கிட்டு இருக்கும். பூவுக்கு மனுஷங்க வச்சா என்ன பிரயோசனமோ அதுவே தெய்வத்துக்குச் சாத்தினாலும் கிடைக்கிறது. ஆனா பால் விஷயம் அப்படியில்லே. யோசிச்சுப் பார்த்தா நீயே புரிஞ்சுக்குவே. இதோ பார்—ருக்கு! மொத்தத்திலே ஒண்ணு சொல்றேன். நீ பக்தியா யிரு. வேண்டாமிங்கலே. அதுக்காகப் புத்தியோட இருக்க மாட்டேன்னு அடம் பண்ணாதே. பக்தி வேணும்கிற மாதிரியே புத்தியும் வேண்டாமா?"

பால் பாத்திரத்துடன் அவன் கிளம்பினான். ருக்குவுக்கு 'புத்தி' வந்ததோ இல்லையோ, வேறு வழியின்றிச் சமாதானமடைந்துவிட்டதாக பாவித்துக் கொண்டு, "காப்பி சாப்பிட்டுத்தான் போகலாமே" என்றாள் மூக்கை உறிஞ்சிக் கொண்டே.

"ஆ, அதுதான் சமத்துப் பிள்ளே" என்று 'ஷொட்டு'க் கொடுத்தான் நமச்சிவாயம்.

பூரிப்புடன் பால் பாத்திரத்தை வாங்கிக் கொண்ட பொன்னுத்தா "கொதிக்குதுங்களே" என்றாள். அவளுடைய பேரப் பசங்கள் அது பருகவேண்டிய ஒரு திரவம் என்பதைக் கூடப் புரிந்துகொள்ளாததால், தம்பாட்டுக்கு விளையாட்டோ, சண்டையோ எதையோ செய்து கொண்டிருந்தன. தாயில்லாத அந்தக் குழந்தைகளைக் கண்ட நமச்சிவாயத்துக்குத் தன்னுடைய தருமம் தன்னையும்விடப் பெரியதாகத் தோன்றியது. "ஆமாம்,

உனக்கு விறகு செலவில்லாமல் நானே காச்சிக் கொடுத்திடறேன்'' என்றான். அவனுடைய வார்த்தைகளில் அபிஷேகம் செய்விக்கும் பக்தனின் உணர்ச்சி துடித்தது.

''வேணாமுங்க! ஒங்களுக்கு ஏன் அந்தச் செரமம் வேறே? கரும்பு இனிக்குதுன்னு வேரோட கசக்குவாங்களா?'' என்று கூறிய கிழவி சிறிது நேரம் பேசாதிருந்தாள். பிறகு, ''புள்ளெங்களுக்கு வாயிலே ஒரே புண்ணு. பச்சைப் பாலு நுரையோடு சாப்பிட்டாக் குணமாகும்'' என்றாள்.

''அப்படியே செஞ்சுட்டாப் போச்சு'' என்றான் நமச்சிவாயம்.

ஒருமாதிரி நமச்சிவாயத்தோடு ஒத்துப் போய் மகிழ்ச்சியைத் தேடிக்கொண்டு விட்ட ருக்மிணிக்கு அந்தக் கனவு வந்திருக்க வேண்டாம்! வேண்டாமென்று சொல்லி என்ன பயன்? அவள் கனவு கண்டுவிட்டாள்.

அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்த ருக்குவுக்குத் தான் ஏதோ பயங்கரக் கனவு கண்டதாக மட்டும் தெரிந்ததேயன்றி என்ன கனவு என்று சொல்லத் தெரியவில்லை. தூளியிலிருந்த குழந்தையைத் தன்னிடம் எடுத்து விடுமாறு கணவனிடம் கூறினாள். அதை அப்படியே அணைத்துக்கொண்டு விம்மினாள். குறைத் தூக்கத்தில் விழித்துக் கொண்ட குழந்தை வீல்–வீல் என்று கத்த ஆரம்பித்தது. அதைச் சமாதானப்படுத்துவதற்குள் நமச்சிவாயத்துக்குப் போதுமென்றாகி விட்டது. அதன் பின்னரும் அவன் சமாதானம் செய்வதற்காகக் காத்திருந்தாள் துர்ச்சொப்பனம் கண்ட ருக்கு.

என்ன சமாதானம் சொல்லியும் அவள் தெளிகிற பாடாயில்லை. ''நாளைக்குத் தண்டாயுதபாணி கோயிலுக்குப் போகலாம். பால் அபிஷேகமும் செய்யலாம். முருகனையே நினைத்துக் கொண்டு தூங்கு'' என்று அவன் முடிவாகச் சொன்னான்.

ஆச்சரியம்! முருகனையே நினைத்துக் கொண்டு தூங்கி விட்டாள் ருக்கு.

புத்தி உபயோகப்படாத சமயங்களில் பக்தி உபயோகப்படத்தான் செய்கிறது என்பதை ஒப்புக் கொண்டு அவனும் உறங்கினான்.

மறுநாள் தண்டபாணி சந்நிதியில் குழந்தையை அணைத்த கையையே கும்பிடாக்கிப் பக்திபூர்வமாக நின்றாள் ருக்கு.

அவனுடைய பிரீதிக்காக சுவாமி அபிஷேகத்துக்கென வாங்கிய கால் படிப் பாலுடன் எதிர்ப்புறத்தில் நின்று கொண்டிருந்தான் நமச்சிவாயம்.

உள்ளே பெருமானுக்குத் தீர்த்தம் ஊற்றி அபிஷேகம் செய்து கொண்டிருந்த அர்ச்சகர் குடத்தைக் கீழே வைத்து விட்டு கர்ப்பக் கிருக வாசலருகே வந்து சேவார்த்திகள் மீது பார்வையைச் சுழல விட்டார். 'சரி, இன்னிக்குப் பால் வரல்லேயாக்கும். அவன் அதிர்ஷ்டமும் என் அதிர்ஷ்டத்துக்கு மேலே தான் இருக்கு' என்று முணு முணுத்துக் கொண்டு கருவறைக்குத் திரும்பினார்.

''ஐயரே! இந்தாங்க, இதோ பால்'' என்று செம்பை நீட்டினான் நமச்சிவாயம்.

அதிருஷ்டத்தில் தம்மோடு சுவாமியை ஒன்றுபடுத்திக் கொண்டதாலோ என்னவோ, இப்போது அர்ச்சகர் சிறிது மனம் ஒன்றியே பாலை நிதானமாக அபிஷேகம் செய்தார்.

ஆகா! கருமையாக நின்ற சிலையில் பால் வழிய வழிய ஜீவன் ததும்பும் வடிவமும் தலையிலிருந்து கால்வரையில் வழிந்தது!

முதலில் 'கண்டார்தம் மனம் கவரும் முண்டிதமாம் சிரத்தழகு.'

சிரத்தழகுக்கு விளிம்பு கட்டினாற் போல் தலையைச் சுற்றி அமைந்திருந்த ருத்திராட்ச மணிகள் பாலில் உருவத்தைப் புலர்த்திக் கொண்ட போது பால் துளிகளும் ருத்திராட்சமணிகளாகவே உருண்டு இண்டு இடுக்குகளில் தங்கி மகிழ்ந்தன.

'நீறிடு நெற்றியனு'ன ஆறுமுகனின் நெற்றியில் விபூதிச் சாறாகவே வழிந்தது பால். அவனது நீண்ட புருவத்தையும், கருணைப்பால் சுரக்கும் திருவிழிகளையும், வேல் நுனியோடு பொருந்திய செவி மூலத்தையும், 'சுவாசிக்கிறதோ' என வியக்க வைக்கும் அலர்ந்த நாசியையும், கதுப்புக் கன்னங்களையும், பால் மணம் மாறா முறுவல் செவ்வாயையும், திலகம் தீற்றும் போது பராசக்தி அன்புறப் பிடித்துப் பிடித்து அழுத்தம் பெற்ற முகவாயையும்,

மதுரத்தில் பிறப்பிடமான கண்டத்தையும், ருத்திராட்சமன்றி வேறு இரு ஆபரணமேதும் பூணாத இளந் துறவுத் திருமேனியையும், தண்டம் பிடித்த தளிர்க்கரத்தையும், இடையில் பொருத்திய இடக்கரத்தையும், 'பண்டாய நான்மறைக் கோவணச் சீரை'யும், நிற்க இயலுமோ என்று எண்ணச் செய்யும் நைந்த தொடைகளையும், 'நிற்கச் செய்வேன்' என்று முட்டுக் கொடுக்கும் முழந்தாள் சில்லுகளையும் பால் தடவியும் தழுவியும் கொடுத்து தழுவி விழுந்தது. அவனது கோமள சரணங்கள் மீண்டும் அமுதத்துடன் இணைவதற்கே பால் இழிந்து வந்ததோ என்று எளிய மெய்யடியார்களுக்குத் தங்கள் பாதங்களை தணுத்துப் போனது போன்ற குறுகுறுப்பு ஏற்பட்டது. நமச்சிவாயத்துக்கு இத்தகைய அற்புத அநுபவம் ஏற்படாவிடினும் பால் வடிந்த சல்லாவினுள்ளே குளிர் நீலமாக, தளிர் நீலமாக, மிளிர் நீலமாக நின்ற முருகன் அவனது கண்களில் ஒரு தன்மையை நிறைவிக்கத்தான் செய்தான். கங்கா தீர்த்தமோ, தேனோ, சந்தனமோ, பஞ்சாமிருதமோ எதைக் கொண்டு அபிஷேகம் செய்யினும் சுவாமியின் ஸ்வரூப அழகை உள்ளபடி எடுத்துக் காட்ட கோமாதாவின் அன்புச் சாற்றுக்கு இணையாகுமா என்ற எண்ணம் அவன் மனத்தில் ஓடியது.

வைத்த கண் வாங்காதபடி அபிஷேகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ருக்மிணி அபிஷேகம் நடக்கிறது என்ற ஓர் அழகை அநுபவிப்பது தவிர, அந்த அழகின் அம்சங்களைச் சிந்தித்து ரசிக்கும் நிலையிலே இல்லை.

பாலில் கசிந்து கொண்டு நின்ற பாலன் மீது ஊற்றுவதற்காக ஒரு குடம் நீரைத் தூக்கினார் அர்ச்சகர்.

''இதோ, அபிசேகத்துக்குப் பால் வந்துட்டுதுங்க சாமி'' என்ற குரல் அவரை இழுத்தது. அந்தக் குரல் நமச்சிவாயத்தையும் இழுத்தது.

ஆம், இரண்டு பேரப் பசங்களும் பால் பாத்திரத்தைப் பிடித்து நிற்கப் பொன்னுத்தாதான் வந்திருக்கிறாள் !

''என்ன கிழவி, இன்னிக்கு இந்நேரம் பண்ணிட்டே! அபிஷேகத்துக்குப் பால் இல்லாமப் போச்சேன்னு வருத்தப்பட்டுண்டேன். கடைசியில் இன்னிக்குத்தான் இரண்டு மடங்கு அபிஷேகம் பண்ணிக்கிறான் அதிருஷ்டக்காரன்'' என்று கூறியபடியே அர்ச்சகர் பாலைப் பெற்றுக் கொண்டார்.

மீண்டும் பால் அபிஷேகம் நடைபெற்றது.

இப்போது நமச்சிவாயம் எம்பெருமானைப் பார்க்கவில்லை. அந்த ஏழையர் மூவரையும் தான் பார்த்துக் கொண்டிருந்தான். கிழவி சந்தோஷப்படுவது சரி, இந்தச் சிறுவர்கள் கூட அல்லவா தங்கள் வயிற்றில் சேர வேண்டிய பால் இங்கே விழுகிறபோது குதித்துக் கும்மாளி போடுகிறார்கள்? அவர்கள் வயிற்றில் இந்தப் பால் சேர்ந்தால்கூட இவ்வளவு மகிழ்ச்சி அடைவார்களோ?

''நல்லாப் பாருங்கடா! அந்தத் தேவாதி தேவன்; ராசாதி ராசன் இனமும் ஆண்டிப் பரதேசியான தாம தர்ற பாலுலே முழுவறதைப் பாருங்கடா'' என்று கிழவி அவர்களை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தாள். முருகனைத் தொழுத அதே பாங்கில் இப்போது பொன்னுத்தாளைப் பார்த்துக் கொண்டிருந்தான் ருக்கு. இனம் இனத்தோடு சேர்ந்தது!

''நிறைதான் போட்டாச்சே! இன்னும் என்ன இங்கேயே நின்னுட்டே? பிரகாரம் சுத்திக்கிட்டுச் சந்நிதிக்குத் திரும்பலாம்! அதுக்குள்ளே புஷ்பாலங்காரம் செய்திருப்பாங்க'' என்று மனைவியிடம் தன் தோல்வி தெரியாதபடி ஆண்மையோடு அவசரப்படுத்தினான் நமச்சிவாயம்.

'கடைசியில் பார்த்தீங்களா? பால் அபிஷேகம், புஷ்பக் கைங்கரியம் இரண்டும் உங்களாலேயே நடக்குது!' என்று அவள் தனக்கு மகுடம் சூட்டுவாள் என்று ஆசைப்பட்டுத்தான் புஷ்பாலங்காரம் பற்றிச் சொன்னான்.

ஆனால் ருக்குவோ தன் வாழ்நாளில் கிடைத்த இந்த ஒரே வாய்ப்பை நழுவ விடாமல் அவனை அலட்சியம் செய்து பழிவாங்கி விட்டாள்!

வெளிப் பிரகாரத்தில் கிழவியைப் பின் தொடர்ந்த நமச்சிவாயம், ''பலே, பொன்னுத்தா! பாலைக் காச்ச வேண்டாம்கிறதுக்கு என்னென்னவோ காரணம் சொன்னியே'' என்று சிரித்துக் கொண்டே சொன்னபோது அவள் திடுக்கிட்டாள். உடனே சமாளித்துக் கொண்டாள்.

''அதுக்கென்ன சாமி செய்யலாம்? மனுசங்களுக்கு வவுறு மட்டும் இல்லையே!'' என்று மாத்திரம் பதில் கூறினாள். அதற்கு மேல் அவள் எதுவும் பேசவில்லை.


அவள் கூறவேண்டியது இன்னும் எவ்வளவோ இருந்தது. சுவாமியின் மீது சில விநாடிகள் பால் விழுந்தால் போதுமா என்ற கேள்விக்கு அவள் பதில் சொல்லியிருக்க வேண்டும். சங்கீத சஞ்சாரம் தோன்றும் போதே மறைந்தாலும் அதனால் ஏற்படும் இன்பம் சாசுவதமாக இல்லையா? தொண்டையில் சில விநாடி பாய்வதால் பால் தருகிற ருசியைவிட இந்தச் சில விநாடிகளில் அதிக ருசி தர முடிந்தது என்பதை அவள் சொல்லியிருக்க வேண்டும். வயிற்றில் ஊறிப் போஷணை தருவதைவிட அதிகமாகவே அதனால் உள்ளத்தில் ஊறிப் போஷணை தர முடிகிறது என்றும் சொல்லியிருக்க வேண்டும். அழகுக்கும் பொருளாதாரத்துக்கும் சுடுகட்டுவதற்கு 'ஈக்வேஷன்' போட முடியாது என்பது பற்றியும், நெஞ்சத்துக்குப் பஞ்சம் வராத கொடைவள்ளர்கள் பலர் பரம ஏழையரிடையே இருப்பது பற்றியும் பொன்னுத்தா பேசியிருக்க வேண்டும். ஆனால் அப்படியெல்லாம் பேசவேண்டுமானால் அவளுக்கு ஒன்று தேவை. 'பக்தி வேணும் என்கிற மாதிரியே புத்தியும் வேண்டாமா?' என்று நமச்சிவாயம் புகழ் பாடிய அந்தப் 'புத்தி'தான் தேவை.

ஆனால் இப்போதோ நமச்சிவாயம் கேட்டுக் கொண்டான்: 'புத்தி அவசியம்தானா?'

பிரகாரத்தில் கேட்பாரின்றிப் போய்க் கொண்டிருந்த ஒரு பசு அவனுக்கு விடை சொல்லுவது போல் அதன் குறுங்கத் தலையை ஆட்டியது.



பத்திரமாயிருக்க
'எவரெடி'
டார்ச் ஒன்றை
எடுத்துச் செல்லுங்கள்!
ரூ. 3.50 மட்டுமே
EVEREADY
EVEREADY
எவரெடி



அத்தியாயம் 31

சூறாவளி சுற்றுப்பயணம்

ஒருவகையில் தேர்தலில் தங்கப்பனுக்கும் தீனதயாளுவுக்கும் இடையில் நேரடிப் போட்டி என்றே சொல்லிவிடலாம். தீனதயாளு சத்தியபுரி பார்லிமெண்டரி தொகுதிக்கு நின்ற போதிலும் அவரை எதிர்த்தவர் சுற்று வட்டாரத்தில் அதிகமான செல்வாக்கு பெற்றவரல்ல. அதே போல் சத்தியபுரி அசெம்பிளி தொகுதிக்குத் தங்கப்பனை எதிர்த்துப் போட்டி இட்டவரும் மக்களிடையே பெருமளவு மதிப்பு பெற்றவர் என்று கூறிவிட முடியாது. ஆகவே அவ்விருவரது வெற்றி தோல்வியும், தங்கப்பன் தீனதயாளு ஆகியோருக் கிடையில் நடக்கும் பலப் பரீட்சையைப் பொறுத்துத் தான் இருந்தது. இத் தொகுதிகளில் போட்டியிட்ட மற்றும் ஓரிருவர் தங்கள் 'டெபாசிட்டு'களை இழந்து விடுவார்களென்று இப்போது முதலே தீர்மானமாகிவிட்டது.

தங்கப்பன் தேர்தலில் நிற்கத் தீர்மானித்து விட்டான் என்றதும் கோவையிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் இருந்த சில சிறிய பெரிய தொழில் பிரமுகர்கள் அவனைக் காணவந்து வணக்கமளித்தார்கள்.

"இந்த நாட்களில் ஏராளமான கட்டுப்பாடுகள் காரணமாகத் தொழிலோ, வியாபாரமோ செய்வது எவ்வளவு கஷ்டமாக இருக்குது. அதனால் எங்களில் ஒருவரான நீங்கள் தேர்தலுக்கு நிற்பது எங்களுக்கு சந்தோஷம், பெருமை. இப்படி நம்மில் பலர் முன்வந்தால்தான் நமக்கு விடிவு காலமும் ஏற்படும்" என்றார்கள். தேர்தலுக்கு ஆகும் செலவுகளுக்காக ஓரளவு பணமும் தந்தார்கள். நன்றியுடன் ஏற்றுக்கொண்டான் தங்கப்பன்.

"நன்றியாவது ஒண்ணாவது? இருக்கட்டுங்க. ஓர் அரசியல்வாதி தேர்தலுக்கு நிற்பதானு எவ்வளவு செலவழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது இன்னைக்குன்னு எங்களுக்குத் தெரியாதா? பிறகு எம். பி.யாகவோ எம்.எல்.ஏ.யாகவோ இருக்கறச்சே அவனுக்கு அரசாங்கம் கொடுக்கிற தொகை என்னன்னு பார்த்தா இரண்டுக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருக்கும். ஆனாலும் அரசியலைத் தவிர வேறு தொழிலோ, வியாபாரமோ வருமானமோ ஏதும் இல்லாதவங்க ஏராளமா கடன் வாங்கியாவது தேர்தலுக்கு நிற்கத் தயங்கறதில்லே. ஒன்றிரண்டு வருஷத்திலே அவங்க வாழ்க்கை வசதிகள் மளமளன்னு பெருகிடறது. எதனால் எப்படின்னு எவனாவது யோசிக்கிறானா? அவனைத் தியாகி, மக்களுக்காகச் சேவை புரிகிறவன் என்றுங்க" என்று கூறி அவர்களில் ஒருவர் குறைப்பட்டுக் கொண்டார்.

அவர் விட்ட இடத்தில் தொடங்கி இன்னொருவர் பேசினார்: "அதே சமயத்தில் நம்மைப் போல ஒரு நூறு நூற்றைம்பது பேர்களுக்கு வேலை வாய்ப்பளித்து அத்தனை குடும்பங்களுக்கு வாழ்வளிக்கிறோமே அதை மறந்துட்டு, முதலாளி, பண மூட்டை அப்படின்னு பட்டம் சூட்டறது. லாப நோக்கம் இருந்தாலும் நாம செய்யறதும் சமூக சேவைதானே? அதை எவன் நினைச்சுப் பார்க்கிறான்? நம்மைப் போல் கொஞ்சம் வசதி படைச்சவங்க லாபம் கண்டால் மட்டும் போதாது. இன்னும் பரவலா நம் வட்டாரத்துக்கு நன்மை செய்யணுங்கிற உத்தேசத்திலே தேர்தலுக்கு நிற்பதையும் அதுக்காகச் செலவழிக்கறதையும் புரிஞ்சுக்க முடிகிறது. பணம் பண்ணுகிறதற்காக இவன் அரசியலில் இறங்குகிறவனில்லையே!"

"ஓரளவு பண வருவாய் உள்ளவன் அதிகாரத்தில் இருந்தால் அந்த அதிகாரத்தை அவன் துஷ்பிரயோகம் செய்ய மாட்டான் என்கிறீங்களா?" என்று கேட்டான் தங்கப்பன். "அப்படி ஒன்னும் முடிவு கட்டிவிடாதீங்க. இவன் வியாபாரத் தொழில் நுணுக்கமெல்லாம் நல்லாத் தெரிஞ்சவனானதாலே வெறும் அரசியல்வாதியை விட இவன் இன்னும் சாமர்த்தியமா தனக்குச் சாதகமானதையெல்லாம் செய்துக்கிட வாய்ப்பிருக்குது!"

"இதற்கு நேர்மாறாக ஒருவன் வியாபாரத் தொழில் நுணுக்கங்களைப் புரிஞ்சுக்கிட்டு அனுபவப்பட்டிருக்கிறதாலேயே அந்த அனுபவ அறிவை நாட்டின் தொழில், வியாபார வளம் பெருகப் பயன்படுத்தலாமில்லையா?" என்று குறுக்கிட்டார் மாருதி. "அந்த விதத்தில் அவன் அரசியலை மட்டுமே தொழிலாகக் கொண்டவனை விடச் சிறந்தவன்தானே?"

"ஆகக் கூடி அடிப்படையிலேயே ஒருவனுக்கு நேர்மை, ஒழுக்க உணர்ச்சி இருக்க வேண்டும். மற்றப்படி அவன் அரசியலையே தொழிலாகக் கொண்டவனு அல்லது வேறு

தொழில் நடத்தியபடியே அரசியலில் இறங்கு கிறவரு என்பது பிரச்சினை இல்லே."

'வாழ்நலம்தான்' என்று வழிக்கு வந்தார்கள் அவரைக் காண வந்தவர்கள். "அது எப்படியானாலும் நாங்க பணம் உதவினது மட்டும் வெளியே இருக்கும் யாருக்கும் தெரிய வேண்டாம்" என்று கூறி விடைபெற எழுந்தார்கள்.

"ஏன்? யாருக்காகப் பயப்படுகிறீர்கள்?" என்று கேட்டான் தங்கப்பன்.


"எங்க அனுதாபம் எல்லாம் உங்ககிட்டே தான் இருக்குது; ஆனால் எங்கள் வியாபாரமோ, தொழிலோ தடையில்லாமெ நடக்கணு மென்கிற கவலையும் உண்டு பாருங்க!"

"அதனால் பயமாகவும் இருக்கிறதாக்கும்" என்று கேட்டுச் சிரித்தான் தங்கப்பன். "நாமே சிருஷ்டி செய்த அதிகார பூதத்தைக் கண்டு நாமே பயப்படுவதா? வெட்கக் கேடுதான்!

"இதோ பாருங்க! நீங்க கொடுத்த பணத்துக்காக மட்டும் நான் உங்களுக்கு நன்றி செலுத்தவில்லே. அத்துடன் கூடப் பிரமுகர்களாகிய உங்களது பரிபூரணமான ஆதரவு எனக்கு இருப்பதாக மக்களிடம் எடுத்துச் சொன்னா, அவங்களுக்கு என்னிடம் உள்ள மதிப்பும் நம்பிக்கையும் மேலும் பெருகும், பலப்படும் என்ற நோக்கத்திலேயே பணத்தைப் பெற்றுக்கிட்டேன். இந்தாங்க இந்தப் பணத்தைக் கொண்டுபோங்க. என்றைக்குத் தைரியமாக வெளிப்படையாக என்னை ஆதரிக்க முற்படுகிறீங்களோ அன்றைக்கு உங்க பண உதவியையும் ஏற்றுக்கிடறேன். அது வரை மானசீகமான உங்களுடைய அனுதாபமும் ஆசீர்வாதமுமே எனக்குப் போதும்!"

தங்கப்பனுடைய பேச்சால் வீரம் பெற்றவர்களைப் போல் அந்த வர்த்தகப் பெரும் புள்ளிகள் ஒரு கணம் தயங்கினார்கள். ஒரே ஒரு கணம்தான். அடுத்த வினாடியே கோழைகளாக மாறி வந்த வழியே திரும்பினார்கள்!

தேர்தல் தினம் நெருங்கநெருங்கப் பிரசாரம் பலமாக இருந்தது. தினதயாளு கிராமம் கிராமமாகத் தமது காரிலே சென்றார். ஒவ்வொரு கிராமத்திலும் பெரிய மனிதராக மதிக்கப்பட்டவர் யார் என்பதற்கான பட்டியல் அவரிடம் இருந்தது. அமெரிக்காவின் வழுவழுப்பான உயர்ந்த சாலைகளில் ஓடுவதற்காகத் தயாரான அவரது பிரும்மாண்டமான கப்பல் போன்ற கார் நூற்று ஐம்பது மைல் வேகத்தில் இயங்கவேண்டிய தனது சக்தியைப் பாரத நாட்டுக் கிராமப்புறங்களின் மேடு பள்ளங்களில் ஏறி இறங்குவதிலும் குண்டு குழிகளில் விழுந்தெழுவதிலும் வாய்க்கால் வரப்புக்களைக் கடப்பதிலும் செலவிட்டுக் கொண்டு பரிதாபமாக ஊர்ந்தது. கிராமத்தில் செல்வாக்குள்ள குறிப்பிட்ட அந்த மனிதரின் வீட்டு வாசலில் நின்றது. அந்தக் காரைக் கண்டதுமே இன்னாைப் பக்கம் எட்டிப் பார்த்தவர்கள் வாயைப் பிளந்தார்கள். அப்புறம் அவர்கள் சற்றும் எதிர்பாராத விதமாக மந்திரியே தங்கள் வீடு தேடி வந்திருக்கிறார் என்றதும் அவர்களுக்குத் தலை கால் புரியவில்லே. வரவேற்பு எதற்கும் காத்திராமல் "முத்துசாமி வீடு இதுதானே?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தார் தினதயாளு. முற்றத்தினருகிலிருந்த கயிற்றுக் கட்டிலில் அவர் உட்கார்ந்தார். தம்மைச் சுற்றிலும் நின்ற கூட்டத்தினரில் முத்துசாமி யாரென்று விசாரித்துத் தேடிக் கண்டுபிடித்து



நாணமும் திகிலும் மிக ஒரு பக்கமாக ஒடுங்கி நின்ற அவரைக் கையைப் பிடித்து இழுத்துத் தம் அருகில் உட்கார வைத்துக் கொண்டார்.

அப்போதுதான் பேசுவதற்குக் கொஞ்சம் தெம்பு பெற்றவர் போல, "இந்தக் குடிசை ரொம்பவும் பாக்கியம் செய்திருக்குதுங்க" என்றார் முத்துசாமி. அவர் குரல் கீச்சென்று எப்படியோ ஒலித்தது பதற்றத்தில்.

"நம்ம தொகுதியில் உள்ள எல்லாக் குடும்பங்களையும் நேரில் சந்திச்சு அறிமுகம் செய்துக்கிடணும்னுதான் எனக்கும் ஆசை. ஆனால் அதுக்கெல்லாம் பொழுது எங்கே இருக்கு? இந்தப் பதவியை வகிச்சுக்கிட்டுப் பட்டணத்திலே பைல்களைப் புரட்டவே பாதி நாள் ஆயிடுது. அதுக்கப்புறம் மேல் சபை, கீழ் சபை நடவடிக்கைகள், கமிட்டி மீட்டிங்குகள், பொதுக்கூட்டங்கள் இப்படியாக வருஷம் முழுதும் ஓடிப் போயிடுது. இந்தப் பக்கம் வரவே சமய சந்தர்ப்பம் நேர்றதில்லே" என்று இத்தனை நாட்களாக இந்தக் கிராமத்தை எட்டிப் பாராமலே இருந்துவிட்டுத் தேர்தல் சமயத்தில் மட்டும் வருகிறீரே என்று யாரும் கேட்காத கேள்விக்குத் தாமே பதில் கூறினார் தினதயாளு. தொடர்ந்து முத்துசாமியின் முதுகைத் தட்டிக் கொடுத்தபடியே, "அதனால் உங்களைத்தான் நம்பியிருக்கிறேன் நான். இந்தக் கிராமத்திலே மொத்தம் முந்நூற்று ஐம்பத்திரண்டு

வோட்டுக்கள் இருக்குது. அது முழுக்க நம்மைச்சேர வேண்டியது. அதுக்கு நீங்கதான் பொறுப்பு. 'சரி'ன்னு ஒரு வார்த்தை சொல்லுங்க; நான் கிளம்பறேன். நேரமாகுது.''

''போகலாம் இருங்க; வராதவங்க வந்திருக்கீங்க!'' என்ற முத்துசாமி, ''இந்தா கற்பகம்!'' என அழைத்துக் கொண்டே, தமது மனைவியிடம் சென்று அவள் காதில் ஏதோ கிசுகிசுத்தார்.

''காப்பி, டீயெல்லாம் ஒன்னும் வேண்டாங்க. செண்பகபுரம் சேகரன் வீட்டிலே காப்பி சாப்பிட்டுட்டுத்தான் வரேன்.''

''அப்போ கொஞ்சம் மோராவது சாப்பிடுங்க'' என்றார் முத்துசாமி.

அவர் கொடுத்ததைத் தினதயாளு தமது சிரமத்தை மறைத்துக்கொண்டு குடித்துவைத்தார். காப்பியும் டீயும் மோரும் இளநீரும் சோடாக் கலர்களும்



அவர் வயிற்றில் ஒன்று கலந்து கலகம் செய்து கொண்டிருந்தன. அதை அடக்கக் காரில் ஏறிய பின் ஒரு மாத்திரையை விழுங்கிக் கொள்ளலாம். இப்போது இவர்களைத் திருப்திப்படுத்துவது அல்லவா முக்கியம்?

இதே போல் இருபத்தைந்து கிராமங்களுக்கு ஒரு வாரத்தில் விஜயம் செய்தார் தினதயாளு. பட்டியலின்படி அரையே அரைக்கால்வாசி கூடத் தீர்ந்தபாடில்லை. அவருக்குத் தலையைச் சுற்றத் தொடங்கியது. 'பகவான் பாரத நாட்டை இன்னும் கொஞ்சம் சின்னதாகப் படைத்திருக்கக் கூடாதா?' என்றுகூட எண்ண ஆரம்பித்து விட்டார் அவர். கிளிப்பிள்ளை போல் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரே விஷயத்தைச் சொல்லிச் சொல்லி அவருக்கு அலுத்துவிட்டது. உடலிலும் சோர்வு புகுந்து கொண்டது. நமக்கும் வயதாகிக் கொண்டு வருகிறது என்ற நினைவு முதன் முதலாக அவருக்கு ஏற்பட்டது! "சத்தியபுரிக்கு விடு: இரண்டு நாட்கள் ஓய்வு எடுத்துக் கொண்டு அப்புறம் வேணுமானால் மறுபடியும் புறப்படலாம்" என்றார்.

அத்தியாயம் 32

தகிடுதத்தங்கள்

"இந்த அப்பாவுக்குப் படிக்கப் படிக்கச் சொன்னாலும் பிரயோஜனமில்லை" என்று குறைப்பட்டுக்கொண்டாள் உஷா. "இரண்டு நாளா தலைவலி காய்ச்சல்னு படுத்த படுக்கையாகக் கிடக்கிறார். யார் இவரைக் கிராமம் கிராமமாகச் சுற்றி வேதனையை விலைக்கு வாங்கிக்கிடச் சொன்னது? அவர் மதிப்பு என்ன, அந்தஸ்து என்ன! எதற்காக ஊர் ஊராகப் போய்க் கெஞ்சணும்? பணத்தை விட்டெறிந்தால் காரியம் தன்னால் நடக்கிறது. எத்தனை பிரசங்கங்கள் புரிந்தாலும் கொள்கை விளக்கங்களை விளாசித் தள்ளினாலும் கடைசியில் இந்த ஸ்ரீமான் பொது ஜனத்துக்குப் புரிகிற பாஷை அது ஒன்றுதான்!"

திகைப்பும் வெறுப்பும் மிக அவளைப் பார்த்தான் தங்கப்பன். 'அப்பப்பா! இந்தப் பெண்ணுக்குத்தான் எத்தனை துணிச்சல், எவ்வளவு அகம்பாவம்?' பொங்கிய கோபத்தை அடக்கிக் கொண்டு நயமாகப் பேசினான். "மக்களை அப்படி இழிவுபடுத்திக் கூறாதே உஷா! புனிதமான தமிழ் மொழியிலே விஷயங்களை எடுத்துச்சொன்னாலும் அவர்களுக்குத் தெளிவாகப் புரியும். ஆனால் அது அவர்கள் காதுகளில் விழாதபடி வேறு விதமாக ஆசை காட்டி அப்பால் இழுத்துப் போவதுதான் முதல்தரமான அயோக்கியத்தனமே ஒழிய வறுமையில் வாடும் அவர்கள் அந்த ஆசைக்கு அடிபணிவது தவறானாலும் இயற்கைதான். ஆனால் உஷா, நீ இதையெல்லாம் இவ்வளவு அலட்சியமாகப் பேசக் கூடாது. யாராவது கேட்டுக்கிட்டிருந்தால் வழக்குத் தொடுத்து உன் அப்பா தேர்தலில் பெறக் கூடிய வெற்றியையும் இல்லையென்றாக்கிவிட முடியலாம்!"

"அடேயப்பா! பயமுறுத்தறியே! நான் ஏதோ வீடு வீடாகப் போய் நோட்டுக்களை விநியோகம் செய்துவிட்டு வந்ததாக ஒப்புக் கொண்டு கையடித்துச் சத்தியம் செய்துவிட்டது போலல்லவா பதறுகிறே நீ? நாம் ஈடுபட்டிருப்பது பிரசாரமா, பணமா எது அதிக வோட்டுக்களைப் பெற்றுத் தரும் என்கிற ஒரு தர்க்கம் — 'லாஜிகல் ஆர்க்யூமெண்ட்' —அவ்வளவுதான். மேலும் அப்பா மீது வழக்காட யாருக்குத் தைரியம் வரும்? நீ முன்வந்தால்தான் உண்டு! ஆனால் நீ நேர்மையானவனாச்சே! ஆதாரமில்லாமல் யார் மீதும் வீண்பழி சுமத்த மாட்டியே! அப்படிச் செய்துட்டா அரிச்சந்திரன் பரம்பரையிலே வந்த உன்னுடைய கௌரவம் என்னவாகிறது?" கலகலவென்று சிரித்தாள் உஷா.

"கேலியும் கிண்டலும் கிடக்கட்டும். உஷா! நீ எதற்காக இப்போது இங்கே வந்தாய்? அதைச் சொல்லு!"

தாமரைத் தொழிலகத்தில் தங்கப்பனின் காரியாலய அறையில் அவன் மேஜை மீது ஓர் ஓரமாக ஒய்யாரமாக அமர்ந்திருந்தாள் உஷா. ஒரு கால் தரையில் ஊன்றி உடலின் பாதிப் பளுவைத் தாங்க மற்றொரு கால் முழங்காலிலிருந்து பாதம்வரை காற்றில் ஊசலாட, அதன் மறுபகுதி மேஜையின் விளிம்பில் பதிந்து தன் வடிவத்துடன் ஒன்றி வழியும் வழவழப்பான ஜார்ஜெட் சேலையினூடே அழகு துலங்கக் கிடந்தது. அதன் மீது அவள் தனது இடது முழங்கையை ஊன்றி அந்தப் பக்கமாகவே இலேசாகச் சாய்ந்து தங்கப்பனுடைய முகத்தருகே குனிந்து அளவளாவிக் கொண்டிருந்தாள். ஃபாக்டரி வெறிச்சோடிக் கிடந்த மாலை நேரம்! தொழிலகத்தைப் பூட்டிக் கொண்டு தங்கப்பன் வீட்டுக்குக் கிளம்ப வேண்டிய சமயம்.

"நீ இங்கே எதற்காக இப்போது வந்தாய்?" என்று தங்கப்பன் கேட்டதும் அவள் குறும்புப் புன்னகையுடன் "சொல்லட்டுமா?" என்று கேட்டவாறே அவனை மேலும் நெருங்கிக் காதோடு காதாகக் கூறுவதுபோல், "சரித்திரக் கதைகளிலும் நாவல்களிலும் நீ படிச்சதில்லையா? கதாநாயகி எதிரியின் பாசறைக்குள் போய் நயமாக உறவாடி உளவறிந்து வந்தாள் என்பதாக? அது போலத்தான் இப்போது நான் 'ஆப்போஸிட் காம்பு'க்கு வந்திருக்கிறேன். உன் தேர்தல் முஸ்தீபுகளை யெல்லாம் அறிந்து கொண்டு அவற்றை முறியடிக்கப் போகிறேன்!" உஷா கலுக்கென்று நகைத்தாள்.

அவளுடைய செருக்கும் அந்தரங்கமாகப் பேசும் பாவனையும் தன் கழுத்தில் உறவாடிய அவள் மூச்சுக் காற்றும் சிறிய வெள்ளி மணி போன்ற நாதமெழுப்பும் அவள் சிரிப்பும் அவன் முன்னால் அவள் ஒய்யாரமாகச் சாய்ந்து கிடந்த விதமும், அவள் ஆடைகள் இருந்த நிலையும், அவள்

பூசியிருந்த உயர்தரமான செண்டின் நறுமணமும் தங்கப்பனைப் பாடாய்ப்படுத்தின.

பற்களை நறநறவென்று கடித்தபடியே அவன் சக்கரம் பதிக்கப் பெற்ற தன் நாற்காலியை உட்கார்ந்திருந்தவாறே பின்னுக்குத் தள்ளி நகர்த்து கொண்டான். 'அதே சமயத்தில் வெறுமையை விரட்டியடிக்க அவள் ஏதேதோ செய்கிறாள்' என்று மாருதி கூறிய மொழிகள் அவனுக்கு நினைவு வந்தன. 'அது எவ்வளவு உண்மை! ஒவ்வொரு சமயம் பல்லாண்டுகளாக வளர்ந்து வந்திருப்பது போன்ற அத்தனை வெறுப்பை உமிழும் இவள், வயதிலும் தோற்றத்திலும் நடத்தையிலும் மிக முதிர்ந்தவளாகக் காணப்படுவதும் இதோ இப்போது உளவறிய வந்திருப்பதாகக் கூறி விளையாடுகிறாளே — இதுபோல் சில சந்தர்ப்பங்களில் குழந்தைத்தனமாக நடந்து கொள்வதும் எல்லாம் பிடிப்பில்லாமல் உளுத்துப்போன தன் வாழ்க்கைக்குப் புத்துயிர் ஊட்ட அவள் செய்யும் பயனற்ற முயற்சிகள்தானே?'

கனிந்த பார்வையுடன் அவளை நோக்கினான் தங்கப்பன். ''என்னுடைய தேர்தல் ஏற்பாடுகளைப் பற்றிச் சொல்லட்டுமா, உஷா! கேட்டால் நீ ரொம்ப சந்தோஷப்படுவாய்! முதலாவதாக எனக்கு வலது கரம் போல் விளங்குகிறார் என்பதால் மாருதி ஸாரின் நிலத்தில் இரவோடு இரவாகச் சிலபேர் புகுந்து பயிர் பச்சைகளையெல்லாம் அழித்து நாசம் செய்துவிட்டார்கள். அவர்கள் யார் என்று இதுவரையில் தெரியவில்லை; போலீஸில் கொடுத்த புகார் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தகவல் இல்லை...''

''அப்புறம்?'' என்று கண்களை அகல விரித்து ஆர்வத்துடன் கேட்டாள் உஷா.

''நேற்று சத்தியபுரி மைதானத்தில் நான் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுவதாக இருந்தேன். மைக் முன்னால் நான் போய் நின்றதுமே 'எங்கள் பெட்டிக்கு ஓட்டுப் போடுங்க' என்று கோஷமிட்டபடி மாற்றுக் கட்சியினரின் கால்நடை, சைக்கிள் ஊர்வலம் ஒன்று கூட்டத்தின் இடையில் புகுந்து சென்று குழப்பம் விளைவித்தது. சட்டமும் காவலும் அவர்களைத் தடுத்து நிறுத்த முயன்றதாகத் தோன்றவில்லை.''

''அடி சக்கை! பிறகு?'' என்று முத்துப் பல் வரிசை பளிச்சிடக் கைகொட்டிச் சிரித்து முன்னுக்கு நழுவி நகர்ந்தாள் அவள். தங்கப்பன் தன் நாற்காலியை மேலும் பின்னுக்குத் தள்ள இயலாமல் சுவர் தடுத்தது.

''என் தொழிலாளர்களுள் என் சார்பில் உழைக்க வேண்டும் என்று கருதி முன்வந்துள்ள பத்தே பேர்களில் ஒருவன் நேற்று போலீசாரால் கைது செய்யப்பட்டு லாக்கப்பில் இருக்கிறான். தேர்தலில் எனக்கு எதிராகப் போட்டியிடுகிறாரே ஆராவமுதன் அவர் வீட்டின்மீது இவன் கல்லெறிந்து பத்துப் பதினைந்து ஓடுகளை உடைத்துவிட்டானாம். குற்றச்சாட்டு ருசுவாகிறதோ இல்லையோ, இரண்டு நாட்கள் அவன் லாக்கப்பில் இருந்துவிட்டு வந்து தன் அநுபவங்களையெல்லாம் சொன்னால் மீதமுள்ள ஒன்பது பேர்களும் என் வெற்றிக்காக வேலை செய்யப் பயந்து தயங்குவார்களே? அவனை உள்ளே தள்ளியதன் நோக்கமும் அதுதானே?''

''நீ பேசுகிற தொனியைப் பார்த்தால் ஆராவமுதன் தாமே தம் வீட்டுக் கூரை மீது ஏறி ஓடுகளை உடைத்துவிட்டு அந்தப் பக்கமாகப் போன உன் வேலையாளைப் பிடிக்க வைக்கப் போலீசாரிடம் கொடுத்து அவன் தான் கல்லெறிந்ததாகச் சொன்னார் என்பாய் போலிருக்கிறதே!''

''நான்தான் ஆதாரமின்றி யார் மீதும் வீண் பழி சுமத்த மாட்டேன் என்று நீயே சொல்லியிருக்கிறாயே உஷா! உங்களிடம் பணம் இருக்கிறது; அதிகார பலம் இருக்கிறது. மந்திரி வீட்டிலிருந்து யாரேனும் சப் இன்ஸ்பெக்டர் சுந்தரத்தை டெலிபோனில் கூப்பிட்டுப் பனைப்பட்டவனை இரண்டு நாட்கள் லாக்கப்பிலே வைச்சிருந்து விடுங்கன்னு சொன்னால் உத்தரவை எழுதிக் கொடுங்கன்னு சுந்தரம் திருப்பிக் கேட்க முடியுமா? அப்படிக் கேட்டால் அப்புறம் அவர் உத்தியோகம்தான் நீண்ட நாளைக்கு நிலைக்குமா? அல்லது கைதான ஏழைக்குத்தான் அநீதியை எதிர்த்துப் போராட மனமும் பணமுமிருக்குமா? பணமும் அதிகார பலமும் எதையும் சாதிக்கும் உஷா!''

''இரண்டுமே கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கப் பட்டவை. பணமும் பதவியும் சம்பாதிக்கும் சாமர்த்தியம் உள்ளவங்களைப் பார்த்து அதற்குக் கையாலாகாதவர்கள் பொறாமைப்படுவது இயற்கை! என் அப்பாவுக்கு அறிவும் திறமையும் இருப்பது கூட உன் கண்களை உறுத்தலாம். ஆனால் ஏழைகளுக்கு வாழ்வளிப்பவர் என்று மக்களால் அவர் போற்றப்படுகிறார். அதை மறந்துவிடாதே!''

''உஷா! நான் என்ன சொல்கிறேன் என்கிறது உனக்கு நல்லாத் தெரியும். என் ஃபாக்டரியிலே கலகம் உண்டாக்கினதிலேயிருந்து தொடங்கி வரிசையா நீ பல தவறுகளைச் செய்து வருகிறாய். அதையெல்லாம் தர்க்கத்தினாலேயே நீ சரியாக்கிவிட முயலலாம். என்றாலே அந்தக் குற்றங்களையெல்லாம் சட்டப்படி நிரூபிக்க முடியாமலும் போகலாம். ஆனால் இதற்கெல்லாம் பலனை என்னைக்காவது ஒரு நாள் நீ அனுபவிக்கத்தான் தீரணும்; ஆண்டவனை ஏமாற்ற யாராலும் முடியாது!''

''ஆகா! அருள்வாக்கு!'' என்றாள் உஷா. ''ருத்திராட்ச மாலையும் காவி உடையும்தான் இப்போ தேவை உனக்கு!'' என்று பரிகாசமாகக் கரம் கூப்பி வணங்கினாள்.

''உஷா! நீ என்ன சொன்னாலும் எனக்குக் கோபம் ஏற்படாது. உனக்காகப் பரிதாபப் படுகிறேன் நான்.''

உஷா இலேசாகச் சிரித்தபடியே தன் வலது கரத்தின் ஆள்காட்டி விரலை அவன் மூக்கின் மேல் வைத்து அசைத்தபடியே, ''நோ! நோ! நோ! நோ! கூடாது! பரிதாபப் படவே கூடாது! மனசை இரும்பாக்கிவிடு. இளக விட்டால் அது ஆபத்திலே வந்து முடியும்! அப்புறம் எனக்கே நிரந்தர அடிமையாகவும் ஆகிவிடுவாய்!'' என்றாள்.

கரத்தை ஒதுக்கப் போனவன் ஏதோ உணர்ச்சி வசப்பட்டவனாக அதனை இறுகப் பற்றிக் கொண்டான். அவள் வெட்கப்பட்டு விடுவித்துக்கொள்ளவும் முயலவில்லை; கோபத்துடன் உதறித் தள்ளவும் முற்படவில்லை.

(தொடரும்)


எல்லா வேலையும் என் தலையிலே!
எல்லா வேலையும் நானே செய்ய வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள்... எனக்கோ ஒரே சோர்வு. குழந்தைகள், சமையல், வீட்டுவேலை எல்லாவற்றையும் எப்படி நானே சமாளிக்க முடியும்...
என் கணவர் ஒரு நாள் ஹார்லிக்ஸ் வாங்கி வந்தார். ஹார்லிக்ஸ் பருகினால் இழந்த சக்தியை மீண்டும் பெறலாம் என்றார்!
Horlicks
இப்பொழுது என்னைப் பாருங்கள்! திட ஆரோக்கியத்துடன் தெம்பும் சுறுசுறுப்புமாய் இருக்கிறேன். எல்லாம் ஹார்லிக்ஸ் செய்த நன்மை.
Horlicks
போஷாக்குக் குறைவினால் ஏற்படும் சோர்வும் தளர்ச்சியும் நீங்க ஹார்லிக்ஸ் பருகும்படி டாக்டர்கள் சிபாரிசு செய்கிறார்கள். ஆடைச் சத்து மிகுந்த பால், கோதுமை மாவு, மால்ட்டட் பார்லி இவற்றின் போஷாக்குச் சத்துக்களை ஒருங்கே கொண்ட ஹார்லிக்ஸ் இழந்த சக்தியை மீண்டும் பெற உதவுகிறது என்பது டாக்டர்களுக்குத் தெரியும்.
ஹார்லிக்ஸ்
அதிக சக்தி
அளிக்கிறது!

4

ஒருவேளை கோடை விடுமுறை ஆரம்பிப்பதற்கு முன்பே அந்த மகத்தான தீர்மானம் செய்யப் பட்டிருக்கலாம். அது எப்படியோ, குடும்பம் சைதாப்பேட்டைக்குத் திரும்பி வந்த சில வாரங்களுக்கெல்லாம்தான் சுப்புலக்ஷ்மிக்கு அவ்விஷயம் தெரிந்தது.

ஒரு நாள் அவள் தகப்பனார் "இன்று முதல்தான் உண்மையில் உன் கல்வியைத் தொடங்கப் போகிறோம்" என்றார்.

அவள் அவரை ஆச்சரியத்துடன் பார்த்தாள். அவள் கல்விதான் முன்பே

சேவைக்கு ஒரு சகோதரி



மோனிகா ஃபெல்டன்

— அநுத்தமா

இரண்டு முறை முடிவு பெற்றுவிட்டதே? சைதாப்பேட்டையின் ஆரம்பப் பள்ளியை விட்டபோது இனி அவள் படிப்பதற்கு ஒன்றுமில்லை என்று தோன்றியது. அதன்பின் கோயம்புத்தூரில் சின்னப் படிவம் ஒன்றில் படித்துக் கொண்டிருந்து விட்டுத் தேர்ச்சி பெறுவதற்கான வாய்ப்புக் கிடைக்கு முன்பே ஆறு மாதங்களில் அங்கிருந்து கிளம்பியாகி விட்டது: பெற்றோரும் சித்தியும் தன்னை மீண்டும், அதுவும் இந்தச் சமயத்தில் வீட்டை விட்டு அனுப்புவார்கள் என்று அவளால் நம்பவே முடியவில்லை. இருந்தாலும் தன் தகப்பனார் கூறியதன் அர்த்தம் வேறு என்னவாக இருக்க முடியும்?


அவர் முறுவலித்துக் கொண்டிருந்தார். அதே அறையில் இருந்த அம்மாவும் சித்தியும் கூட, ஏதோ அருமையான எதிர்பாராத பரிசு ஒன்றை அவள் கையில் கொடுக்கப் போகிறவர்கள் போல் உற்சாகத்துடன் பார்த்துப் புன்னகை பூத்தனர்.

அவள் தகப்பனார் விளக்கினார். "இந்தத் தடவை நம் தேசத்தில் அநேகப் பெண்மணிகளுக்குத் தெரியாத பல விஷயங்களை நீ கற்றுக்கொள்ளப் போகிறாய். முதலில், உனக்கு நான் ஆங்கிலம் கற்றுத் தரப் போகிறேன்" என்று கூறினார்.

''ஆங்கிலமா?''

''ஆமாம்: அது ஒன்றும் கஷ்டமே இல்லே.''

தகப்பனார் அவ்வாறு கூறினால் அது உண்மையாகத்தான் இருக்கும் என்று சுப்புலக்ஷ்மி அறிவாள். ''நீங்கள் நாள் முழுதும் கல்லூரியில் வேலையாக இருப்பீர்களே, எனக்கு எப்படிச் சொல்லித் தர முடியும்?'' என்று அவள் கேட்டாள்.



அவர் பதில் அளித்தார்: ''தினமும் காலையில் நான் போகு முன் உனக்கு ஒரு பாடம் தந்துவிட்டுப் போவேன். நான் முழுவதும் நீயாகவே படித்துக் கொள்ளலாம். மாலையில் நான் திரும்பி வந்ததும் கொஞ்ச நேரம் இருவரும் ஒன்றாக இருந்து கழிக்கலாம். அப்போது எவ்வளவு உன்னால் படிக்க முடிந்தது என்பதை நான் பார்ப்பேன்.''

இது கேட்பதற்கு அற்புதமாக இருந்தது. ''எனக்கு எத்தனை நாட்கள் ஆகும் கற்றுக் கொள்ள?'' என்று சுப்புலக்ஷ்மி கேட்டாள்.

''நீ கருகருப்பாக உழைத்தால் ஒரு வருஷ காலத்தில் சுத்தமாகப் பேசவும், படிக்கவும், எழுதவும் முடியும். அதற்குப் பிறகு...''

''அதற்குப் பிறகு என்ன?''

அவளுடைய உற்சாகத்தைக் கண்டு அவர் சிரித்தார். ''பிறகு நீ மீண்டும் பள்ளிக்கூடம் போகலாம். இதுவரையில் நீ படித்துள்ளவற்றை விட மிக மேலான பள்ளிக்கூடம். ஆங்கிலப் பெண்களுக்கு என்றே ஏற்படுத்தப்பட்ட பள்ளிக்கூடம். அங்கு எல்லாப் பாடங்களுமே ஆங்கிலத்தில்தான் நடக்கும்.''

அவளுக்குப் பொறுமையே இல்லே. ''எனக்கு இப்பொழுதே முதல் பாடத்தைத் தொடங்கி விடுகிறீர்களா?''

''பேஷாக!'' என்று உரைத்துக் கொண்டே அவர் சென்று அலமாரியைத் திறந்து ஓர் ஆங்கில முதல் பாடப் புத்தகம், ஓர் அகராதி, எழுதுவதற்கு ஒரு நோட்டுப் புத்தகம் இவைகளை எடுத்து வந்தார். அவர் தரையில் அவள் பக்கத்தில் அமர, விசாலாட்சியும், சித்தியும் வீட்டு வேலைகளைக் கவனிக்கச் சென்றனர். அந்தச் சிறுமி முதல் முதலாக ஆங்கில எழுத்துக்களைப் பார்க்கலானாள்.

அன்று மாலையில் கல்லூரியிலிருந்து சுப்பிரமணிய ஐயர் திரும்பி வந்த போது, காலையில் அவர் விட்டுச் சென்ற இடத்திலேயே சுப்புலக்ஷ்மி மீண்டும் அமர்ந்திருக்கக் கண்டார். அன்றைய 'ஹிந்து'ப் பத்திரிகையைத் தன் முன் பிரித்து வைத்துக் கொண்டிருந்தாள். அதன் ஒரு பக்கம் முதல் பாடப் புத்தகமும், மற்றொரு பக்கம் அகராதியும் கிடந்தன. பத்திரிகையிலுள்ள வார்த்தைகளை உச்சரிக்கும் முயற்சியில் அவள் அதரங்கள் அசைந்து கொண்டிருந்தன. அவள் அதிலேயே லயித்திருந்தபடியால் தன்

தகப்பனார் வந்து நின்றதைக் கூடக் கவனிக்கவில்லை.

அவர் உரக்கக் கலகலவென்று சிரித்தார். அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

அவர் சிரித்துக் கொண்டே ஆனால் குரலில் பெருமை தொனிக்க, ''இவ்வளவு அவசரம் வேண்டாமே? நீ இன்னும் கொஞ்சம் பொறுமையாக இருக்க முயல வேண்டும். நாளாவட்டத்தில் எல்லாம் வரும்'' என்று கூறினார்.

மாதங்கள் வேகமாகக் கடந்தன. சீக்கிரமே சுப்புலக்ஷ்மி ஆங்கிலத்தோடு கூட சம்ஸ்கிருதம், கணிதம், சரித்திரம், பூகோளம் எல்லாம் கற்க ஆரம்பித்து விட்டாள். வீட்டுக்கு யார் வருகிறார்கள் போகிறார்கள் என்பது கூடத் தெரியாத அளவுக்குப் பாடங்களிலே மூழ்கி சந்தோஷமாக இருந்தாள். கல்யாணங்களுக்கோ, மற்றும் பண்டிகை உற்சவங்களுக்கோ பாலத்தையும், சாவித்திரியையும் தன் தாயார் அழைத்துச் சென்றபோது வீட்டிலே பாட்டியோடும், சித்தியோடும், குழந்தை சொர்ணத்தோடும் இருப்பதிலேயே, அவள் திருப்தி கொண்டாள்.

நன்றாகப் படிக்கும்படி சித்தி உற்சாகம் ஊட்டி வந்தாள். சுப்புலக்ஷ்மி சமைக்கக் கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் சித்திதான் சொன்னாள். சமீபத்தில்தான் கல்யாணமான ஒருத்தி— சுப்புலக்ஷ்மியின் ஒன்றுவிட்ட சகோதரி சைதாப்பேட்டையில் வந்து சில மாதங்கள் தங்கினாள். அவளும் சுப்புலக்ஷ்மியும் மாறி மாறிச் சித்திக்கும், விசாலாட்சிக்கும் சமையலறையில் உதவி புரிந்தார்கள்.

சில மாதங்களுக்கு முன் நடந்த துக்கச் சம்பவம் பாதிக்கு மேல் மறந்து விட்டது. இதுவரையில் இல்லாத விதமாக அவள் வாழ்வு நிரம்பிச் சுவாரசியம் மிக்கதாக இருந்தது. படிப்பதில் அவள் மிக்க ஆசை கொண்டாள். ரசம், சாம்பார், இட்டிலி, தோசை, பஜ்ஜி, எலுமிச்சம் சாதம், தேங்காய் சாதம், சட்டினி வகைகள், இனிப்புப் பட்சணங்கள், ஊறுகாய்கள், இவைகளைச் செய்யத் தெரிந்து கொள்ளும் போது சித்தி சொன்ன கதைகளையெல்லாம் கேட்டுக் கொண்டு சமையலறையில் கழித்த நேரத்தையும், அவள் மிகவும் ரசித்து அநுபவித்தாள்.

சுப்புலக்ஷ்மியின் தந்தை அடிக்கடி நகரத்துக்குப் போய் விடுவார். ஒருநாள் அவர் அங்கிருந்து திரும்பி வரும்போது தமது இடது கையினடியில் இடுக்கியபடி விநோதமான வடிவம் கொண்ட நீண்ட பொட்டலம் ஒன்றைத் தூக்கிக்கொண்டு வந்தார். அதை சுப்புலக்ஷ்மியின் எதிரே வைத்தார்.

அன்புடனும் வேடிக்கையாகவும் புன்னகை புரிந்து, ''நீ இதை வாசிக்கக் கற்றுக் கொள்வாயானால் இது உனக்குத் தான்'' என்றார்.

சுப்புலக்ஷ்மி பொட்டலத்தைப் பிரித்தாள். அதனுள்ளிருந்த கறுப்புப் பெட்டி சிறிது பழைமையானதாக இருந்தது. ஒரு பக்கம் பித்தளைக் கீல்களும் மறுபக்கம் ஸ்பிரிங் தாழ்ப்பாளுமாக இருந்த பழைய பெட்டி. அதைத் திறந்ததும் அதன் உள்ளே இருந்த பிடில் அவளைச் சொக்க வைத்தது; பேராச்சரியத்தை அளித்தது.

சந்தோஷ மிகுதியில் அவள் வாய் அடைத்துப் போனாள். பக்கத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்த பாட்டியும் பேசாமல்தான் இருந்தாள். இந்த 'அக்கிரமத்தை'க் கண்ட அதிர்ச்சியில் மௌனமாகி விட்டிருந்தாள் அவள்!

''ஐந்து ரூபாய்தான் இதன் விலை. ஆனால் நாதம் மிகவும் நன்றாக இருக்கிறது'' என்றார் சுப்பிரமணிய ஐயர், சமாதானம் கூறுகிற முறையில்.

பாட்டியை அச்சுறுத்தியது ஏகப்பட்ட விலை கொடுத்து வாங்கியிருப்பாரோ என்ற எண்ணம் அல்ல என்பதை அவர் அறிவார். ஆண்பிள்ளைகள் படிக்க வேண்டிய படிப்பை சுப்புலக்ஷ்மிக்குப் பயிலுவிப்பதே அந்த அம்மாளுக்குப் பிடிக்கவில்லை. அந்தப் பெண் வயது வந்த பிறகு தலையை முண்டனம் செய்துகொண்டு இளம் விதவைகள் நடத்த வேண்டிய சிரமமான வாழ்வை மேற்கொள்ளப் போவதில்லை என்று தெரிந்த மாத்திரத்திலேயே அந்த அம்மாள் பலமாக ஆட்சேபித்தாள். இதெல்லாம் போதாதென்று இப்பொழுது பிடிலும் வந்து சேர்ந்திருக்கிறது. ஏதோ தங்கள் வீட்டினுள்ளே அடக்கமாகப் பெண்கள் எப்பொழுதாவது பாடலாம். அதுவே கொஞ்சம் அசாதாரணமான காரியம் தான். அவ்விதம் இருக்க வாத்திய சங்கீதம் பயில எந்தப் பெண்ணேனும் எந்தச் சந்தர்ப்பத்திலாகட்டும் முன்வரலாமா? சங்கீதம் தேவதாசிகளுக்கு உரித்தானது. நல்ல குடும்பத்தில் பிறந்த சுப்பிரமணியன், நிஜமாகவே வாத்தியார் வைத்துச் சங்கீதம் கற்றுக் கொடுக்கப் போகிறான், அதுவும் விதவையான தம் பெண்ணுக்கா!

ஆம்! அதுவேதான் அவர் உத்தேசமாக இருந்தது. அவர் அதை நடைமுறையில் செய்தும் காட்டினார். மீண்



வீணை வித்வான்
எஸ். பாலச்சந்தர்

அனுபவமும் ஆற்றலும் மிகப்பெற்ற விமர்சகர்களும் பிலிப்ஸ் ரேடியோவின் தொனியை மெச்சுகிறார்கள்

பெரிய கலை நிபுணர்களுக்குத் தேவையான அளவுகளில் ரேடியோக்களிலே குரல் ஒலியைப் பிரதிபலிக்கச் செய்ய, அனுபவம், சர்வதேச தொழிலறிவு, தயாரிப்பில் முன்னேற்றம், தரக்கட்டுப்பாடு தொழிற் கலை நுட்பங்கள் ஆகியவை மிக அவசியம். இந்தியாவிலே பிலிப்ஸ், மற்றவர்களைக் காட்டிலும் அதிக காலமாகவே ரேடியோக்கள் தயாரித்து வருகின்றனர். ஆதலால் குற்றமற்ற உழைக்கும் வகையில் அவற்றைத் தயாரிக்கின்ற முறையை மிகச் சரியாக அறிவார்கள். இதற்கென்றே இந்திய சீதோஷ்ண நிலைகளுக்கேற்றவாறு செயல்படக் கூடிய அநேக ரேடியோ பாகங்களைப் பிரத்தியேகமாக அபிவிருத்தி செய்திருக்கின்றனர்.

தவிர, பிலிப்ஸ்-ம் உலகெங்குமுள்ள அவர்களது கூட்டாளிகளுமாக இடைவிடாமல் ஆராய்ச்சி செய்து வருவது மூலம், அசல் குரல் ஒலியை பிரதிபலிக்கச் செய்வதிலும், ரேடியோ தயாரிப்பதிலும் மற்றவர்களை விட பிலிப்ஸ் அதிக அனுபவம் கொண்டிருக்கின்றனர்.

அமோகமான இந்த தொழில் நுணுக்கத் திறமையுடன் பிலிப்ஸ் மேன்மையான தயாரிப்புச் சௌகரியங்களையும் பெற்றிருக்கின்றனர். ரேடியோக்களின் தரத்திற்கும், உழைப்பிற்கும் உத்தரவாதம் அளிக்க வென்று, தயாரிக்கும் போது ஒவ்வொரு நிலையிலும் மூலப்பொருள்களைச் சரிபார்ப்பதிலிருந்து முழு உருவாகி உழைக்கத் தொடங்கும் வரை அவைகள் கடுமையான பரிசோதனைக்குட்படுகின்றன.

ஆகவே, நீங்கள் ஒரு பிலிப்ஸ் ரேடியோ வாங்குகையில் இதைவிட சிறந்த ஒன்றை வாங்கியிருக்க முடியாது என்பதை நன்கு கண்டு கொள்வீர்கள்.

PHILIPS

பிலிப்ஸ் ரேடியோ

லட்சக்கணக்கானவர்கள் சோதித்து, உபயோகித்து, தேர்ந்தெடுத்தது

JWT PHR 2541

கால்கேட்டின் மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!




ஏனெனில் ஒரே தேய்ப்பில் கால்கேட் டெண்டல் க்ரீம், துர்நாற்றத்தையும், சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சதவிகிதத்தை ஒழித்துவிடுகிறது.

கால்கேட், 10ல் 7 சந்தர்ப்பங்களில் உடனடியாக வாய் துர்நாற்றத்தை அகற்றுகிறது என்பதையும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், இது வரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பெருமளவில் ஏராளமானவர்களுக்குச் சொத்தை தடுக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத் தான் உண்டு.

கால்கேட்டின் கிடைத்திருக்கும், நூதன சுகமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயேப் பல் துலக்க விரும்புகிறார்கள்.

பல்சுத்தத்திற்கும், வாயின் நறுமணம் கமழவும், வெண்மையான பற்களைப் பெறவும் வழக்கமாக கால்கேட்டினால் பல் துலக்குங்கள்.

நீங்கள் பற்பொடியை விரும்பினால், இந்தப் பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பலமாதம் உழைத்து வரும்.



... உலகிலேயே பெரும்பாலானவர்கள் மற்றெல்லாப் பற்பசைகளையும் விட, கால்கேட் டெண்டல் க்ரீமையே வாங்குகிறார்கள்.

டும் கோடை விடுமுறை வருவதற்குள் சுப்புலக்ஷ்மி வயலினில் வெகுவாகத் தேர்ச்சியடைந்து விட்டிருந்தபடியால், அவளுக்கு வீணையும் கற்றுக் கொடுப்பது என்று தீர்மானமாயிற்று. இதற்குள் அவளுக்கு ஆங்கிலமும் சரளமாகப் பேச வந்து விட்டது. சென்னை எழும்பூரிலிருந்த பிரஸிடென்ஸி செகண்டரி அண்ட் ட்ரெயினிங் ஸ்கூல் தலைவி அவளை அடுத்த பள்ளி வருஷத்தின் ஆரம்ப காலத்திலிருந்து மாணவியாக ஏற்றுக் கொள்வதாக ஒத்துக் கொண்டிருந்தாள்.

அந்தக் கோடை விடுமுறை எல்லா விதங்களிலும் அவளுக்கு முழுமை பெற்று விளங்கியது. இந்த முறை சுப்புலக்ஷ்மிக்கு வம்புக்காரர்கள் யாரும் தொல்லை கொடுக்கவில்லை. ஒவ்வொரு நிமிஷத்தையும் அவள் ரசித்தாள். விடுமுறை முடிந்து மீண்டும் வீடு திரும்பப் போகிறோமே என்றும் அவள் கவலைப்படவில்லை. மறுபடியும் பள்ளிக்கூடம் போக வேண்டும் என்ற ஆவலின் காரணமாகப் பள்ளிக்கூடம் திறக்கும் நாள் வரையில் காத்திருக்க முடியாது போல் துடிப்பாக இருந்தது.

சென்னையின் மத்தியில் உள்ள எழும்பூருக்குச் சைதாப்பேட்டையிலிருந்து நீண்ட தூரப் பிரயாணம் செய்து அவள் எப்படிச் செல்வது? அவளைத் தனியாக அனுப்புவது இயலாது. நல்ல காலமாக விவசாயக் கல்லூரியிலுள்ள ஒரு சகப் பேராசிரியருக்கு சுப்புலக்ஷ்மியின் வயதில் ஒரு பெண் இருந்தாள். அவர் ஹிந்துவல்ல; கிறிஸ்துவர். பி. டி. ஸ்கூல் என்று அழைக்கப்படும் அதே பள்ளியில்தான் அந்தப் பெண்ணும் படிப்பதாக இருந்தது. இரண்டு பெண்களும் ஒன்றுசேர்ந்து போய் வருவது என்று தீர்மானமாயிற்று.

ஒரு ஜட்கா வண்டி அமர்த்தப்பட்டது. வண்டியோட்டி ஒரு வயோதிகன்; நிதானமுள்ளவன்; நம்பிக்கையானவன். குதிரையும் துஷ்டத்தனம் இல்லாதது. இரு பெண்களும் வண்டியில் உள்புறமாக அடங்கித்தான் அமர்ந்திருப்பார்களாதலால் எந்த வம்புக்காரர்களின் கண்ணிலும் பட வேண்டாம். அவர்கள் பயமின்றிப் போய் வரலாம்.

பாட்டிக்கு இந்த ஏற்பாடெல்லாம் சிறிதும் பிடிக்கவில்லை. சுப்புலக்ஷ்மியின் தாயாருக்குக் கூடச் சிறிது கவலையாகத்தான் இருந்தது. ஆனால் விசாலாட்சிக்கும் சித்திக்கும் சுப்புலக்ஷ்மி தொடர்ந்து படிக்க வேண்டும் என்ற ஆசையும் இருந்தது. அவளைப் பள்ளிக்கு அனுப்பி வைக்க வேறு மார்க்கமும் இல்லை. சுப்



“யாவும் விதியின் விளையாட்டு; எல்லாம் விதிப் பயன்தான்! எதிரியின் தலைவிதி, பணத்தைத் தொலைக்கணும் என்று. என் தலைவிதி, பணத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று, அவ்வளவுதான்!”

“அப்படியானால் என் தலைவிதி, உங்களுக்கு நூறு ரூபாய் அபராதம் விதிக்க வேண்டுமென்று!”

பிரமணிய ஐயர் அவர்களுடைய இந்த பயத்தையெல்லாம் தள்ளி விட்டார்: ஆமாம், இதுவரையில் பெரியவர்களுடைய பாதுகாப்பின்றிச் சிறு பெண்கள், ஏன் பெரிய ஸ்திரீகள் கூடத்தான் சாதாரணமாகப் போவதில்லை. ஆயினும் உலகத்தில் ஏதேனும் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால் ஒருசிலராவது இதுவரை யாரும் செய்யாததைச் செய்து வழிகாட்ட முன்வரும் தைரியம் படைத்தவர்களாக இருக்கவேண்டும். மேலும், சுப்புலக்ஷ்மியும், மேரியும் நல்ல புத்திசாலிப் பெண்கள். அந்நியர்கள் கவனத்தைக் கிளறும்படி வண்டியிலிருந்து எட்டிப் பார்க்கவோ வேறு ஏதேனும் செய்யவோ அவர்கள் யத்தனிக்கவே மாட்டார்கள் என்று உறுதியாக நம்பலாம்.

சீடையில் ஆவலுடன் காத்திருந்த அந்த நாளும் வந்தது. சென்னை நகரில் செல்லுகையில் கடுமையான வெய்யில் தாக்கியது என்பதைத் தவிர பிரயாணத்தில் வேறு விசேஷமொன்றுமில்லை. முதலில் அங்கு போய்ச் சேர்ந்ததும் சுப்புலக்ஷ்மியை வெட்கம் கவ்விக் கொண்டது. சென்னை ராஜதானியிலேயே அதுதான் உயர்ந்த பள்ளிக்கூடம் என்றும், அங்குள்ள ஆசிரியைகள் எல்லோரும் மாணவர்களில் முக்கால்வாசிப் பேரும் ஆங்கிலேயர்களோ அல்லது ஆங்கிலோ இந்தியர்களோதாம் என்றும் அவள் தந்தை கூறியிருந்தார், அந்தப் பள்ளியில் தான்

ஒருத்திதான் பிராமணப் பெண்ணாக இருப்போம் என்று அவள் அறிவாள். ஆனால் உயர்நிலைப் பள்ளி முழுவதற்கும் இர்துப் பெண் தான் ஒருத்திதான் என்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. தமிழ், தெலுங்கு ஆசிரியப் பயிற்சிப் பகுதிகளில் சில இந்துக்கள் படித்து வந்தார்கள்.

வகுப்பில் ஆசிரியைகளும் சக மாணவிகளும் அன்பாகவும் சிநேக பாவத்துடனும் அவளுடன் பழகியதால் அன்று மாலைப் பொழுதுக்குள் சுப்புலக்ஷ்மியின் நாணமெல்லாம் பறந்து விட்டது. பாடங்களை நன்றாகப் புரிந்துகொள்ள முடிந்தது. கேள்வி கேட்டபோது தக்கபடி உடனுக்குடன் சரியான பதில் அளிப்பதிலும் கஷ்டம் இருக்கவில்லை. பள்ளி முடிந்து விட்டதே என்று இருந்தது. ஜட்கா வண்டி மீண்டும் சைதாப்பேட்டை சேர்வதற்குள் அவளும், மேரியும் தாங்கள் எதிர்பார்த்ததைவிடப் பள்ளி ஆனந்தமாக இருக்கிறதென்று பேசிக் கொண்டார்கள்.

சுப்புலக்ஷ்மியின் வீட்டின்முன் வண்டி நின்றபோது, அவள் தாயாரும் பாட்டியும் வெளித் திண்ணையிலேயே அமர்ந்திருப்பதைக் கண்டாள். அப்பொழுது தான் ஏதோ துக்கச் செய்தியைக் கேட்டவர்கள் போல் அவர்கள் முகம் வாடி, வதங்கியிருந்தது.

சுப்புலக்ஷ்மி வேகமாக இறங்கி அவர்களிடம் விரைந்தாள்.

''இதெல்லாம் சரிப்பட்டு வராது, கூடவே கூடாது!'' என்று பாட்டி அரற்றினாள்.

சுப்புலக்ஷ்மி அவளைத் திகைப்புடன் பார்த்தாள். என்ன நடந்து விட்டது என்று அவளுக்குப் புரியவில்லை.

பாட்டி தொடர்ந்து பேசினாள்:- ''எங்கள் உயிர் கூட்டில் இல்லை. நானும், உன் அம்மாவும் நாள் முழுவதும் இங்கேயே உட்கார்ந்து கவலைப் பட்டுக் கொண்டிருக்கிறோம். நீ எப்பொழுது வருவாயோ என்று காத்துக் கொண்டிருக்கிறோம். இப்படியெல்லாம் உன்னைப் போக விட முடியாது. நீ பள்ளிக்கூடம் போவதே சரிப்படாது. உடனே நிறுத்த வேண்டியதுதான். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இப்படி நாங்கள் வாழ்ந்தால் என்ன, செத்தால் என்ன? உன் அப்பா வீட்டுக்கு வந்ததும் நான் அவனுடன் பேசிக் கொள்கிறேன்!'' என்று இரைந்தாள் பாட்டி.

அவ்வாறே செய்தாள். சுப்பிரமணிய ஐயரும் விட்டுக் கொடுக்கும்படி ஆகி விட்டது.

பள்ளி போக முடியாது என்றதும் சுப்புலக்ஷ்மிக்கு ஏமாற்றம் நெஞ்சை அடைத்தது. ஆனால் அவள் அதை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. பாலமும், சாவித்திரியும் தங்கள் மனத்தில் உள்ளவைகளை உடனே வெளியே காட்டிக் கொள்ளக் கூடிய சிறுமிகள். அவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் ஒரு சம்பவம் நிகழ்ந்தால் சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்ளவும், கஷ்டம் நேர்ந்தால், அடிபட்டால் ஆறுதலை நாடியும் அவர்கள் தங்கள் பெற்றோர்களிடமோ, சித்தியிடமோ, பாட்டியிடமோ ஓடுவார்கள். சுப்புலக்ஷ்மியோ தன்னுள்ளேயே உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு விடுவாள். தனக்கு எந்தத் துன்பம் நேர்ந்தாலும், ஏமாற்றம் தோன்றினாலும், அந்த வேதனையை யெல்லாம் தானே பொறுத்துக் கொண்டாளே யன்றி யாரிடமும் அதைப் பற்றிப் பேசுவதில்லை.

அவள் தகப்பனார் தொடர்ந்து இப்போதும் அவளுக்குப் பாடங்கள் கற்றுக் கொடுத்து வந்தார். பாட்டியின் வற்புறுத்தலுக்கு அப்போதைக்கு இணங்கினாலும், உண்மையில் சுப்புலக்ஷ்மியை பி. டி. ஸ்கூலுக்கு அனுப்பும் முயற்சியை அவர் கைவிடுவதாக இல்லை என்பது புலனாயிற்று. அவர் விசாலாட்சியோடும், சித்தியோடும் கலந்தாலோசித்தார். அடுத்த சில வாரங்களில் அவர் அடிக்கடி சென்னை போய் வந்தார். அவர் இவ்வாறு செல்வதற்கான காரணத்தைச் சுப்புலக்ஷ்மிக்கு யாரும் சொல்லவும் இல்லை, அவர் திரும்பி வந்ததும் பெரியோர்கள் பேசிக் கொள்வதை அவள் காது கொடுத்துக் கேட்கவுமில்லை. ஆகவே, அந்த நல்ல ஏற்பாடு பற்றிக் கடைசியில் அவளுக்குத் தெரிய வந்ததும் அவளது சந்தோஷம் கட்டுக்கடங்கவில்லை. பி. டி. பள்ளிக்கூடத்தில் அந்த 'டர்ம்' இன்னும் முடியவில்லை. முன்பு சேர்ந்திருந்த அதே வகுப்பில் அவள் மீண்டும் போய்ப் படிப்பது என்று நிச்சயிக்கப்பட்டது.

ஆனால் இந்த முறை தினந்தோறும் இங்கிருந்து போய் வரும் பிரயாணம் இல்லை: பள்ளிக்கு நேர் எதிராக ஒரு வீட்டை அவர் வாடகைக்கு எடுத்திருந்தார். பள்ளி இருக்கும் நாட்களில் சித்தியும் சுப்புலக்ஷ்மியும் அங்கு வசிக்க வேண்டியது. வார இறுதியில் அவர்கள் சைதாப்பேட்டைக்கு வரவேண்டியது. அல்லது குடும்பத்திலுள்ள மற்ற அனைவரும் சென்னையில் போய் இரண்டு நாட்கள் இருந்து விட்டு வருவது என்று ஏற்பாடாயிற்று. (தொடரும்)

காதல் இல்லையேல் சாதல்



சோ

[புலிக் கூண்டில் நுழைவதுபோல்தான் நாகராஜன் தன் காதலி மாலதியின் சித்தப்பா கனகசபை வீட்டில் நுழைந்தான். வந்ததும் அவர் சீறிச் சீறி விழுந்தார். அந்தப் புலியை மடக்க ஓர் அஸ்திரத்தை விட்டான் நாகராஜன், அவனது தூரத்து உறவுக்காரர் பெரும் பணக்காரர் என்று. அவனது அஸ்திரத்துக்குப் பணிந்து விட்டார் 'புலி' கனகசபை!]

காட்சி 9

(சென்னையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் பம்பாய் எக்ஸ்பிரஸ், மற்ற எக்ஸ்பிரஸ் வண்டிகளைப் போலவே, நேரம் கழித்து வந்து அரக்கோணத்தை அடைந்து விட்டது. வண்டி புறப்பட இன்னும் சில விநாடிகளே இருக்கின்றன. கார்டு விசிலை ஊதி, பச்சைக் கொடியையும் காட்டி விட்டார். முதல் வகுப்புப் பெட்டி ஒன்றில் கம்பியைப் பிடித்துக்கொண்டு சுரேஷ் நின்றுகொண்டிருக்கிறான். பெட்டியில் இருந்த மற்றொருவர் இறங்கி விட்டதால், பொழுது போவது எப்படி என்று தெரியாமல் சுரேஷ் நின்றுகொண்டிருக்கும் போது, ரயில் நகர ஆரம்பிக்கிறது. அவசர அவசரமாக நாகராஜன் கையில் ஒரு சிறு பெட்டியோடு அதே பெட்டியில் ஏறுகிறான்.)

சுரேஷ்: வாங்க சார்... பேசறதுக்கு ஆளே இல்லையேன்னு பார்த்துக்கிட்டு... (திடீரென்று நாகராஜன் முதுகில் ஓங்கி ஓர் அறை அறைகிறான்.)

நாகராஜன்: அய்யய்யோ... நான் டிக்கட் வைச்சிருக்கேன் ஸார்!

சுரே: டேய்! இடியட்! நாகு! என்னைப் பார்ரா முட்டாள்!

நாக: அடப் பாவி! சுரேஷ்! எங்கேடா போய்க்கிட்டிருக்கே? மெட்ராஸா?

சுரே: யெஸ்... உட்கார்ரா... எத்தனை நாளாயிடுத்துடா உன்னைப் பார்த்து!

நாக: ஆமாம். ரொம்ப நாளாயிடுத்து இரண்டு மூணு வருஷம் இருக்கும்.

சுரே: என்னடா ஒரே டல்லா இருக்கே?

நாக: ஒண்ணுமில்லேடா.

சுரே: ஏன், மாமா இப்பவெல்லாம் பணம் அனுப்பறதில்லையா? வாட் ஸ் தி மேட்டர்?

நாக: மாமாவே போயிட்டார்ரா.

சுரே: என்னது?

நாக: ஆமான்டா. இப்ப எங்க ஊர்லேந்துதான் வந்துக்கிட்டிருக்கேன். நான் ஊருக்குப் போய்ச் சேர்றதுக்கு முன்னாலேயே மாமா இறந்துட்டாரு.

சுரே: அடப் பாவமே!

நாக: நீ இப்ப என்னடா செய்துக்கிட்டிருக்கே?

சுரே: பாம்பேலே இருக்கேன். ஒரு பத்திரிகையிலே நியூஸ் ரிப்போர்ட்டர். சும்மா ஒரு வாரம் ஜாலியா நிம்மதியா இருக்கலாமேன்னுதான் மெட்ராஸ் புறப்பட்டேன். ஏன்டா இப்படி இடிஞ்சு போயிட்டே? உங்க மாமாவுக்கு வயசு என்னடா இருக்கும்?

நாக: எழுபது.

சுரே: போக வேண்டிய வயசு. போயிட்டாரு. இதெல்லாம் சகஜம். விடு. உனக்கு எவ்வளவு எழுதி வெச்சிருக்கார்?

நாக: ஒரு லெட்டர்கூட எழுதி வெக்கலே.

சுரே: ஏன்டா அவர் உயில்லே உனக்கு ஒண்ணுமே எழுதி வெக்கலியா?

நாக: அவர் உயிலே எழுதி வெக்கலே. இனிமேல் எனக்கு உதவி பண்ண யாருமே கிடையாதுடா. அவர் திடீர்னு இறந்துட்டார். அவருக்கு நெருங்கின உறவுக்காரங்களுக்குத்தான் அவர் சொத்தெல்லாம் போகப் போறது.

சுரே: அவுங்க உனக்கு ஒண்ணும் செய்ய மாட்டாங்களா? ஏதாவது கொஞ்சம் தர மாட்டாங்களா?

நாக: தராம இருப்பாங்களா? 'கடைசியா உனக்குத் தர முடிஞ்சது இவ்வளவுதான்'னு சொல்லிக் கையிலே கொடுத்துட்டாங்க.

சுரே: என்ன கொடுத்தாங்க?

நாக: மெட்ராஸுக்குப் போக ரயில் டிக்கட்! அதை வாங்கிக் கொடுத்து அனுப்பிச்சுட்டாங்க.

சுரே: அடப் பாவிங்களா? இதை இப்படியே விடக்கூடாது. கோர்ட்டிலே கேஸ் போட்டுச் சொத்திலே பங்கு வாங்க வேண்டியதுதான்.

நாக: போடா. அவங்க நெருங்கின உறவினங்க. நான் ஏதோ சுத்தி வளைச்சுத் தானேடா உறவு?

சுரே: உங்க மாமா பைத்தியம், ஓர் உயில் எழுதி வைக்கக் கூடாது?


நாக: உம்! நடக்காததை நினைச்சு என்ன பிரயோஜனம்? மெட்ராஸ் போய் என் கதியை நினைச்சாத்தான்டா பயமா இருக்கு.

சுரே: ஏன்டா?

நாக: ஹாஸ்டலை விட்டுட வேண்டியது தான். படிப்பையும் நிறுத்திட்டு ஏதாவது வேலைதான் தேடணும். என் பிளான் எல்லாம் குட்டிச்சுவராய்ப் போச்சு.

சுரே: ஏன் பிளான் போட்டே? இந்தக் காலத்திலே பிளான் போட்டாலே குட்டிச் சுவர்தான். எத்தனை]அஞ்சு வருஷப் பிளான் போட்டாங்க? ஒண்ணாவது உருப்பட்டதோ? சரி, சொல்லு. என்ன பிளான்?

நாக: மாலதின்னு ஒரு பொண்ணுடா!



சுரே: அடி சக்கை! ஐயாவுக்குக் காதலா? பலே! சொல்லு மேலே.

நாக: எப்படிடா காதல்னு கண்டு பிடிச்சே?

சுரே: இவ்வளவு கவலையிலே ஒரு பெண்ணைப் பத்திப் பேசிறே — அவ வேறே யாரா இருக்க முடியும்! காதலியாகத்தான் இருந்தாகணும். எப்ப கல்யாணம்?

நாக: இனிமே அது நடக்காத காரியம். அவளுக்கு அப்பா இல்லே. ஆனா, அவள் சித்தப்பா பெரிய பணக்காரர்.



கரே: பின்னே என்ன கவலே? பேசாம சீக்கிரம் அவளேக் கல்யாணம் பண்ணிக்கோ. மாமாவுக்குப் பதில் மாமனுர்!

நாக: அவர் பணத்திலே என்னே வாழச் சொல்றியா?

கரே: என்ன தப்பு? மாமனுராலே பெரிய மனுஷனுகிற பின்னேதான் மா—பிள்ளே.

நாக: அவர் கிட்டேருந்து என் படிப்புக்கே பணத்தை வாங்கிக்கச் சொல்றியா?

கரே: வாங்கிக்கிட்டா என்ன?

நாக: அது எப்படிடா முடியும்?

கரே: வாங்கிக்க மாட்டியா?

நாக: நான் வாங்கிப்பேன். அவர்தான் கொடுக்க மாட்டார்.

கரே: சரிதான் போ! அப்படியா விஷயம்? நீதான் ஏதோ பெரிய கௌரவம், சுயமரியாதைன்னு பார்த்துக்கிட்டு முடியாதுன்னு சொல்றியாக்கும்னு பார்த்தேன்.

நாக: கௌரவம், சுயமரியாதை, அந்தஸ்து எல்லாம் கண்டிப்பாப் பார்க்க வேண்டியதுதான்.

கரே: உனக்கு ஏதுடா அதெல்லாம்?

நாக: எனக்கில்லே. மாலதியின் சித்தப்பாவுக்கு இருக்கே? அவர் அதெல்லாம் ரொம்பப் பார்க்கிறரு. அதனுலே இப்ப நான் இருக்கிற நிலேமையிலே எப்படிடா மாலதியை எனக்குக் கொடுப்பார்?

கரே: அவருக்குப் பணம் முக்கியமா, இல்லே மாலதியினுடைய சந்தோஷ வாழ்க்கை முக்கியமா?

நாக: மாலதியின் சந்தோஷ வாழ்க்கைதான் முக்கியம். அதனுலேதான் மாலதியை எனக்குக் கல்யாணம் பண்ணி வைக்க மாட்டார்.

கரே: என்னடா உளர்றே?

நாக: என்னே மாதிரி அநாதைப் பயலேக் கல்யாணம் பண்ணிக்கிட்டு மாலதி கஷ்டப்பட அவர் சம்மதிப்பாரா?

கரே: அவர்கிட்டத்தான் பணம் இருக்கே? அதிலே நீயும் மாலதியும் சந்தோஷமா இருக்க முடியாதா?

நாக: உனக்குத் தெரியறது அவருக்குத் தெரியணுமே?

கரே: நீ ஒரு தைரியம் இல்லாத ஆசாமிடா. எதிலேயும் சந்தேகம். நீ கேட்டுப்பாரு. அவரே ஒத்துப்பார்.

நாக: கேட்டுப் பார்க்கத்தான் போறேன். ஆனு நடக்கும் என்ற நம்பிக்கை எனக் கில்லே.

கரே: எதுக்கும் பயப்படக் கூடாது. என்னேப் பாரு. படிப்பைப் பாதியிலே விட்டேன். பம்பாய் போனேன். போகச்சே கையிலே கால் ரூபா கிடையாது.

நாக: இப்ப கால் ரூபா இருக்கா?

கரே: சனி! என்னடா கேக்கறே?

நாக: கால் ரூபா. கடலேக்காய் வாங்கிச் சாப்பிடலாம்... அப்படி இருக்கு என் நிலேமை.

கரே: இந்த மாதிரி இடிஞ்சு போய் உட்கார்ந்துக்கிட்டிருந்தா அப்படித்தான் இருக்



"உதவி புரிய, என் மனைவியை அனுப்ப வேண்டுமா? என்ன உதவி?"

"பக்கத்துப் போர்ஷன்காரியுடன் சண்டை போட வேண்டியிருக்கிறது!"

றும். என் சுயசரிதையைக் கால் ரூபாயிலேயே நிறுத்திட்டியே. மேலே கேளு. கால் ரூபா இல்லாம-போனேன். இப்ப பாரு... கவலே யில்லாம இருக்கேன். தைரியம் வேணும் மிஸ்டர்!

நாக: இந்த நிலைமையிலே கூட மாலதியை அவளுடைய சித்தப்பா எனக்குக் கல்யாணம் பண்ணிக் குடுப்பார்னு நினைக்கிறியாடா?

கரே: எவன் கண்டது? அவர் பொண்ணு தலைவிதி அப்படி இருந்தா, தவிச்சா நடக்கிறது.

நாக: உன்னோட பேசினதுலே கொஞ்சம் தைரியம் வந்துடறதுடா. நான் நாளைக்கே போய், அவரைப் பார்த்து, இந்தக் கல்யாண விஷயத்தைப் பத்திக் கேட்டுக்கிட்டு வந்துடறேன்.

கரே: டேய், நாகு! கேக்கவே மறந்து போயிட்டேனே. அவளுக்கு உன் பேர்லே எப்படிடா காதல் வந்தது?

நாக: அது ஒரு ஆக்ஸிடண்ட்டுடா!

கரே: அவளுக்கா?

நாக: கிண்டல் பண்ணாதேடா. திடீர்னு எதிர்பார்க்காம காதல் வந்துடுத்து. நான் ஒரு கவிதை எழுதினேன். அதைப் பார்த்து வெருந்து...

கரே: இரு....இரு....இரு!..... என்ன சொன்னே? நீ கவிதை எழுதினியா?

நாக: ஆமாம். தமிழ்க் கவிதை!

கரே: உனக்கென்னடா தெரியும் கவிதையைப் பத்தி?

நாக: தமிழைப் பத்தி மட்டும் எனக்கென்னடா தெரியும்? என் பிரண்ட்ஸ் சில பேர் சேர்ந்து கம்பெல் பண்ணி எழுத வைச்சுட்டாங்க.

கரே: ஏன்? அவங்களுக்குத் தமிழ் மேலே அவ்வளவு வெறுப்பா?

நாக: அதைப் படிச்சுட்டுத் தமிழ் புரொபஸர்...

கரே: போட்டு நன்னா உதைச்சாரா?

நாக: உதைக்காம விட்டார், அவ்வளவு தான். ஆனா எனக்குத்தான் பஸ்ட் பிரைஸ். என் கவிதைக்குத்தான் முதல் பரிசு.

கரே: உன் கவிதைக்கு முதல் பரிசா? என்னடா இது?

நாக: ஆமான்டா. போட்டிக்கு வந்ததே ஒரு கவிதைதானே! ஆனா தமிழ் வாத்தியார் தனியாக் கூப்பிட்டுத் திட்டினாரே ஒழிய, மீட்டிங்லே என்னையும், என் கவிதையையும் புகழ்ந்துட்டார். அவரே அந்தக் கவிதைக்குப் புது அர்த்தமும் சொல்லிட்டார்.

கரே: ரொம்பக் கஷ்டப்பட்டிருப்பாரே!

நாக: முழுக்கவும் கேளு. நான் நிஜமாகவே பெரிய கவிஞன்னு மாலதி நினைச்சுக்கிட்டா. என்னைப் பாராட்டிப் பேசித் தனக்கு ஒரு கவிதை எழுதிக் கொடுக்கணும்னு கேட்டுப்பிட்டா!

கரே: அய்யய்யோ!

நாக: நானும் எழுதிட்டேன்.

கரே: அடப் பாவி! உனக்குப் போய்த் துணிச்சல் இல்லேன்னு நினைச்சேனே!

நாக: நான் அவளைப் பத்தி எழுதின கவிதைக்கு அவளே அர்த்தமும் கண்டு பிடிச்சுக்கிட்டு, என்னை ஓரேயடியாப் புகழ்ந்து தள்ளினா. அவ்வளவுதான்... அப்புறம் காதல் தான்!

கரே: உன்னைப் போய்க் கவிஞன்னு நினைச்சுக்கிட்டிருக்காளே, அவ்வளவு பெரிய முட்டாளா அவள்?

நாக: வருங்காலக் கவிஞனைப் பத்தி இந்த மாதிரியெல்லாம் பேசாதேடா.

கரே: அது என்னமோ வாஸ்தவம்தான். ஒரு தமிழ்க் கவிஞனுக்கு வேண்டிய பஸ்ட் க்வாலிபிகேஷன் — முதல் தகுதி உனக்கு வந்தாச்சு!

நாக: என்னடா அது?

கரே: கையிலே காலணாக்கூட இல்லாத நிலைமை.

நாக: உம்! இந்த நிலைமையிலே அவரைப் போய்ப் பார்க்கப் போறேன். என்ன ஆகப் போறதோ, கடவுள்தான் காப்பாத்தணும்.

கரே: ஏன்டா பயப்படறே? நீ சொன்னதையெல்லாம் கேட்டப்புறம் எனக்குக் கொஞ்சம் கூடச் சந்தேகமே யில்லே. மாலதியினுடைய சித்தப்பா உன்னை மாப்பிள்ளையா ஏத்துக்கத் தயங்கவே மாட்டார். கண்டிப்பா உடனே சரின்னு சொல்லிடுவார்.

நாக: என்னடா அவ்வளவு நிச்சயமாச் சொல்றே?

கரே: பின்னே என்னடா? உன் கவிதையைப் பார்த்து மயங்கிட்டாளா இல்லையா, மாலதி?

நாக: ஆமாம்.

கரே: அவ்வளவு பெரிய முட்டாளா இருக்கிற பெண்ணுடைய சித்தப்பா எவ்வளவு பெரிய முட்டாளா இருப்பார்? அவருக்கு ஏத்த மாப்பிள்ளை நீதான். நிச்சயம் இந்தக் கல்யாணம் நடக்கும்; கவலைப்படாதே!

(தொடரும்)



அவள் எங்கே? 24

கதை: கெளசிகன்
சித்திரம்: ரமணி..




சேகர் சொன்னபடி பெரியசாமி எங்கேயும் போய் விடவில்லை. அதோ பார் மாடியில் விளக்கு எரிகிறது.
வெளியுலகத்தின் தொடர்பே இல்லாமல் ரொம்பவும் அமைதியான இடமாக இருக்கிறதே.
கதவு திறந்து கிடக்கிறதே. வீட்டில் யாருமே இல்லையா?
பெரிய சாமி தனிக் கட்டை. ஆனால் வேலைக்காரர்கள் கூடவா இருக்கமாட்டார்கள்.
கீழ் அறைகளில் யாரையும் காணோம். ஒரு வேளை...
அதோ... திறந்து கிடக்கும் அந்த அறையின் நடுக் கூடத்தில், சுழல் நாற்காலியில்... அது யார்?
பெரிய சாமியேதான்!
இங்குள்ள எதையும் தொடாதீர்கள். நாற்காலியில் இருப்பது பெரியசாமியின் உயிரற்ற உடல். கொலையா என்பது தெரியவில்லை.
தற்கொலையாக இருக்காது. பெரியசாமி கொலைதான் செய்யப்பட்டிருக்க வேண்டும்.
ம்... நான் சந்தேகப்பட்டபடியே நடந்து விட்டது.
பெரியசாமியிடம் நீங்கள் சேகரித்த தகவல்களைப் பற்றி ரேணுகாவிற்குத் தெரியுமல்லவா?
அப்போது அவளும் கூடத் தானே இருந்தாள்.
அப்படியா சரி தான்.
உடலில் இன்னும் சூடு இருக்கிறது. இரண்டு மணி நேரத்துக்குள் தான் இது நிகழ்ந்திருக்க வேண்டும். நான் உடனே டெலிபோன் செய்கிறேன்.
தயவு செய்து இப்போது இங்கிருந்து யாருக்கும் டெலிபோன் செய்ய வேண்டாம்.
தொடரும்...

பதட்டத்தின் அறிகுறியே இல்லை இப்பொழுது!





வலிதான் எங்கள் பிரச்சினை...உங்களுக்கு நாங்கள் உதவக்கூடிய விதம் இதுதான்!

[illegible]

வலி என்பது என்ன? [illegible]

[illegible]

அளவு:
பெரியவர்கள்: இரண்டு மாத்திரைகள். [illegible]
குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டரின் சொல்படி.



'ஆஸ்ப்ரோ'

வலியை வெளியே இழுத்துவிடுகிறது!

A.G. 14-65 TAM

கந்தன் கருணை

திருமுருக கிருபானந்தவாரியார்

46. திசை சேர்ந்த திக்குயானை

அக்கினிமுகாசுரன் இறந்ததையும், மாண்ட எழுவர் உயிர் பெற்றதையும் பார்த்துக் கொண்டிருந்த ஒற்றர்கள் ஓடிச் சென்று சூரபன்மனிடம் நிகழ்ந்ததை உரைத்தனர். அதைக் கேட்ட சூரன், ''மகனே! மகனே!'' என்று கதறியழுது துயரக் கடலில் ஆழ்ந்தான். இந்தத் துயர்ச் செய்தியை அறிந்த சூரனின் மனைவி பதுமகோமளை அழுது அரற்றி ஆற்றொணாத் துயரத்தில் மூழ்கினாள். இச் செய்தி நகரத்தில் பரவவே, வீரமகேந்திரம் முழுதும் அழுகையொலி பரவியது.

சூரபன்மனின் புதல்வர்கள் மூவாயிரர். அவர்கள், அக்கினிமுகன் இறந்ததையும் அதனால் சூரபன்மன் துயரக் கடலில் ஆழ்ந்திருப்பதையும் அறிந்து சூரபன்மனின் அரண்மனைக்கு வந்தார்கள்; தந்தையை வணங்கினார்கள். ''தந்தையே! இலக்கத்தொன்பான் வீரரிடம் போர் செய்ய அக்கினிமுகன் ஒருவனை அனுப்பினீர். மெலியராயினும் பலர் கூடினால் வலியவரையும் வெல்லுவர் என்பதை நீங்கள் அறிந்ததில்லையா? அக்கினிமுகன் இறந்ததற்காகத் துயரப்பட வேண்டாம். நாங்கள் மூவாயிரம் பேர்கள் இருக்கிறோம். இன்னும் இரணியன் இருக்கிறான்; பானுகோபன் இருக்கிறான். இவ்வளவு பேர்கள் இருக்கும்பொழுது உங்களுக்கென்ன குறை? நால்வகைச் சேனைகள் அழிந்து விட்டனவே என்று கவலைப்படுகிறீர்களா? அந்தக் கவலையும் வேண்டாம். உங்கள் காலாட்படைகளுக்கு அழிவு இல்லை. இதுவரை போரில் இறந்த சேனைகளை இப்போதும் இருக்கிற நம்முடைய சேனைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் கடுகளவே மாய்ந்ததாகவும், மலையளவு மீதமிருப்பதாகவும் தெரியும்'' என்று கூறினர்.

அவர்களுக்கு சூரபன்மன் விடை தந்து போர்க்களம் அனுப்பி வைத்தான். எண்ணில்லாத சேனைகளுடன் யுத்தப் பறையறிவித்துக் கொண்டு அவர்கள் போர்க் களம் அடைந்த போது அது கண்ட அமரரும் அஞ்சினார்கள்.

பூத சேனைகளுக்கும் அவுணப் படைகளுக்கும் பயங்கரப் போர் மூண்டது. போரில் அசுரர் பலர் மாண்டனர். எண்ணிறந்த பூதகணங்களும் இறந்தன.

விஜயன், ஜயன், இடபன், சுரவீரன், அதிகோரன், அசலன், அதிருணன், வாமனன், அந்தன், அகலிங்கன், அநகன், சதவலி, மாருதன், வருணன், சசிகண்டன் முதலாகிய ஆயிரவர் வீரவாகு தேவரிடம் விடைபெற்றுக் கந்தக் கடவுளைத் தியானித்து மூவாயிரவரை எதிர்த்துப் போருக்குச் சென்றனர்.

இரு தரத்தாரும் பொருததின் இறுதியில் ஆயிரவரில் விஜயனைத் தவிர ஏனையோர் அனைவரும் வலியிழந்து தோற்றோடினார்கள்.

துணைவர்கள் தோற்று ஓடியதைக் கண்ட விஜயன், 'சூரபன்மன் குமாரர்கள் மூவாயிரவரையும் யானே கொல்வேன்' என்று வஞ்சினம் கூறினான்; சிவபெருமான் கொடுத்த அழியாத வில்லை எடுத்து வளைத்து மூவாயிரவர் மீது பாண மழைகளைச் சொரிந்தான். அப் பாணங்களால் தாக்குண்டவரின் அங்கங்கள் அறுந்தனவெனினும் பிரம்ம தேவர் கொடுத்திருந்த வரத்தின் பலத்தால் அறுந்த அவயவங்கள் மீண்டும் வந்து கூடின.

அதனைக் கண்ட விஜயன் திகைத்தான். அவர்கள் பெற்றுள்ள வரத்தின் சிறப்பை உணர்ந்தான். முருகன் திருவடித் துணையின்றி இவர்களை வெல்லுவது அசாத்தியம் என்று உணர்ந்தான். முருகப் பெருமான் திருவடியைச் சிந்தித்து உள்ளம் உருகினான்; கண்களால் நீர் பெருக்கியபடியே கந்தவேளைத் தியானித்தான்.

ஆறுமா முகப்பிரான்
அன்றி யிவ்விடை
வேறொரு துணையிலே
மெய்ம்மை யிதெனத்
தேறினேன் அவனடி
சிந்தை செய்தனன்
மாறிழி யருவிநீர்
வழியுங் கண்ணினன்.

'உள்ளம் உருகினுல் உடனுவார்' என்பது வேதமொழியல்லவா? பக்தி வலையிற் படும் அருள் வள்ளலாகிய ஆறுமுகப் பெருமான் அவன் முன் விண்ணில் தோன்றினுர். "அன்ப! இம் மூவாயிரவரும் பிரம்மனிடம் வரம் பெற்றவர்கள். இவர்களைத் தனித் தனியாய்ப் போரிட்டு வெல்வது உன்னுல் முடியாத காரியம். மூவாயிரவரையும் ஏககாலத்தில் ஒரே படையால் வீழ்த்த வேண்டும். அப்போதுதான் அவர்கள் இறப்பார்கள். இந்தா! இது கால வயிரவப் படை. இந்தப் படையால் நீ அவர்களைச் சங்காரம் செய்" என்று கூறித் திவ்வியாஸ் திரத்தை விஜயனுக்குத் தந்து மறைந் தருளினுர். விஜயன் மனம் மகிழ்ந்து அன்புடன் அப்படைக் கலத்தைப் பூஜித்து விடுத்தான். வயிரவப் படைக்கலம் விரைவாக வருவதை மூவாயிரவருள் ஒருவனுன உன்மத்தன் கண்டான். "இந்தப் படைக்கலம் வந்து நம்மைத் தாக்குவதற்கு முன் ஒரு மாயப் படையினுல் இவனை அழிப்பேன்" என்று எண்ணி மாயப் படையை விடுத்தான். விஜயன் விடுத்த வயிரவப் படை விரைந்து சென்று எங்கும் அருளைப் பரப்பியது. மாயப் படையை அழித்தது. மூவாயிரவரையும் ஒரு கணத்தில் கூண்டோடு அழித்து மீண்டது. தேவர்கள் விஜயன் மீது பூமழை பொழிந்தார்கள். பூதர்கள் சந்திரனைக் கண்ட கடல் போல் ஆரவாரித்தார்கள்.

மூவாயிரம் பகைவர்களை வெல்ல வழி காட்டிய முருகக் கடவுள் நமது புலன்களாகிய பஞ்சேந்திரியம் என்ற ஐந்தே பகைவர்களை வெல்லுவதற்கும் வழி காட்டுவார். அதனை நமக்கு உணர்த்தியருள வேண்டும் என்று நாம் கண்ணீர் மல்கிக் கசிந்துருக வேண்டும்.

வரத்தினர் மூவா யிரவரை வெல்லும்
வழிதனை யறிந்திலேன் என்று
சிரத்தையோ டுன்னைத் தியானித்த விஜயன்
திகைப்பறத் தந்திரம் உரைத்தாய்
உரத்தினர் ஐவர் என்னிடை யிருந்தே
ஓரஓட்டார் உன்னை அவரைத்
தரத்தினில் வெல்லும் தந்திரம் யாதோ
சாற்றுதி தணிகை நாயகனே

(தணிகைநாயகன் மாலை)

மூவாயிரம் புதல்வர்களும் ஒருசேர மாண்ட செய்தியைக் கேட்ட சூரபன்மன் சிங்காதனத்தினின்றும் நிலத்தில் வீழ்ந்து புலம்பினுன். தனது ஆட்சி அதிகாரப் பிரபை மங்கி மறையும் நாளும் வந்ததோ என எண்ணினுன். அப்பொழுது சூரியனும் அஸ்தமித்தான்.



தலைமை அமைச்சன் தருமகோபன் சூரபன்மனிடம் வந்து வணங்கினான்.

''தானவேந்திரா! வருந்தாதீர்! இது வரை பெற்ற வெற்றியை எல்லாம்விட உமது வருத்தமே தமக்குப் பெரிய வெற்றி என்று வானவர் கொக்கரிப் பார்கள். போர் முனையில் இறந்தவர்கள் தந்தையானாலும், புதல்வர்களேயானாலும் அதற்காக வருந்தித் தளர்வது! ஆற்றல் மிக்க வீரர்களுக்கு அழகல்ல.

'' முந்துறும் மாற்றலர்
முனைவெம் போரிடைத்
தந்தையர் விளியினும்
தமர்கள் மாயினும்
மைந்தர்கள் விளியினும்
மான வீரர்கள்
சிந்தைகொள் வன்மையிற்
சிறிதும் தீர்வரோ?''



''கவர்ந்து சென்ற உயிர்களைத் தர இயமன் இருக்கிறான்; உடலைப் படைத்துத் தர பிரம்மன் இருக்கிறான். எஞ்சியுள்ள நமக்கும் வலிமை இருக்கவே இருக்கிறது. எல்லாம் இருக்கும் போது ஏன் ஏங்க வேண்டும்?'' என்று ஆறுதல் கூறினான்.

இயமனையும், பிரம்மனையும் ஆட்டிப் படைக்கும் ஆற்றல் இப்போதே தன் கைமீறிவிட்டது என்பதை சூரன் அறிவான். எனினும் தன் உடலில் உயிர் உள்ள அளவும் வருந்துவதில்லை என்று தெளிந்தான். ''அமைச்சரே! இயமனைப் போல் நானே சென்று எதிரிகளை அழித்து வருகிறேன்'' என்று கோபாவேசத்துடன் கூறினான். தருமகோபன் சூரபன்மனை வணங்கி, ''அரசர்க்கரசே! தாங்கள் இங்கேயே இருங்கள். யானே சேனைகளுடன் சென்று பகைவர்களைக் கொல்வேன்'' என்று வேண்டிக்கொண்டான்.

போர்க் கோலம் பூண்ட தர்ம கோபன் புண்டரீகம் என்ற திக்கு யானை மீதூர்ந்து, பற்பல படைக் கலங்களைத் தாங்கி, போர் முரசறைய அவுண சேனைகளும் அமைச்சரும் சமுத்திரம்போல் சூழப் போர்க்களத்தை யடைந்தான். அதனைக் கண்ட தேவர்

கள் ''மாவீரர் பலரை வென்றோம். எனினும் புற்றீசல்களாகக் கிளம்பிக் கொண்டே யிருக்கின்றனரே! இதோ யானை மீது மதயானையாக வருபவனை வெல்வதரிது'' என்று அஞ்சியோடினர்.

தருமகோபன் போர்க்களம் அடைந்ததும் பூதர்கள் அவனை எதிர்த்து ஆரவாரம் செய்தனர். பூதப் படைக்குப் பலியான அவுணர் தலைவர் அனைவரும் தருமகோபன் கண்முன் தோன்றினர். அவனது அஞ்சா நெஞ்சிலும் அச்சம் குடிகொண்டது. தன்னைத் தானே தேற்றிக் கொண்டான்.

அவுண சேனைகளும் பூத சேனைகளும் எதிர்த்துப் போராடின.

இலக்கம் வீரர்கள் போர் செய்து இளைத்தனர். அவுண அமைச்சர்கள் முன்னிலும் பன்மடங்கு வீரத்தோடு விளங்கி நின்றார்கள். அவர்களைக் கண்ட வீர மார்த்தாண்டர் வெகுண்டு எழுந்தார். அவர் ஒருவரது சீற்றம் பூதப் படை முழுவதற்கும் புத்துயிரூட்டியது. அவுணர்களைப் பூதர்கள் கொன்று குவித்தனர்.

தன்னுடைய படைகள் அழிந்ததைக் கண்ட தருமகோபன் சினந்து பூதர்கள் மேல் எண்ணற்ற கணைகளை விடுத்தான். அந்தப் பாணங்களின் தாக்குதலால் பூதர்கள் நடுங்கி மெலிந்தனர். புண்டரீகம் என்ற திக்கு யானை பூதர்களைத் துதிக்கையால் தூக்கி வீசியது. காலாலும், வாலாலும், தந்தங்களாலும் பூதரைச் சின்னாபின்னப்படுத்திக் கொன்று வீழ்த்தியது. பூதர்கள் அந்த யானையின் மீது மலைகளை எறிந்தனர்; சரமழை பொழிந்தனர். அந்தப் பாணங்கள் தைத்ததால் திக்கு யானையின் உடல் முழுதும் உதிரம் பெருக்கெடுத்தோடியது. அந்தத் திக்கஜமோ சிறிதும் தளர்ச்சி யடையாமல் பூத வீரர்களைத் தாக்கிக் கொன்றது.

வீர புரந்தரர் ஒரு வேலை எடுத்துத் தருமகோபன் மார்பை நோக்கி எறிந்தார். தரும கோபன் கதாயுதத்தை எடுத்து வீர புரந்தரர் மேல் எறிந்தான். அது வீர புரந்தரர் மார்பிற் பட்டதும், அந்த நிகரற்ற மாவீரரும் துன்பமுற்று நடுங்கி விம்மி வருந்தினார்.

இக் காட்சியைக் கண்ட வீரவாகு தேவர் மனத்தினும் விரைந்து தரும கோபன் முன்னே வந்தார். தரும கோபன் வீரவாகுவின் மீது செலுத்திய பாணங்கள் அவரது திருமேனியில் பட்டு, இரப்பவர்க்கு ஈயாது கரந்து, இரவாத செல்வர்கட்கு ஈந்த பொருள் போலப் பயனின்றிக் கூர் மழுங்கி வீழ்ந்து அழிந்தன. வீரவாகு தேவர் சினந்து ஒரு வேலை எடுத்து விடுத்தார். அது தருமகோபன் விடுத்த கணைகளையெல்லாம் அழித்துக்கொண்டு அவனது மார்பைத் துளைத்துச் சென்றது. தரும கோபன் மார்பினின்றும் உதிரம் வெள்ளம் போல் பெருக்கெடுத்தது. 'ஓ' என்று அலறி வீழ்ந்து மூர்ச்சித்தான் தருமகோபன். அவனது நிலைமையை உணர்ந்த திக்குயானை ஆர்த்து அசைந்தோடி வந்து வீரவாகு தேவரின் தேரைத் தன் கோடுகளினால் தாக்கியது. ஓர் இரும்புலக்கையால் வீரவாகு தேவருடைய தேர்ப் பாகனை அடித்துக் கொன்று தேரையும் அழித்தது. வீரவாகு தேவர் பிறிதொரு தேரின் மீது பாய்ந்து யானையின் துதிக்கையை ஒரு கரத்தாற் பற்றி மற்றொரு கரத்தால் அதன் கன்னப் பிரதேசத்தில் அறைந்து வெகு தூரத்துக்கப்பால் செல்லும்படி வீசி எறிந்தார். யானை விண்ணுலகுக்கு எழும்பி மீண்டும் போர்க்களத்தில் வந்து வீழ்ந்தது.


மூர்ச்சை தெளிந்த தருமகோபன் மீண்டும் போர் தொடங்கினான். வீரவாகு தேவர் மீது குலிசப் படையை வீசினான். அதனை அவர் கையினாற் பற்றித் தருமகோபனுடைய மார்பில் அடித்தார். திருவடியால் அவனை ஒரு தரம் உதைத்தார். ஆயுதங்களுக்கு இல்லாத ஆற்றல் அவரது திருமேனி அவயவங்களுக்கே இருந்தன போலும்! தருமகோபன் உயிர் துறந்தான்.

மயக்கம் தெளிந்து உயிர்த்து மெல்ல எழுந்த திக்குயானை தருமகோபன் மாண்டதைக் கண்டது. அவனது மார்பில் தன் சக்தியையெல்லாம் திரட்டிப் போர் செய்து கடமையைச் செலுத்தி விட்டது. இப்போது அது வீரவாகுவை வணங்கி, ''எம்பெருமானே! கோபம் கொள்ளாமல் சிறியேன் சொல்வதை அருள் கூர்ந்து கேட்டருள வேணும். நான் திக்கஜம். திசையைக் காவல் செய்பவன். கீழ் மகனாகிய இத் தருமகோபன் இட்ட சிறையில் பல நாட்கள் வருந்தினேன். அவனுக்கு வாகனமாகி இதுவரை சுமந்து வந்தேன். அவனுடைய ஏவல் பலவற்றைச் செய்து வந்தேன். இன்றோடு நீசன் சேவகம் முற்றுப் பெற்றது. உய்வு பெற்றேன்'' என்று நெகிழ்ந்து கூறியது.

''இனி நீ உன்னுடைய திக்குக்குச் சென்று காவற் பணி புரியலாம்'' என்று வீரவாகு தேவர் அதற்கு விடை கொடுத்தார்.

திக்கு யானை தன் இருக்கை சேர்ந்தது.

(தொடரும்)



இன்பமான கனவுகள் உட்வர்ட்ஸுக்கு நன்றி!



மந்தம், புளிப்பு, உப்புசம் மற்றும் பல்முளைக்கும்போதுள்ள உபாதைகளிலிருந்து உடனடி நிவாரணம்பெற உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர் உபயோகியுங்கள்.

இது 100 வருடங்களாக புத்திசாலிகளான தாய் மார்களால் உபயோகிக்கப் பட்டு வருகிறது

Ayers ATC-508 TAM A



அத்தியாயம் முப்பத்தெட்டு

மிரண்டு நின்ற மான்

'வாழ்வேன், வாழ்ந்து காட்டுவேன்' என்று வீர தீரமாகச் சபதம் ஏற்பது சுலபம்; ஆனால் வாழ்வதும், வாழ்ந்து காட்டுவதும் அவ்வளவு சுலப மல்லவே? 'பரந்து விரிந்த இவ்வுலகத்தில் எனக்கு ஓர் இடமில்லையா?' என்று அதட்டிக் கேட்பதும், 'இருக்கிறது; இல்லையென்றால் எடுத்துக் கொள்வேன்' என ஆவேசமாகப் பதில் இறுத்திக் கொள்வதும் எளிது; ஆனால் அப்படி இருக்குமிடத்தைத் தேடி எடுத்துக் கொள்வது அத்தனை எளிதல்லவே? 'வாழ்வதற்கு ஓர் அர்த்தம் வேண்டும்' என்று வாய் இனிக்கச் சொல்லலாம்; ஆனால் அந்த அர்த்தத்துக்குப் பல 'அர்த்தங்கள்' உள்ளனவே?—

ஜீவகீதம்

ஜெகசிற்பியன்

இவை போன்ற குழப்பச் சிந்தனையுடன் படுக்கையை விட்டு எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு விட்டுத் திண்ணை மீது வந்து உட்கார்ந்த சபேசனின் பார்வையில், தாழ்வாரக் கூரைச் சரிவுக்கு மேலே வலதுபுற மூலையில் நீளப் பலகை யொன்றைச் சுவருக்கும் திண்ணைத் தூணுக்கும் இடையே பரணாகச் செருகி அதில் பழைய லொட்டு லொசுக்குச் சாமான்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்ததுடன் ஒரு புத்தகக் கட்டும் இருப்பது புலப்பட்டது. அவன் எழுந்து போய்க் குடையொன்றைக் கவிழ்த்துப் போட்டு ஏறி நின்று அந்தப் புத்தகக் கட்டை எடுத்துக்கொண்டு இறங்கினான்.

தூசும் தும்பும் ஒட்டடையுமாக நிறைந்து கரப்பான் பூச்சிகள் 'சடுகுடு' ஆட்டம் போட்டுக்கொண்டிருந்த அந்தப் பரணில் அப்புத்தகக் கட்டு மட்டும் சுத்தமாகத் தூசு தட்டி வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு உள்ளூற வியந்த சபேசன், கட்டை அவிழ்த்து ஒவ்வொரு புத்தகமாக எடுத்துப் பார்த்தான். அவை அனைத்தும் தன் தந்தையாருக்குச் சொந்தமானவை என்பது அவற்றில் சில புத்தகங்களில் அவருடைய பெயரைத் தமது கையாலேயே எழுதியிருந்ததிலிருந்து தெளிவாயிற்று. தமிழிலும் ஆங்கிலத்திலுமாக இருபது அல்லது முப்பது புத்தகங்கள் இருக்கும். வள்ளுவர், கம்பர், இராமலிங்க அடிகள், பாரதியார், தாகூர், வால்ட் விட்மன், சார்லஸ் டிக்கன்ஸன் ஆகியோருக்கிடையே ஆரணியாரும், வடுவூராரும், ஸ்டான்லி கார்டனரும், அகதா கிறிஸ்டியும், சுப்ரதீபரும், சதாவதானம் சரவண பெருமாள் கவிராயரும்கூட இருந்தனர். இவற்றைக் கொண்டு தன் தந்தையாரின் ரசனை உணர்ச்சியை ஒருவாறு கணித்தறிந்தவன் போல் புன்முறுவலுடன் தலையாட்டிக் கொண்ட அவனுக்கு இன்னொரு விஷயமும் புரிந்தது. 'படிப்பு வாசனையற்ற என் தாய் இந்தப் புத்தகங்களை யெல்லாம் இத்தனை ஆண்டு காலம் இவ்வளவு பத்திரமாகப் பாதுகாத்ததோடு அல்லாமல் இவற்றைச் சமீபத்தில் எடுத்துத் தூசு தட்டித் துடைத்தும் வைத்திருப்பதற்குக் காரணம், ஊரிலிருந்து வரப்போகும் எனக்கு இவை படிக்க உபயோகமாகும் என்பதாகத்தான் இருக்க வேண்டும்' என்று எண்ணியதுமே அவன் கண்கள் கண்ணீரால் நனைந்து சிவந்தன.

விட்மனின் 'லீவ்ஸ் அவ் கிராஸை'யும், தாகூரின் 'ஃப்ரூட் கேதரிங்'கையும் தனியே எடுத்து வைத்துவிட்டு மற்றப் புத்தகங்களைக் கட்டிப் பரண் மேல் போட்ட பின் திண்ணையில் வந்து உட்கார்ந்த சபேசன் தன் தாயைப் பற்றிய துயர நினைவை நெஞ்சில் அழுத்தி மறைத்துக்கொள்ளச் சற்று நேரம் கண்களை மூடிக் கொண்டிருந்து விட்டுப் பிறகு ஒரு நெடு மூச்சுடன் அந்த 'ஃப்ரூட் கேதரிங்'கை (கனி கொய்தல்) எடுத்து அதன் பக்கங்களை மெல்லப் புரட்டினான். ராமபாணப் பூச்சிகளால் சல்லடையாகத் துளைக்கப்பட்டிருந்த ஒரு பக்கத்தில், உயரிய வசன கவிதை நடையிலே, அற்புதமான பாடல் ஒன்று அவன் கவனத்தை வெட்டி இழுத்தது:

'இறைவா! என் விண்ணப்பத்தைக் கேள்: எனது தளர்ந்த உள்ளத்தை இளமை எனும் நின் மோகன சக்தியால் உறுதியாக்கு. இந்த ஜட வாழ்வில் உன்னைச் சற்றேனும் அகலாத நித்தியானந்தக் களிப்பை அளித்தருள்!

என் உள்ளத்தில் கவிந்துள்ள பேரிருளை அகற்று; அச்சத்தைத் துரத்து; ஆண்மையைக் கொடு! உன் பெருங் கருணைச் சிரிப்பால் என்னைத் திளைக்கச் செய்து மகிழ்ச்சியேற்று! உன் வெற்றிச் சின்னத்தை வீறுடன் ஏந்தச் செய்!

அவ்வாறாயின்,

இறைவா! நிருறக்கம் நீங்குவேன்; அம்புகள் பொழியினும் அதனூடே விரைவேன்! வாழ்வுப் பாதையில் எதிர்ப்படும் இடர்களைக் கண்டு அஞ்சேன்!... தேவா! இதுகாறும் நின்முன் சாந்தியைத் தந்தருள் என இறைஞ்சினேன். அதற்காக இப்போது நாணுகிறேன். நான் இப்போது உன் திருமுன் நிற்பது அமைதியைக் கேட்கவா? அல்ல; அல்ல. ஆன்மத் திண்மை பெறும் கவசத்தைப் போர்த்தியருள் எனப் புகலவே வந்தேன்...'

வெளிறிச் சோர்ந்திருந்த சபேசனின் முகம் குப்பெனச் சிவந்து மலர்ந்தது. தன்னை மீறிய ஒரு சுறுசுறுப்போடு அப் புத்தகத்தின் மறு பக்கத்தைப் புரட்டினான்.

''தம்பீ!''

பசியோடு புசிக்க எடுத்த சோற்றுக் கவளத்தை விக்கல் ஏற்பட்டுப் பாதியில் நிறுத்தினாற்போல் ஒரு நிறைவுடன் நிமிர்ந்தான்.

''எங்கனாச்சும் வெளியே போகணுமா, தம்பி?'' என்று கேட்டுக்கொண்டே வீட்டினுள்ளிருந்து வந்தாள் அத்தை மீனாட்சி.

'ஏன்' என்பதுபோல் அவளை ஏறிட்டுப் பார்த்தான் அவன்.

''நான் கோடித் தெரு ரெங்காயி வீடு வரை போயிட்டு வாரேன். அதுக்குள்ளாற இங்கே அந்த மளிகைக் கடைக் கவுண்டர் வந்தாலும் வருவார். போன வாரம் உப்பு, புளி, மிளகாய் வாங்கின வகையிலே அவருக்கு மூணு ரூபாய் பாக்கி இருக்குது. மறுநாள் தவறாமல் நடையா நடக்கிறார். நாளைக்குத் தாரேன்னு தாக்கல் சொல்லி அனுப்பு. அந்தக் கடனைத் தீர்க்க வேறே யாரிடமாச்சும் இன்னொரு கடன்தான் வாங்கியாகணும்.''

சற்று நேரம் மௌனமாயிருந்த சபேசன் சட்டென்று எழுந்து போய்த் தன் கான்வாஸ் பையைத் திறந்தான். சென்னையில் சேமித்த தொண்ணூற்றைந்து ரூபாயில் சட்டை, கால் சராய், புடவை மற்றும் சில்லறைச் சாமான்களுக்கும் ரயில் டிக்கட்டுக்கும் செலவானது போக முப்பது ரூபாய் மீதமிருந்தது. அதில் ஒரு பத்து ரூபாயை எடுத்து வந்து, ''இந்தாங்க அத்தை! இதை வைச்சுக்குங்க'' என்று கொடுத்தான்.

மீனாட்சிக்கு ஒரே வியப்பு, பிரமிப்பு. உள்ளார்ந்த மகிழ்ச்சியுடன் பணத்தைப் பெற்றுக்கொண்ட அவள், ''தம்பி கைச் செலவுக்கு வைச்சிருந்ததாக்கும்! அதைக் கொடுத்திட்டீங்களா?'' என்றாள் ஏழைமைக் குழைவுடன்.

நவராத்திரி விசேஷ விற்பனை!

தரமான பட்டுப் பாவாடைகள், பட்டுப் புடவைகள் சோளிகள் வாங்க தலைநகரில் நம்பிக்கையான இடம்.

காஞ்சீபுரம் ஸில்க் ஹவுஸ்

பட்டு ஜவுளி வியாபாரிகள்

5/28-29, W. E. A., கரோல் பாக் – – புது தில்லி-5

போன்: 53981

ராம்தீர்த் பிரஹமி ஆயில்

(ஸ்பெஷல் நெ. 1) (ரிஜிஸ்டர்டு)

கூந்தல் உதிர்வதையும், பொடுகையும் தடுத்து கேசத்திற்கு கரு நிறத்தையும் பளபளப்பையும் அளிக்கும் ஓர் ஒப்பற்ற கூந்தல் தைலம். பல உயர்ந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. மூளைக்குக் குளிர்ச்சி அளித்து, ஞாபக சக்தியை அதிகரித்து, கண் எரிச்சலையும் அடிக்கடி ஏற்படும் தலைவலியையும் போக்கி நிம்மதியான நித்திரையை அளிக்கிறது.

யோகாசனப் படம்

எங்கள் யோகாசனப் படத்தில் காட்டியுள்ளவாறு ஆசனங்களை முறைப்படி செய்து வந்தால் நீங்கள் உடல் வலிவு பெற்று ஆரோக்கியமாக வாழ்வீர்கள்.

விலை ரூ. 3/- (தபால் செலவு உள்பட)

SHRI RAMTIRTH YOGASHRAM

DADAR, BOMBAY-14

மதராஸ் டிப்போ: 26. நைனியப்ப நாயக்கன் தெரு. மதராஸ்-3


குணத்தில் சிறந்தவை

ஸ்வஸ்திக் வேதாரணியம் புகையிலை

ஸ்பெஷல் தயாரிப்பு

15 ந. பை.


பிளாஸ்டிக் பொட்டலங்கள்



வளரும் குழந்தைகளுக்கு



அதிகப்படி கால்ஷிய ஊட்டம் தேவை...



கல்ஸானா-டி இதை அளிக்கிறது



குழந்தைகள் கல்ஸானா-டியின் இன்சுவையைப் பெரிதும் விரும்புகிறார்கள்—எனவே தான் மேலும் மேலும் அது வேண்டுமென்று கேட்கிறார்கள். தங்கள் குழந்தைகள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக கல்ஸானா-டி மாத்திரைகளைச் சாப்பிடுகிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அதிகமான வலுவும், ஆரோக்கியமும் உள்ள உடல் வளர்ச்சியைப் பெறுகிறார்கள் என்பதை விவேகமுள்ள தாய்தந்தையர்கள் அறிவார்கள். கல்ஸானா-டி மாத்திரைகளிலுள்ள, வைடமின்-சத்து நிறைந்த கால்ஷியம், குழந்தையின் மென்மையான உடலுடன்கூட இரண்டறக்கலந்து, கிரகிக்கப்படுகிறது...உங்கள் குழந்தைகளுக்கு கல்ஸானா-டி கொடுத்து வளர்ப்பது பாராட்டுக்குரியது!

கல்ஸானா-டி

வைடமின்சத்து நிறைந்த கால்ஷியம் மாத்திரைகள்
கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், மற்றும் வளரும் குழந்தைகளுக்கேற்றவை.

''பரவாயில்லை...'' என்று புன்முறுவலோடு சொன்னான் சபேசன்.

அப்போதுதான் நினைவு வந்தவள்போல், ''தம்பிக்கு இன்னும் காலைப் பலகாரம் கொடுக்கலையே! கொஞ்சம் இருங்க; இதோ ஒரு நொடியில் ஓடிப்போய் இட்டிலி வாங்கி யாந்துடறேன்'' என்று அவசரமாகத் திரும்பினாள் மீனாட்சி.

''வேண்டாம், அத்தை! பழைய நீராகாரம் இருந்தால் ஒரு குவளை கொடுங்கள், போதும்.''

மிகவும் சங்கடத்துடன் பழையமுது நீரில் உப்புப் போட்டுக் கொண்டு வந்து கொடுத்தாள். அதைத் திருப்தியாகப் பருகிய சபேசன், ''நீங்கள் போகும்போது வீட்டுக் கதவைப் பூட்டிக் கொள்ளுங்கள்; நான் வெளியே புறப்படுகிறேன்'' என்றவாறு கையிலிருந்த புத்தகத்துடன் திண்ணையை விட்டு இறங்கி நடந்தான்.

'பாவம், அத்தை! அவளுடைய இயற்கையான இனிய சுபாவத்தைக்கூட இந்தப் பாழாய்ப் போன வறுமை என்ன கோரமாகச் சின்னாபின்னப் படுத்திச் சிதைத்து விடுகிறது!' என்று தனக்குள் எண்ணி வருந்திக்கொண்டே கால் சென்றபடி நடந்த சபேசனின் மனத்தில் திடுமென்று ஒரு புதிய முடிவு உருவாகியது.


'என் அருமை அன்னையை நான் தரிசிக்கக் கொடுத்து வைக்காமலே அவள் திரும்பி வராத இடத்தைத் தேடிப் போய்விட்டாள். தந்தையாரோ இனி இந்நாட்டுக்கு வரப் போவதில்லை என்பதோடு அவரைத் தந்தை என்று நினைக்கவும் அருவைப் படத்தக்க வராகிவிட்டார். இந்நிலைக்குப் பின்னும் இந்தக் கிராமத்திலே நான் இருந்து பயன் என்ன? இருப்பதில் அர்த்தமுமில்லை! அப்படி இருந்தால் என் அத்தைக்கும் அத்தானுக்கும் ஒரு சுமையாவதுடன்கூட அவர்கள் என் மீது வைத்திருக்கும் கொஞ்ச நஞ்சம் அன்பையும் மதிப்பையும் இழக்க வேண்டியவனாகி விடுவேன். எனவே, இங்கிருந்து புறப்பட்டு விடுவதுதான் நல்லது.'

விவேகமான, துணிவான முடிவுதான் என்று தன்னைத் தானே பாராட்டிக்கொண்ட அவனது நெஞ்சத்தில் அடுத்து இன்னொரு பெரிய கேள்வி எழுந்தது: 'எங்கே போவது?'

இந்தக் கேள்விக்கு உடனே அவனால் விடை பிறுத்துக் கொள்ள முடியும் என்றாலும் அவ்விடையை நினைக்கும்போதே அவன் மனம் நடுநடுங்கியது. 'சென்னைக்குத்தான் போக வேண்டும்!.... சென்னைக்கா போவது?'

சிந்திக்கும் திராணியை இழந்தவன்போல் இரண்டு கைகளையும் பின்னால் கோத்துக் கொண்டு பைத்தியக்காரன் மாதிரி தலையை ஒரு புறமாகச் சாய்த்து ஆட்டியவாறு நடந்த அவன், ஒரு மரத்தடியில் போய் உட்கார்ந்த சில விநாடிகளுக்குப் பிறகே, தான் வந்திருப்பது சங்கனூர்ப்பள்ளம் குளக் கரை என்பதும், அன்றொரு நாள் வந்து அமர்ந்திருந்த அதே வில்வ மரத்தடி என்பதும் அவனுக்குப் புலனாகியது.

கையிலிருந்த புத்தகத்தைப் பிரித்துத் தாகூரின் அந்த உணர்ச்சியூட்டும் பாடலை



மீண்டும் படித்தான். பிறகு மற்றொரு பாடல் அவன் நெஞ்சை ஈர்த்தது:

'தோல்வி யடைந்தவர்களின் மந்தியிலே என்னை நீ நிறுத்தி யிருக்கிறாய். என்னால் வெற்றி பெற முடியாதென்பதும், விளையாட்டையே விட்டுவிட முடியாது என்பதும் எனக்குத் தெரியும்.

ஆயினும்,

குட்டையில் குதிப்பேன்; நீர் நிலையின் ஆழத்தில் மூழ்கினாலும் கவலை இல்லை. என்னையே அழிக்கும் விளையாட்டை விளையாடுவேன். என்னிடம் உள்ளதை யெல்லாம் அழித்து விடுவேன்; என்னுடைய கடைசிக் காசு தொலையும்வரை யாவற்றையும் இழந்து, இறுதியில் என்னையே, என் உயிரையே பந்தயப் பொருளாக வைத்துச் சோதிப்பேன். இப்படிச் செய்த பிறகு தான் எனது கொடிய, முழுவதுமான தோல்வியின் மூலம் நான் வெற்றி பெற்றதாக எண்ணுவேன்!'


ஐந்தாறு முறை இதே பாடலைத் திரும்பத் திரும்பப் படித்த அவன் உடல் சிலிர்த்தது. மனத்தில் முன்போல் ஓர் உத்வேகம் மூண்டது. 'ஆமாம்; சென்னைக்குத்தான் போக வேண்டும். அதற்காக ஏன் அஞ்சுவது? நான் சென்னையிலிருந்தபோது இப்படி அஞ்சிக் கோழையாக நடந்துகொண்டதால்தான் பல துன்பங்களுக்கும் உள்ளாக நேரிட்டது. இனி அச்சம் என்பதற்கே அணுவளவும் இடம் தரக் கூடாது. இங்கிருந்து போனதும் முன்பு செய்து பழக்கப்பட்ட அந்தக் காகித ஜவ்வி வாங்கி விற்கும் வேலையையே செய்யலாம். அது அத்தனை கௌரவமான தொழில் அல்ல என்றாலும் சுதந்திரமான தொழில். உழைப்புக்கும் புத்திசாலித்தனத்துக்கும் ஏற்ற அளவு ஊதியம் காணக் கூடியது. நாளா வட்டத்தில் அதைவிட இன்னும் நல்ல வேலையொன்றைத் தேடிக் கொள்ளலாம். முயன்றால் ஆகாதது ஒன்றுமில்லை. அந்த ஊரில் நான் கஷ்டப்பட நேர்ந்ததற்கெல்லாம் அடிப்படைக் காரணம், தங்கியிருக்க ஓர் இடம் இல்லாமல் போனதுதான். வயிற்றுப்பாட்டுக்கே பிரும்மப் பிரயத்தனம் செய்து அல்லாடிக்கொண்டிருந்த அப்போதைய நிலையில் வாடகைக்கு ஜாகை வைத்துக் கொள்வது பற்றிக் கனவு காணக்கூட முடியுமா என்ன? அதிலும் சென்னை நகரில் வாடகை அறை பிடிப்பது அத்தனை லேசுப்பட்ட காரியமும் அல்ல. எனவே, அது என் சக்திக்கு மீறிய விஷயமென எண்ணியதோடு அல்லாமல், பர்மாவிலிருந்து என் தந்தையார் வந்துவிடுவார் என்று ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்துக் கொண்டிருந்ததாலும், அப்படி அவர் வந்து விட்டால் அன்றே சென்னைக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டு அவருடன் ரயிலேறிவிட வேண்டுமென்று துடித்துக் கொண்டிருந்ததாலும், வாடகைக்கு அறை பிடித்து வைத்துக்கொள்வது அனாவசியச் செலவு, வீண் தொல்லை என்றும் அப்போது எனக்குத் தோன்றியது. இதில் இன்னுமோர் உண்மை என்னவென்றால், இயற்கையாகவே பயந்த சுபாவமும் கோழைத்தனமும் உள்ளவனாக இருந்த எனக்குத் தனித்திருக்க அப்போது துணிவே இல்லை! ஆனால் இன்றோ, அத்தகைய கோழை அல்ல நான். ஆகவே, சென்னைக்குப் போனதும் முதல் வேலையாக மிகக் குறைந்த வாடகையில் ஓர் அறையை அமர்த்திக் கொள்ள வேண்டும். கொஞ்ச நாட்கள் ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்துவிட்டுப் பிறகு நானே சமைக்கத் தொடங்கிவிட வேண்டும். எனக்குத்தான் என் தந்தையார் நன்றாகச் சமைக்கக் கற்றுக் கொடுத்திருக்கிறாரே!'

தனக்குள் மெல்ல நகைத்துக் கொண்ட சபேசனின் மனத்தில் நச்சியின் கோணல் சிரிப்புப் பூத்த கரிய முகம் பளிச்சென்று தோன்றி மறைந்தது. அந்த வித்தை இளைஞனைப் பற்றிய இனிப்பும் கசப்புமான நினைவுகளில் ஆழ்ந்து மெய் சிலிர்த்த அவனுக்கு, அவனை மீண்டும் சந்திக்கப் போகிறோம் என்பதால் நெஞ்சம் குதூகலித்தாலும், அவனையா சந்திக்கப் போகிறோம் என்ற ஒரு வித அச்சமும் கூடவே தோன்றிக் குடைய ஆரம்பித்தது. சற்றைக்குப் பின் தலையை வேகமாக ஆட்டிக் கொண்டு 'அவனைப் போன்ற அன்புள்ளம் கொண்ட ஒரு நண்பன் எனக்குக் கிடைப்பது மிக மிக அரிது' என்று முணுமுணுத்தவாறு புத்தகத்தின் பக்கங்களையெல்லாம் புரட்டினான். அதில் ஓர் அற்புதமான கதைப் பாடல் அவனது கவனத்தைக் கவர்ந்தது:

'புத்த பகவானின் சீடர் உபகுப்தர், மதுராபுரியின் கோட்டை மதில் சுவர் ஓரத்தே மண்ணில் படுத்து உறங்கிக் கொண்டிருக்கிறார். முன்னிரவு நேரம். பாதச் சலங்கை ஒலிக்க, கையில் விளக்கு ஏந்தி அங்கு வருகிறாள் பெண்ணொருத்தி. உபகுப்தர் உறக்கம் கலைந்து எழுகிறார். அவள் நடனமாடும் நங்கை; இளமை எழில் பூத்துக் குலுங்கும் ஒரு தாசிப் பெண். கண்ணைப் பறிக்கும் அணி மணிகள் பூண்டு கந்தர்வ அணங்குபோல் காட்சியளிக்கிறாள். அவள் தன் கை விளக்கைத் தாழ்த்தி, வாலிப வனப்புடன் விளங்கிய உபகுப்தரின் அருள் மேவிய முகத்தைக் கூர்ந்து நோக்கித் திகைக்கிறாள். அவரது மாசற்ற அழகு அவளுடைய உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது. வீதிப் புழுதியில் படுத்துக் கிடக்கும் அவரைத் தன் மாளிகைக்கு எழுந்தருளுமாறு பணிந்து வேண்டுகிறாள். புன்னகையுடன் பதிலிறுக்கிறார் துறவி. ''பெண்ணே! நீ வீடுநோக்கியே போகலாம்; காலம் கனியும்போது நான் உன்னிடம் வருவேன்.''

ஆண்டுகள் பல ஓடி மறைகின்றன. ஒரு நாள். அதே மதுராபுரியின் வீதி. அதே முன்னிரவு நேரம். அதே கோட்டை மதில் சுவர் ஓரத்தில் தன்னந் தனியாக நடந்து கொண்டிருக்கிறார் புத்தத் துறவி. அங்கே இருட்செறிவில் புழுதித் தரையில் படுத்துக் கிடக்கிறாள் ஒரு பெண். அவர் அவளருகில் நெருங்கிக் குனிந்து நோக்குகிறார். கொடிய பெரு நோயால் பீடிக்கப்பட்டு அங்கமெல்லாம் புண்ணாக அழுகி நாறிக் கொண்டு கிடக்கும் அந்தப் பெண் யார்? அன்றொரு நாள் இந்த இளம் துறவியைத் தன் இல்லத்துக்கு வருமாறு அழைத்த

ஒப்பற்றவை!
தரத்திலும் சரி,
விலையிலும் சரி



"மான்ஸூனிஸ்டு" நேஷனல்–எக்கோ ரேடியோக்களின் அமைப்பு. மேன்மையான உறுப்புகள், உழைப்பின் தரம் இவற்றோடு இதர ரேடியோக்களின் அம்சங்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள். நேஷனல்–எக்கோ தான் உங்கள் பணத்துக்கு ஏற்ற மதிப்பு தருகிறது என்பதை நீங்களே ஒப்புக்கொள்வீர்கள். நேஷனல்-எக்கோ ரேடியோக்கள் உஷ்ணப் பிரதேச கால நிலைகளால் பாதிக்கப்படாதபடி அதன் உறுப்புகள் பாதுகாக்கப்பட்டுள்ளன; அதனால்தான் இவை நீடித்து உழைக்கின்றன. உங்கள் அருகில் உள்ள நேஷனல்–எக்கோ வியாபாரியிடம் இன்றே சென்று இவற்றை இலவசமாக இயக்கிக் காட்டச் சொல்லுங்கள்!

மாடல் 806 :
6 வால்வுகள், 3 வேவ் பாண்டுகள்,
அழகிய பெட்டி.
மாடல் U-806
ஏஸி/டிஸி செட்.
மாடல் A-806 ஏஸி செட்.
ரூ. 395.00

விலைகள் எக்ஸைஸ் ட்யூடி உள்பட, வரிகள் தனி

நேஷனல் எக்கோ

மான்ஸூனிஸ்டு ரேடியோ

ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிமிடெட்
பம்பாய் • கல்கத்தா • பாட்னா • மதராஸ் • பெங்களூர் • டில்லி • ஸெகந்திராபாத்   JWT GRA 3123

மோகன சுந்தராங்கியாக இருந்த தாசிப் பெண்தான் அவள்!

துறவி அவன் பக்கத்தில் உட்கார்ந்து, அவனுடைய தலையைத் தம் முழங்காலில் எடுத்து வைத்தி அணைத்துக் கொண்டு, அவனது உலர்ந்த உதடுகளில் தமது பிட்சா பாத்திரத்திலிருந்து தண்ணீர் விட்டு நனைக்கிறார். புழுக்கள் நெளியும் புண்கள் கொண்ட அவன் உடம்பில் மருந்துத் தைலமும் பூசுகிறார்.

கண்விழித்தவன், ''கருணைப் பேரொளியே! தாங்கள் யார்?'' என வினவுகிறான்.

உபகுப்தர் புன்னகை பூக்கிறார்:

''அன்று ஒரு நாள் சொன்னதுபோல் உன்னிடம் நான் வரவேண்டிய காலம் வந்துவிட்டது; வந்திருக்கிறேன்.''

புத்தகத்தை மூடிவிட்டுத் தலையைத் தாங்கிப் பிடித்துக் கொண்ட சபேசனின் கண்கள் கலங்கிப் பனித்தன. ஏன் இப்படி அவன் அலமந்து துவள வேண்டும்? அந்தக் கதைப் பாடல் அவனுள் எதைக் கிளறி விட்டது? வேதாவின் நினைவையா?

ஆமாம்; அந்தத் திக்கற்ற ஏழைப் பெண்ணைத்தான். சென்னைக்குச் செல்வது என்ற அவனது முடிவுடன் நச்சியின் ஞாபகம் எழவே, அதைத் தொடர்ந்து வேதாவின் நினைவும் முகிழ்த்து விட்டது. அவள் அவனிடம் காட்டிய அன்பும், செய்த பரிவு உபசாரங்களும் ஒவ்வொன்றாக அவன் உள்ளத்தில் மோதி நின்றன. தன்மேல் அத்தகைய மாசற்ற பாசமும் நேசமும் கொண்டிருந்த அவளிடம் தான் கடைசியாக ஒரு வார்த்தையும் சொல்லிக் கொள்ளாமல் வந்து விட்டதை எண்ணி மனம் குமைந்தான். இந்நிலையில் சென்னைக்குப் போய் அவளது முகத்தில் எப்படி விழிப்பது என்று நினைத்த போது வெட்கமும் வேதனையும் அவனைப் பிடுங்கித் தின்றன. அத்துடன் சற்றுமுன் படித்த அந்தச் சோக மயமான உயரிய தத்துவக் கதைப் பாடலில் வரும் இளந் துறவியோடும் இளம் பெண்ணோடும் அவனை யறியாமலேயே அவன் மனம் அவனையும் வேதாவையும் ஒப்பிட்டுப் பார்க்கத் தொடங்கியதால் அவனுள் ஒரு பீதி மயமான நடுக்கமே ஏற்பட்டது.

'தவறு செய்துவிட்டேன்! அந்த அபலைப் பெண்ணின் மென்மையான உள்ளத்தை நோகப் பண்ணிவிட்டேன்! இதற்கு மாற்றுத் தேடுவது எப்படி? அவளுக்கு ஒரு கடிதம் எழுதலாமா? அவளிடம் சொல்லிக்கொள்ளாமல் வந்ததற்கு அதில் மன்னிப்புக் கேட்கலாமா? அதுதான் சரி; இன்றே ஒரு கடிதம் எழுதித் தபாலில் சேர்த்துவிட வேண்டும்.'

அவ்விடத்தை விட்டு எழுந்திருக்கத் தரையில் கையை ஊன்றிய சபேசன், ''மிஸ்டர்! தயவுசெய்து அப்படிக் கொஞ்சம் தள்ளிப் போய் உட்காருகிறீர்களா? நான் இங்கே தூண்டில் போட வேண்டும்!'' என்ற இனிய குரல் கேட்டுச் சட்டென்று திரும்பினான்.

அங்கே, அந்த அழகிய அகதிப் பெண், ஓலைக் கூடையும் தூண்டிலும் கோலுமாக மிரட்சியுற்ற மான் போல் நின்றுகொண்டிருந்தாள். அவளது கருவண்டுக் கண்கள் சபேசனின் கையிலிருந்த தாகூரின் புத்தகத்தை ஆவலுடன் மொய்த்தன. (தொடரும்)

படித்துப் பாருங்கள்

சித்திரத் திருப்பாவை

சூடிக் கொடுத்த சுடர்க் கொடியாகிய ஆண்டாள் சொரிந்த மலர்க் குவியல் திருப்பாவை. இப்புண்ணிய நூலினை நல்ல முறையில், பல ஓவியர்களைச் சித்திரங்களுடனும், விளக்கவுரையுடனும் இலவசமாகவே அளிக்கும் கைங்கர்யத்தைப் பிரசுரகர்த்தர்கள் ஏற்றுக் கொண்டு ஆஸ்திக உலகின் நன்றிக்குப் பாத்திரமாகியுள்ளனர். மகான்களின் ஆசியும், மேன்மக்கள் பலரது கட்டுரைகளும், நாச்சியார் அருளிச் செய்த இதர பாசுரங்களுமாகச் சேர்ந்து இந்த நூலின் பெருமையை அதிகமாக்குகின்றன. வசதியற்றவர்கள் இந்நூலை இலவசமாகப் படிக்க வேண்டுமாயின், வசதியுள்ளவர்கள் நூறுக்காகக் கீழ்க்கண்ட முகவரிக்கு நன்கொடை அளித்து அதன் பிரசாரத்துக்கு உதவவேண்டியது அவசியம். ஸ்ரீ என். கிருஷ்ணசாமி, 6, தஞ்சாவூர் ரோடு, தி. நகர், சென்னை-17.

THE STOTRAS OF SRI VEDANTA DESIKA

சுமார் எழுநூறு ஆண்டுகளுக்கு முன் அவதரித்து ஸ்ரீ வைஷ்ணவத்தையும், முக்கியமாகச் சரணாகதி தத்துவத்தையும் ஆழ நிலை நிறுத்திப் பெருமை கொண்ட மகான் ஸ்ரீ வேதாந்த தேசிகன். பக்தியோடு கவிச் சுவையும் ததும்பும் அற்புதமான பல துதிகளை அவர் அளித்துள்ளார். சொல்லழகும் பொருளழகும் மிக்க அவரது துதிகளையெல்லாம் திரட்டித் தருகிறது இந்த நூல். ஒவ்வொரு சுலோகமும் நாகரம், தமிழ் இரு லிபிகளிலும் கொடுக்கப்பட்டுள்ளது. ஸ்தோத்திரங்களுக்குச் சுருக்கமான அழகிய முகவுரைகளும் அளிக்கப்பட்டுள்ளன. இகபர நலன்களை அளிக்கும் இந்த நூலை அன்பர்கள் பயன்படுத்திக் கொள்ள வேணும்.

[பிரதி கிடைக்குமிடம்: Sri Vedantha Desika Sampradaya Sabha, 1-277, Deodar Road, Bombay – 19. விலை குறிப்பிடவில்லை.]

காஞ்சியில் 72

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் எழுபத்திரண்டாவது ஜயந்தியையொட்டி வெளியான இந்நூலில் காஞ்சி மாநகரிலுள்ள ஸ்ரீ காமாட்சி அம்பிகையின் தேவாலயத்தைச் சித்திர வாயிலாக அணு அணுவாகத் தரிசிக்கிறோம். ஸ்ரீமான்கள் டி. எல். வெங்கடராமய்யர், கே. பாலசுப்பிரமணிய அய்யர், செங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர், சோம தேவ சர்மா, தொண்டை மண்டலாதீன ஞானப் பிரகாச சுவாமிகள், குன்றக்குடி அடிகள், நா. ரகுநாதய்யர், ம. பொ. சி., கி. வா. ஜ., சுகப்பிரம்மம், சுத்தானந்த பாரதியார் முதலியோரின் விஷயதானத்தின் மூலம், ஞானமூர்த்தியாகவும், கருணை வடிவாகவுமுள்ள ஸ்ரீ பெரியவர்களின் மகிமைகளைப் படித்து இன்புறுகிறோம். ஆசாரிய பக்தர்களுக்கு ஓர் அரிய விருந்து.

[வெளியீடு: ஸ்ரீ சங்கர பக்த ஜன சபை, காஞ்சிபுரம், விலை: ரூ. 2.]

THE TEACHING OF SANSKRIT


மும்மொழித் திட்டம் வந்தபின் வடமொழிப் பயிற்சிக்கு நம் பகுதியில் இடமே இராது என்ற நிலை ஏற்பட்டு விட்டது. பாரதத்தின் ஆன்மிகத்துக்கும் கலைகளுக்கும் ஜீவாதாரமான ஸம்ஸ்கிருத மொழியைப் பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்த்து வந்த தென்னகத்தில் இந்தத் தூர்த்தசை நிகழ விடாமல் பாதுகாக்க வேண்டியது அவசியம். பள்ளிக்கூடத்தில் பாடமாக வைத்து வடமொழியைப் போதிப்பது இப்போது சிரமசாத்தியமாகி விட்டது. எனவே பள்ளி வேலை போக மீதி நேரத்தில் வடமொழியை எளிதிலும் விரைவாகவும் புகட்ட வழி என்ன என்று ஆராய வேண்டியது இன்றையத் தேவை.

இந்நூலில் வடமொழிப் பேரறிஞரான ஸ்ரீ கே. ராமவர்ம ராஜா அவர்கள் ஸம்ஸ்கிருத போதனை முறை பற்றி அக்கு வேறு ஆணி வேறாக அலசியிருக்கிறார். மாணவர்களுக்குச் சுலபமாகவும் அழுத்தமாகவும் மொழி ஞானத்தை ஏற்படுத்தும் வழி வகைகளை ஆராய்ந்திருக்கிறார். எனினும், வடமொழி போதனையானது பள்ளிப் பாடத்தில் இடம் பெறும் சாத்தியக்கூறு வெகுவாகக் குறைந்து விட்டது என்பதையும், மீதி நேரத்திலேயே அம்மொழியைக் கற்பிக்க வேண்டும் என்பதையும் முக்கியமாக வைத்து இந்நூல் எழுதப்பட்டிருந்தால் தென்னாட்டில் இதன் பயன் இன்னும் அதிகமாயிருக்கும். இப்போதும் ஆசிரியர்கள் இந்தப் புத்தகத்தைப் படிப்பதால் நற்பயன் எய்தக் கூடும். பாடத் திட்டத்திலும், பரீட்சை முறையிலும் நூலாசிரியர் கூறியுள்ள யோசனைகள் கவனத்துக்குரியவை.

ஆசிரியர்: கே. ராமவர்ம ராஜா; பிரசுரம்: காரியதரிசி, ஸம்ஸ்கிருதக் கல்விச் சங்கம், 14, கிழக்கு மாட வீதி, மயிலாப்பூர், சென்னை - 4; விலை ரூ. 5.

"சார்!"

பின்னாலிருந்து குரல் வந்தது. 'சார்' திரும்பி, மூக்குக் கண்ணாடியின் மேல் பாதி வழியே நோக்கினார். ஒரு கந்தல் சட்டைப் பையன்தான் அவரைக் கூப்பிட்டு நிறுத்தியவன். அவர் நின்றார். உற்றுப் பார்த்தார். இவன் கூப்பிட்டு நின்றோமே என்ற எண்ணம் அவருக்குத் தோன்றவில்லை. அவரது பார்வை அவனது ஏழைக் கோலத்தைக் கால் முதல் பரட்டைத் தலை வரை அளவெடுத்தது. அவனுக்கும் தமக்கும் அப்படியொன்றும் அதிக வேறுபாடு இல்லை. அவன் கிழிசல் சட்டை; தானோ கந்தல் கோட்டு. ஒன்றுக்கு இன்னொன்று மோசமில்லை.



"ஏண்டாப்பா?"

அவன் அருகே வந்து நின்றான்.

"சார்! சாப்பிட்டு ரெண்டு நாளாச்சு. ஒரு பிடி சோறு போட்டால் போதும். வேறொண்ணும் கேட்கலே சார்."

பையனுக்குப் பத்துப் பதினொன்று வயது இருக்கும். அழகிய உருண்டை முகம். நிறம் கூட வெளுப்புத்தான். துடிப்பு நிறைந்த கண் விழிகள். எடுப்பான மூக்கு.

உடல் நெடுக ஒரு நடுக்கம். வாத்தியார், "வா, என்னோடே" என்று கூறிவிட்டு நடந்தார்; அவன் தொடர்ந்தான். அவ



னுடைய பார்வையில் அவருடைய கந்தல் கோட்டும் கிழிசல் அங்கவஸ்திரமும் இப்போது ஆழப் படிந்தன. யார் யாரோ— டெரீன் பாண்டு, சரிகை வேட்டி, சில்க் வாயில், டெரிலெக்ஸ் பிரிண்டுகளெல்லாம் முகம் கொடுத்துப் பேசவில்லை. இந்தக் கிழிசல் வாத்தியார் மறு பேச்சில்லாமல் தன்னை அழைத்துச் செல்கிறாரே என்று அவனுக்கொரு வேதனை! ஏழை வீட்டுச் சாப்பாட்டுக்குத்தானு, தான் போய்ப் பசிநு கேட்க வேண்டும்?

வாத்தியார் பின்னோடேயே நடந்தான் பையன்.

அவர் தம் நடையைத் தளர்த்தி, அவன் உடன் வருவதற்காக ஒரு கணம் நின்றார். பின்புறம் மதர்லையை வளைத்துப் பையனைக் கேட்டார் — "சாப்பிட்டு எவ்வளவு நாளாச்சுன்னு சொன்னே?"

"ரெண்டு சார்."

"சரி வா." மேலே கேட்டால், பையனின் பசியைக் கிண்டுவதாக இருக்கும் என்று நினைத்தாரோ, என்னவோ?

ஒரு தோல் 'வார்' அறுந்த செருப்பு இடது பாதத்தைப் பிடித்து இழுக்க, அவர் சிரமப் பட்டுக் கொண்டு நடந்தார்.

திருட்டுப்புத்தி

'ரொம்பப் பசிக்கிறதோடாப்பா' என்று கேட்க வாயெடுத்தவர், 'என்ன அசட்டுக் கேள்வி' என்று முணுமுணுத்தார். அவனுக்குப் பசியாக இருக்கும். வேகமாய்ப் போகலாம் என்று எண்ணினாலோ செருப்பு வம்பு செய்தது. நின்று கால்களில் இருந்த ஒரு ஜோடியையும் எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு விரைவாக நடக்கலானார்.

ஒரு சின்னஞ்சிறு வீட்டு எதிரே நின்றார். பையனும் நின்றான். "என்ன முழிக்கிறே? உள்ளே போ. இதுதான் என் வீடு."

பையன் உள்ளே பார்த்தான். வீடு ஒரே இருள் சூழ்ந்திருந்தது. படியேறி உள்ளே நடந்தான். இருமல் சத்தம் ஒன்று உள்ளிருந்து வந்தது.

"நான்தான் வந்திருக்கேன்." வாத்தியாருடைய கழுத்தைச் சுற்றியிருந்த அங்கவஸ்திரத்தைப் பிரித்துச் சுவரில் ஆணி மீது மாட்டினார். உள்ளேயிருந்து ஓர் அம்மாள் வந்து எட்டிப் பார்த்தாள். அவள்தான் சற்று நேரத்துக்கு முன் வந்த இருமலுக்குச் சொந்தக்காரி என்பதைப் பையன் கூடப் புரிந்து கொண்டான்.

அவன் திருதிரு வென்று விழித்தான். போயும் போயும் இங்கே வந்தா மாட்டிக் கொள்ள வேண்டும்? சாப்பாட்டுக்குக்கூட விதியில்லாத இடம் போல் இருக்கிறதே! சுவர் எல்லாம்கூடவா கோட்டு, சட்டை மாறிப் போய்க் கிடக்கும்! நல்ல வீடு. நான் வந்து சேர்ந்த இடம்!

வாத்தியார் கோட்டைக் கழற்றிப் போட்டார். உள்ளே சட்டை இல்லாத அதிசயத்தைப் பையன் பார்த்துத் திகைத்தான்.

இருமலினூடே அந்த அம்மாள் விசாரித்தாள். "கூட யாரோ பிள்ளையாண்டான் வந்திருக்கான் போலிருக்கே."

"ஆமாம். ரெண்டு நாட்களாய்ப் பட்டினியாம். மணிக்கூண்டுகிட்டே வந்திண்டிருக்கிறப்ப, சார்னு கூப்பிட்டான். இப்படின்னு சொன்னான். அதுதான் அவனை அழைச்சிண்டு வந்திட்டேன்."

அந்த எசமானியம்மாளைப் பையன் கூர்ந்து கவனித்தான். தன் வீடு நோக்கி அஷ்டலட்சுமியும் வந்து விட்டாற் போன்றதொரு பொலிவு முகத்தில் சுடர் விட்டது.

"நாலு வீடு தள்ளிப் போனா, குழாய் இருக்கு. போய்க் கால் அலம்பிண்டு வந்திடப்பா."

வாத்தியார் அம்மணியின் அருகே சென்று என்னவோ காதல் கதை பேசுகிறவர் போல் காதைக் கடித்தார் — "என்னடி, ஏதாவது வச்சிருக்கியோ? பையனைப் பார்த்தால், பாவமாயிருக்கு. பக்கத்து வீட்டிலே யாவது கேட்டுப் பார். அவன் வயிறு ரொம்பணும்."

அவள், மேலே ஓட்டுக்கூரையில் செருகி யிருந்த ஒரு வாழை இலைச் சருகை எடுத்துச் சுருக்கம் போக விரித்துத் தரையில் போட்டுத் தண்ணீர் தெளித்தாள். "உட்கார்ந்துக்கோடாப்பா" என்று கூறினாள்.

பையன் அமர்ந்தான்.

மாத்தளிரா இலை ஓரத்தில் பிய்த்து இரண்டாய்ப் பண்ணிப் போட்டு விட்டு, மத்தியானச் சோற்றைக் கொணர்ந்து பெரிய பிடியாக நாலு எடுத்து இலையில் இட்டாள்.

"எப்படி இருக்கோ உனக்கு எங்க சாப்பாடு" என்று கூறியவண்ணம், கச்சட்டியி லிருந்த புளிக் குழம்பை இலையில் வார்த்தாள். பையன் மடக் மடக்கென்று சாப்பிடத் தொடங்கினான்.

"எண்டாப்பா, நீ எங்கேயிருந்து வரே?" இயல்பாகக் கேட்டாள் அந்த அம்மாள்.

வாத்தியாருக்குக் கோபம் வந்துவிட்டது. "ஒரு பிடி சோறு போட்டவுடனே, பெரிய அதிகாரமான விசாரணையாக்கும்! அதுக்கென்ன அவசரம் அதுக்குள்ளே! எங்கிருந்தோ வந்தான், உன்னையும் என்னையும் போல." கடுமையாக அவர் பதில் சொல்லி விட்டார்.

அன்போடு கேட்ட அவள்மீது அவர் அப்படிச் சீறினாற்போல் பேசியது அவனுக்கு வருத்தம் தந்தது. வாய்ச் சோற்றை விழுங்கிக் கொண்டே, அவன் பேசலானான். "இல்லே, சார். நானே சொல்றேன். நான் வந்து..... நான் வந்து....."

" சாப்பிட்டுட்டுச் சொல்வேன். ஒன்றும் அவசரமில்லேடாப்பா." குட்டுப்பட்டவள் சொன்னாள்.

"நான் வந்து..... நீங்க ஒருத்தர்கிட்டே யும் சொல்லிடாதீங்க."

''இல்லே, என்ன?'' வாத்தியார் துடிப்புடன் கேட்டார்.

''பார்ஸ்டல் ஸ்கூல் இருக்குதே, திருடின பசங்களைப் பிடிச்சுப் போடற பள்ளிக்கூடம், அங்கேயிருந்து சொல்லிக்காம ஓடிவந்தவன்.''

ஒரு கணம் இருவரும் 'ஆ' என்று வாயைப் பிளந்தனர்.

''பரவாயில்லே, சாப்பிடு.'' திரும்பிக் கொண்டே சொன்னான்.

சீவரொட்டி விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

''தூங்கிட்டேளா?''

''இல்லியே. என்ன வேணும்? ஏன் குரல் ஒரு மாதிரி இருக்கு? சாப்பிடல்லியா?''

''அது கிடக்கட்டும்.''

''கிடக்கட்டுமாவது. நான் கேட்டதுக்குப் பதில் சொல்லு. சாப்பிட்டியா, இல்லியா?'' ஒன்றும் வகுப்பு வாத்தியார்களுக்கே கொஞ்சம் அதிகார தோரணை உண்டு போலும்!

'' ஆமாம், சாப்பிடல்லே. என்ன குறைஞ்சு போயிடுத்து. ஒரு வேளை சாப்பிடாட்டா? ஏதோ அந்தப் பிள்ளையாண்டான், பசின்னு சொல்லிண்டு வந்து நாலு நாட்கள் ஆகப் போறது. அதனதப்பின்னே, பாவம், அவன்தான் சாப்பிடட்டுமே.''

ஆசையும் ஆர்வமும் பொங்க, அவளை அவர் பெருமிதத்துடன் பார்த்தார். ''நீயெல்லாம் தெய்வம்தான்!''

''ஆமாம், நீங்க தெய்வத்துக்கே தெய்வமாச்சே. அதுக்கென்ன சொல்றேன் ?''

பக்கத்தில் படுத்திருந்த பையன் புரண்டு கொடுத்தான். அவன் விழித்துக் கொண்டு தான் படுத்திருந்தான். கடைசியாக அவர்கள் பேசியது முழுவதும் அவன் காதில் விழுந்தது. தான் நுழைந்த நாள் முதல் அந்த அம்மாள் அரைப் பட்டினி என்பது அவனை உறுத்தியது. மறு நாள் விடிந்ததும், வாத்தியாரைத் தனக்கு எங்கேயாவது கடை, கன்னியில் வேலை பார்த்துத் தர முடியுமா என்று கேட்க வேண்டும். இல்லாவிடில், சொல்லாமற் கொள்ளாமல் ஓடிப் போய் விட வேண்டியதுதான். ஆம், சொல்லிக் கொண்டு செல்ல இந்தத் தம்பதிகள் விட மாட்டார்கள். இன்றைய இந்த உலகத்தில் இப்படியும் பிறவிகள்! மரியாதையாகத் தானகப் பிய்த்துக் கொள்ள வேண்டியது தான் வழி. இந்தக் குடும்பத்துச் சோற்றிலே பங்கு கேட்பது தப்பு!

''பையா, என்ன பேசறே? தூங்கு டாப்பா தூங்கு......மெதுவாய்ப் பேசடி.'' இது வாத்தியார்.

''சரி.''

இரண்டு மூன்று நிமிட மௌனம். திரும்பவும், மனைவி தொடங்கினாள். ''இந்தப் பிள்ளையாண்டான் அந்தத் திருடாள் பள்ளிக்கூடத்துக்கு ஏன் போனான்னு கேட்டேளா நீங்க?''

''இல்லியே. என்னவாம் விஷயம் ?''

அவருக்கும் ஆவல்தான்.

''நீங்க நான் சொன்னா நம்பமாட்டேள். என்னவோ கதை மாதிரி இருக்கும். இவன் சொல்ற அழகே போதும், இன்னிக்கெல்லாம் கேட்டிண்டிருக்கலாம் போலிருக்கு.''

பையனிடம் அன்று பேச்சுக் கொடுத்துக் கிரகித்ததை அவள் அவரிடம் கூறினாள். அநாதைப் பையன் என்பதற்கு ஏற்றாற் போல், பஸ் நிறுத்தம், கடைத்தெரு—இங்கெல்லாம் சுற்றிக் கொண்டிருந்தானும். ஒரு நாள் ஒரு கண் இல்லாக் கிழவி தெருவில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தாளாம். பையன் பார்த்த போது, அவளுக்கு இரண்டணாக்கூடக் கிடைக்கவில்லை. எப்படியாவது அவளுக்கு உதவி செய்ய வேண்டும் என்று தோன்றியதாம். பஸ் நிறுத்தத்தில் கும்பலோடு கும்பலாகக் கலந்து நின்றுகொண்டு முக்கால் மணி நேரத்துக்குள் பத்து ரூபாய்க்கு மேல் சேர்த்து விட்டானும்.

வாத்தியார் வாத்தியார் அல்லவா? ''ஏண்டி, இவன் செஞ்சது சரிங்கறயா?''

''நானெக்கி, இவனையே சொல்லச் சொல்லிக் கேளுங்கோ. கேட்டுட்டு நீங்க பேசுங்கோ. அந்தக் கிழவி பட்டினியா இருந்ததைப் பார்த்ததும், இவனுக்கு மனசு கேட்கலியாம். ஆனால், இவனே அப்போ அரைப் பட்டினி, குறைப் பட்டினிங்கிற நிலையிலேதான் இருந்தானும். அப்படியும் அந்தப் பத்து ரூபாயிலே காலணாக்கூட எடுத்துக்கலையாம். அந்தக் கிழவிகிட்டே கொண்டு போய்க் கொடுக்கப் போறப்போ, எவனோ போலீஸ்காரன் இவனைப் பார்த்துப் பிடிச்சுட்டானும்.''

வாத்தியாரின் மனம் இப்போது சிறிது தத்தளித்தது. ''திருடி, நாம எடுத்துக்கிட்டாத்தானே தப்பு? நான் பட்டினியா இருந்தாலும், அந்தக் காசுலே ஒரு காலணாவைக் கூடத் தொடல்லே. நமக்கு எதுக்குத் திருட்டுக் காசு? ஏதோ அந்தக் குருட்டுப் பாட்டிக்கு உதவலாமேன்னு தோணிச்சு.'' இவை தான் பையனின் வாசகங்கள்.

வாத்தியார் இருட்டில் இப்போது அந்தப் பையனை ஆதரத்தோடு நோக்கினார்.

செட்டியார் தலையை நிமிர்த்தவேயில்லை.

வாத்தியார் சரிதான்' என்று அங்கவஸ்திரத்தைப் பிரித்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார்.

''என்னங்க, வாத்தியாரா? வாங்க.'' ஒருவாறு கடைக்காரரும் தலை நிமிர்ந்தார்.

''ஒன்றுமில்லே, சும்மாத்தான்......''

''வீட்டிலே அம்மா சௌக்கியமா இருக்கு இல்லே ?''

''அம்மா சௌக்கியம்; அதனோடே இருமலும் ஒரு குறையுமில்லாமெ சௌக்கியமா இருக்கு.'' வாத்தியாருக்குக்கூடக் கொஞ்சம் ஹாஸ்யம் உண்டு போலும்.

ஓரமாக அந்த அநாதைப் பையன் நின்று கொண்டு ஆசிரியரை நன்றிப் பெருக்கோடு பார்த்தான். அவர் செட்டியாரிடம் சொல்லி வாங்கித் தந்த வேலைதானே அந்தக் 'கடைப் பையன்' உத்தியோகம்?

வாத்தியார் இடையே அதையும் விசாரித்தார் — ''நான் கொண்டு வந்து விட்டேனே, அந்தப் பையன் இருக்கானு? வேலை சரியாச் செய்யறானு ?''

''இருக்கானே அதோ ! நிக்கறானே, பார்த்துக்குங்க!''

அவன் முறுவல் பூத்தான்.

செட்டியார் பழையபடி கணக்குப் பேரேட்டில் புதைந்து விடுவார் போலிருந்

திது. வாத்தியார் மென்று விழுங்கினார்—''செட்டியார்வாள், ஒன்றுமில்லே. கொஞ்சம் தயவு.......''

''என்ன வேணும்னுட்டு அதுதான் கேட்டேன். விசயத்தைச் சொல்லுங்க.'' கொஞ்சம் கடுமையாகவே இருந்தது குரல்.

''ஒன்றுமில்லே. நம்ம சம்சாரம் நாலு நாளா ரொம்ப இருமிக் கொண்டே இருக்கா. ராப்பகல் ஓயாமெ, இருமறது.......''

''....சரி.'' — அப்பாடா, சரி என்பதில் கூட மனுஷனுக்கு இவ்வளவு விறைப்பா ? கடவுளே !

''நாட்டு வைத்தியர்கிட்டே காமிச்சேன். நாடியைப் புடிச்சுப் பார்த்தார். இருமல் சரியாகலாம்னுர்........''

''..............!''

''ஒரு பதினைந்து ரூபா கொடுக்க முடியுமானால், தேவலே, செட்டியார்வாள். நீங்க தப்பா நெனைச்சுக்கப்படாது...... என்னவோ ஓர் ஆசை, இருமல் சரியாப் போய், அவ பொழைச்சிட மாட்டாளான்னு.''

செட்டியார் வாத்தியாரைப் பார்த்துப் பேசினர். தெளிவாகவே பேசினர்; வீணில் குழப்பி மறைக்கிற பேச்சல்ல அது.

''இதப் பாருங்க, வாத்தியார்! நான் நீங்க கொண்டு வந்த ஆளே வேலைக்கு எடுத்துக்கலியா, சொல்லுங்க. உதவி செய்ய முடிஞ்சா, நிச்சயம் செய்வேன். ஆனா, இந்தக் கைமாத்து — கடன்கிற பேச்சு மட்டும் வேணாம். வீணிலே நம்ம சிநேகிதம்தான் கெட்டுப் போகும்.''

வாத்தியாரின் கரங்கள் குவிந்தன. ''செட்டியார்வாள் இல்லேன்னு சொல்லிட்டா, அப்புறம் நான் என்ன செய்யப் போறேன்? பெரிய மனசு பண்ணி நீங்க.......''

''வாத்தியார், நீங்க என்னெ இன்னும் புரிஞ்சுக்கலேன்னு. ஆகுது. நான் ஒரு வார்த்தை சொன்னு, மீற மாட்டேன். கடன் தர வழக்கம் இல்லேன்னு சொல்லிப்புட்டா, அப்புறம் நீங்கபாட்டிலே மேலே மேலே கேட்டுக்கிட்டிருந்தா?''

வாத்தியார் வாத்தியார்தான். ஆசனமாக இருந்த அங்கஸ்திரத்தை எடுத்துக் கழுத்தில் சுழற்றினர். ''நான் உத்தரவு வாங்கிக்கிறேன்.''

''செய்யுங்க.''

வாத்தியார் நடை தொய்ந்து விட்டது. கடைப் பையன் கண்களைத் துடைத்துக் கொண்டான். அவருடைய உருவம் நீரில் மங்கலாகத் தெரிந்தது. நாலைந்து நாட்களும், தான் பட்டினி கிடந்து சோறு போட்ட அந்த இருமல் — அம்மாளின் முகம் கண் எதிரே புகைமண்டலம்போலத் தென்பட்டது. பையனின் உதடுகள் விம்மலாயின.

ஆயிரம் இலட்சம் செட்டியார்களுக்கெல்லாம் மேற்பட்ட ஒரு சின்னக் கடவுள் என்பவரின் தயவிலோ, என்னவோ அந்த அம்மாளின் உயிர் இன்னும் இருக்கத்தான் செய்தது. சில சமயம் படுத்த படுக்கையான பின்தான், உயிரே வளரத் தொடங்கும்.

அப்போது, எங்கெங்கோ கைமாற்றுக்கு வழி செய்ய முயற்சி செய்து பார்த்துவிட்டு, அந்தக் களைப்புடன் வாத்தியார் வெறும் தோல்வியுடன் உள்ளே நுழைந்தார்.

''என்னடியம்மா, என்ன பண்றே?'' அவர் குரல் படுத்து விட்டது.

''இங்கே வாங்கோ.''

அவள் கையில் பத்து ரூபாய் நோட்டு ஒன்றும் ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றும் இருந்தன.

''ஏது இது?'' வாத்தியார், பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர் திகைப்பில் எழுந்தார்.

''சொல்றேன், கேளுங்கோ. அந்தப் பிள்ளையாண்டான் வந்துட்டுப் போனன் ஒரு நாழி ஆச்சு. அவன்தான் கொண்டு வந்து கொடுத்தான். ஒன்றும் சரியாப் பேசலே அவன். 'இதை வச்சுக்கோங்கோ மருந்து வாங்க. எனக்குக் கடையிலே அவசரமா ஒரு வேலை இருக்கு.' அப்படின்னு சொல்லிட்டு, ஓடியே போயிட்டான்.'' பேசியதில் அந்த அம்மாளுக்கு மூச்சு வாங்கியது.

''அவனுக்கு இந்தப் பணம் ஏதாம் ?''— வாத்தியார் வாத்தியார்தான். பணம் என்றதும் வாயைப் பிளக்கவில்லை. எப்படிக் கிடைத்தது என்ற குடைச்சல் வந்து விட்டது.

அவர் கைகள் நடுங்கின. ரூபாய் நோட்டுக்கள் கீழே விழுந்தன. அவற்றைக் குனிந்து எடுத்தார். இன்னும் நடுக்கம் நின்றபாடில்லை.

''இரு. நான் வரேன்.''

வேகமாக எங்கேயோ நடந்தார். வேறு எங்கே, எல்லாம் செட்டியார் கடைப் பக்கம் தான். அவருக்கு ஒரு பெரிய சந்தேகம். பையன், ஒருகால், — பழையபடி — தம் தொழிலில் இறங்கியிருப்பானே?

செட்டியார் தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

''செட்டியார்வாள்.''

''என்ன?'' தலை நிமிர்ந்தவர் புகார் விரித்தார். ''என்ன, ஓய், உங்க பையன் இப்படிப் பண்ணிட்டான்? உங்களுக்கு ஆள் அனுப்பி விசாரிக்கணும்னு நெனைச்சேன். நானே வரலாம்னு யோசனை பண்ணினேன்.''

வாத்தியார் துடித்தார். ''பையன் எங்கே? ஓடிப் போயிட்டானு?''

''ஆமாம், கல்லாவிலேயிருந்து பதினைந்து ரூபாயும் எடுத்துக்கிட்டு ஓடிப் போயிருக்கானுக்கும். வெறும் கையோடே போகல்லே, காமாட்டிப் பய.'' செட்டியார் உதடுகள் துடித்தன, பணம் பறிபோன கோபத்தில்.

வாத்தியார் உதடுகளும் துடித்தன. பையன் எங்கே பழையபடி பட்டினி கிடந்து தவிக்கிருனே என்ற தாபத்தில்.

''இன்னும் இரண்டு நாளானு முதல் தேதியன்னைக்கு நானே அந்தப் பணத்தைச் சம்பளமா கொடுத்திருப்பேன்; அதுக்குள் அவனுக்கு என்ன அவசரமோ ! திருட்டு ராஸ்கல்! கை அருஅருத்தது போலிருக்கு!''

வாத்தியாருடைய கைகளும் நடுங்கலாயின. ''செட்டியார்வாள்' அந்தப் பையனைத் திட்டாதீங்கோ. இந்தாருங்கோ அந்தப் பணம். எங்க வீட்டிலே சம்சாரத்துக்கிட்டே கொண்டு வந்து கொடுத்திட்டு ஓடிப் போயிட்டான். அதுதான், பணம் அவனுக்கு ஏதுன்னு சந்தேகம் வந்து உங்களிடம் ஓடி வந்தேன். இந்தாருங்கோ உங்க பணம். பத்திரமா வச்சுக்கோங்கோ. நான் வரேன்.''

கல்லாப் பெட்டி மீது பதினைந்து ரூபாய் நோட்டுக்களையும் வைத்து விட்டுக் கண்ணீரைச் சுண்டி விட்டுக் கொண்டு, வாத்தியார் வேகமாக நடந்தார்.

"விஷயம் தெரியுமா?" ஆவலைக் கிளப்பும் கேள்வியுடன் செக்ஷனுக்குள் நுழைந்தான் குப்புசாமி. ஆவலுடன் பல ஜோடி விழிகள் 'ஸஸ்பென்ஸ்'க்கே பிறந்த குப்புவை நோக்கின.

"என்ன? எங்கேயாவது நல்ல மண்ணெண்ணெய் கொடுக்கிறானா?"

"கவர்ன்மெண்ட் பிரிஸ்கிரைப்டு டெக்ஸ்ட் புத்தகங்கள் அதற்குள் பிரிண்டாகி வந்து விட்டனவா?"

"இல்லே, சர்க்கார் ஆபீசுகளில் டி. ஏ. அதிகமாகிறதே, நம் கம்பெனியில் வேலை செய்யும் நேரம்தானே அதிகமாகிறது பிளிஸல் ஏற ஏற? என்று யூனியன் மூலம் கேட்ட கேள்விக்குப் பதில் வந்துவிட்டதா?"

இப்படிப் பல குரல்களும் அவன் கிளப்பி விட்ட ஆவலை விசிறி விட்டன.

"ஐயோ! எப்பவும் பிஸினஸ் நோக்குத்தான், லாப நஷ்டக் கணக்குத்தான்... இது உயிர் போகும் விஷயமய்யா... நம் ஸ்டெனோ மணியம் விபத்துக்குள்ளாகி விட்டார்..." குப்புசாமி அவனுக்கே உரிய சுருதியில் அரைப் புள்ளி வைத்தான்.

"என்ன.... என்ன... ஆக்ஸிடெண்டா?"

"ஏன்... சீரியஸ்தான்... ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் சென்று விட்டார்கள்."

"அட பாவமே! அவன் ஒரே பெண்ணுக்குக் கல்யாணமாகி ஒரு மாதம் கூட ஆகவில்லையே?" ராமன் அனுதாபப்பட்டான்.

"எப்படி? என்னவாயிற்று? சொல்லித் தொலையேன் ஐயா!" கண்ணன் பொறுமையின்றிப் புலம்பினான்.

நானோ கல்லாய்ச் சமைந்து விட்டேன். 'பகீர்' என்றது அடிவயிற்றில். துணைக்கு என் உணர்ச்சிகளைப் பகிர்ந்து கொள்ளச் சுற்றும் முற்றும் நோக்கினேன். சாம்பு இன்னும் வரவில்லையோ?

மறுபடியும் குப்புவின் குரல்தான் என் நினைவுக்குப் பதிலாக அமைந்தது. "வழியிலேயே சாம்பு சாரைப் பார்த்தேன். செய்தியைக் கேட்டதும் அலறிப் புடைத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினார். இருவரும் எத்தனை வருஷத்துச் சிநேகிதம்! அவர் தூரத்து உறவு கூடவாம்!"

நானும் பதறித் துடித்துத்தான்போனேன். ஆனால் சாம்புவின் பதற்றத்துக்குக் காரணம்

கடன்



நட்பு மட்டும்தானா இருக்கும்? என் பரபரப்பு அவருக்கு இருக்காதா? அவரும்தானே கூட்டுச் சேர்ந்தவர்!

மணி பத்துக்கு விபத்து! காரியாலயமே கண்ணீர் விட்டது. மாலையில் எல்லாரும் கம்பெனி வானில் போய்ப் பார்த்து விசாரித்து விட்டு வருவது என்று முடிவாயிற்று. என்ன கேட்பது, விசாரிப்பது? எல்லோரும் கேட்க நினைப்பது அநுதாபக் கேள்விகள். நானும் அவர்களுடன் நின்றுவிட்டு வந்து விடலாம். ஆனால் என்னுடைய உள் மனத்தில் குடையும் பிரச்னைக்கு, கேள்விக்குப் பதில் எப்படிக் கிடைக்கும்?

என் மனம் இரண்டு மாதங்கள் முன்பு நடந்த விஷயத்தில் சுழன்றது...

அன்று மணியம் கையைப் பிசைந்து கொண்டு என் முன் நின்றார். "சங்கர்! நான் உங்களைத்தான் நம்புகிறேன். சாம்பு ஒத்துக் கொண்டு விட்டார். நீங்களும் தலை அசைத்தால்.... கன்னிகாதானம் செய்த பலன் கிடைக்கும்."

நான் திகைத்தேன்.

"ஹி...ஹி... ஒன்றுமில்லை. என் பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயமாகி விட்டது. அதில் துண்டு விழும் தொகையை நம் கோவாபரேட்டிவ் சொஸைட்டியில் கடனாகப் புரட்டலாம் என்பது. எனக்கும் 'ஷேர்கள்' இருக்கின்றன.... அதற்கு ஒரு கையெழுத்து..."

"ஷ்யூரிட்டியா?" நான் திடுக்கிட்டேன்.

"எஸ்... எஸ்...ஸார்! இந்த ஆபீஸில் அநேகமாக மற்ற யாவரும் ஒன்று, வேறு யாருக்காவது ஓரிருவருக்கு ஜாமீன் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். அல்லது அவர்களே கழுத்து வரை கடன் வாங்கியிருக்கிறார்கள். அதனால் சாம்புதான் சொன்னான், உங்களைக் கேட்கச் சொல்லி. எனக்கும் சங்கோசமாகத்தான் இருக்கிறது." காலில் விழாத குறையாகக் கெஞ்சினார் மணியம்.

"பார்க்கலாம். எத்தனைக்கு?"

"மூவாயிரத்து ஐந்நூறு ஸார்..."

"பெரிய தொகைதான்."

"அதனால் என்ன ஸார்... இதெல்லாம் ஒரு ரொட்டீன் பத்ததிதானே... ஓடுகிற ஓட்டம். மூன்று நான்கு வருடங்களில் கடன் அடைந்துவிடும். அவசரமில்லை. யோசித்துச் சொல்லுங்கள்."

நானும் யோசித்தேன். ஒன்றும் தவறாகத் தோன்றவில்லை. ஆனால் வீட்டில் கலந்து ஆலோசித்தேன்.

"ஷ்யூரிட்டிக் கையெழுத்தா? அதென்னவாம்? ஜாமீன்தானே? நாளைக்கே அந்த மனிதரால் பணத்தைக் கட்ட முடியாமல் ஏதாவது நேர்ந்துவிட்டால்? கடனின் பொறுப்பு உங்களுடையதாகி விடுமல்லவா?" இப்படிக் கேட்டு ஆட்சேபித்தவள் என் மனைவிதான். "பணம் காசு விஷயத்தில் மட்டும் இந்த நட்பு, தாட்சிண்ய விவகாரம் வேண்டாம். அப்புறம் ஏதாவது..."

"சீ, அசத்து." நான் சீறினேன். "நல்ல காரியத்துக்கு ஏற்பாடாகும்போது 'அல்து' என்று ஏதாவது உளறாதே...ரொம்பத் தெரிந்தவள் மாதிரிதான் பேச்சு புறப்படுகிறது. உன் யோசனையைக் கேட்கவில்லை. உனக்கு விஷயத்தைச் சொன்னேன். அவ்வளவுதான்." அவளிடம் விருப்புப் பேசிய குடு குறையாமலே மறு நாள் என் கையெழுத்து நாட்டு விழாவும் நடந்து விட்டது. மணியத்துக்கு ஏக மகிழ்ச்சி அன்று; ஆனால் எனக்கு இன்று...

* * *

ஆஸ்பத்திரி வராந்தாவுக்குள் நுழைந்த போதே என் அடிவயிற்றைக் கலக்கியது.

"ஹூம்... போன மாதம் இதே நாள் மணியத்தின் பெண் கல்யாணத்துக்குப் புறப்பட்டபோது இன்று இப்படிக் கிளம்ப நேரும் என்று யாராவது சிந்தித்திருப்போமா?..." கண்ணன் குரல் கரகரத்தது.

"மனிதனுக்கு எது எப்போது வரும் என்று தெரியாதபோதே தலைகீழாக நிற்கிறது உலகம்!...ம்!" மூக்குவாயைத் தடவியபடி வேதாந்தம் பேசினார் ராமன். முன்னே பத்துப் பேர்களை விட்டு நான் பின்னே நடந்தேன்.



ஸ்ரீப்ரியா

சாம்பு அறை வாசலில் எங்களை வரவேற்றார். காலை முதல் அவர் பாவம் அங்கேயே தான் கிடக்கிறாராம்.

எல்லோரும் படுக்கையைச் சூழ்ந்துகொண்டனர். மணியத்தின் மனைவி அழுது அழுது சிவந்த முகத்தை மறைத்துக் கொண்டு ஜன்னல்புறம் திரும்பிக் கொண்டாள். ஒரே மகள் எங்களைக் கண்டதும் பெரிதாக விம்மி அழுதாள்.

''எப்படி ஸார், அவ்வளவு அஜாக்கிரதையாக வரக்கூடியவரல்லவே நீங்கள்?...இந்த 'சபர்பன்' வண்டிதான் புதிதா? பம்பாய் வாசிகளான நம் ஆயுளில் கால் பாகம் இந்தப் பிரயாணத்திலேயே கழிந்து விடுகிறதே! ஒரு மழை நாளில் தெருவில்கூட 'ஸ்லிப்' ஆனதில்லையே உங்களுக்கு....'' ஏதேதோ விசாரிப்புகள்!

''நல்ல காலம்! வண்டிக்கு அடியில் போய் விழாமல் பிளாட்பாரத்துக்கும் வண்டிக்கும் இடையில் விழுந்ததால் இந்த மட்டுமாவது காண முடிந்தது.''

''எல்லாம் விதி ஸார்; வேறென்ன சொல்வது நல்லபடி ஆனால் சரி.....'' என்னென்னவோ தேறுதல்கள்!

''டாக்டர் என்ன சொல்கிறார்?'' யதார்த்தமாகவோ, காரணமாகவோ அந்தக் கேள்விதான் என்னால் கேட்க முடிந்தது.

''அவர் என்ன சொல்வது? அபாயமில்லை என்கிறார். இருந்தாலும் இருபத்தி நாலு மணி நேரம் போக வேண்டுமாம். தலை பிளாட்பாரத்தின் விளிம்பில் மோதியதால் இரத்தம் அதிகமாகப் போய் விட்டதாம்.'' சாம்புதான் எல்லோருக்கும் பொதுவில் பதில் அளித்தார்.

''அநாதைக்குத் தெய்வம்தான் துணை என்பார்கள். எனக்கு அவரேதான் துணை, தெய்வம் எல்லாம்...'' முதல் முறையாக ஸ்ரீமதி மணியம் வாய் திறந்தாள்.

என் அடிவயிற்றில் ஏதோ 'சொரேர்' என்றது. ஒரு பெண்ணின் வாழ்வே ஊசலாடுகிறது. என் மனமோ எதை எண்ணி ஊசலாடுகிறது? என்ன இழிவான புத்தி எனக்கு? மணியத்தையே சகலமுமாக நம்பி வந்த பத்தினி அவள். அவளுடைய கவலையின் முன் ....ஆனால் என்னை நம்பி வந்தவளுக்கு நான் என்ன பதில் சொல்வது! அதிலும் ராஜி என்னைக் கொத்தி எடுத்து விடுவாளே இப்போது! கவலையுடன் படுக்கையை நோக்கினேன். ஏதோ அரை மயக்கத்தில் ஆள் அடையாளம் கூடப் புரியாமல் மிரள மிரள விழித்தார் மணியம். என் மனமும் விழித்தது. இருதலைக் கொள்ளி எறும்பாக! சாவின் முன் அற்பப் பணத்தைக் கணக்கிடக் கூடாதுதான். ஆனால் சாவு என்று தீர்மானமாகுமுன் அந்தப் பந்தத்திலிருந்து விடுதலை பெற மட்டும் ஏதாவது வழி செய்ய முடிந்தால் எத்தனை நன்றாக இருக்கும்? சாம்புவிடம் அது பற்றிக் கேட்டுவிடலாமா? என்ற துடிப்புக்கூட ஓரிரு முறை என் நுனி நாக்கு வரை வந்து விட்டது. ஆனால், சே, இப்போதா? அவர் மனைவியும் மற்றவர்களும் எத்தனை இழிவாக நினைக்க மாட்டார்கள்? ஏன், நானேயே அவர் பிழைத்து வந்துவிட்டால், மணியத்தை இனி எந்த முகம் கொண்டு பார்ப்பது? பணத்தை விடுவதா? கௌரவத்தைக் காப்பதா? பணமா, பெருந்தன்மையா? அந்த மூவாயிரத்தில் ஆயிரத்து ஐந்நூறுதான் என் தலையில் விடியும் என்றாலும் அதில் எனக்கெனச் செய்து கொள்ள எத்தனை காரியங்கள் இல்லை? ராஜி வெகு நாட்களாகக் கேட்கும் வைரத்தோடு, ஊரில் இதோ ஆட்டிச் சுவராவேன், உளுத்த மரமாவேன் என்று இடித்து நிற்கும் வீட்டின் ரிப்பேர்... இப்படி எத்தனையோ என்னுடைய நினைவில் சுழன்றன.

மெல்ல வெளியே நடந்தோம்.

''பெரிய பிள்ளை, 'சற்றுப் பிரக்ஞை வந்ததும் வக்கீலை எதற்கும் அழைத்து வந்து விடலாமா?' என்கிறான் சார்!'' சாம்பு யாரிடமோ கூறிக் கொண்டிருந்தார்.

''சே.. இதெல்லாம் பிள்ளைகளா?''

சொத்து, பங்கு பற்றி ஏதாவது பேச்சு வருகிறதா என்று நான் செவியைத் தீட்டிக் கொண்டேன்.

''ஆமாம், கிரீப்பிள்ளைகள்! மனைவியின் பேச்சைக் கேட்டுப் பெற்றோர்களை அடித்துத் துரத்தாத தோஷமாகக் கண்ணீரும் கம்பலையுமாக வெளியேற்றியவன்தானே மூத்தவன்.''

''ஆமாம். அப்போதுதான் இரண்டாமவன் தாயின் உதவிக்கு என்று கல்யாணம் செய்து கொண்டான்.''

''வாழ்ந்தான்! எல்லாம் கூரை மேல் ஏறிக் கொள்ளி வைப்பவன்தான் என் பிள்ளைகளுள் நல்லவன் என்ற கதைதான்! அந்த ஒரு பெண், அதற்குக் கல்யாணம் செய்வேனு என்று தவித்தார் மனிதன். அது பாருங்கோளேன்......கடமை முடிந்ததுபோல் இன்று இப்படி...'' மேலே சொல்லக் கூசினார் ஒருவர்.

சாம்பு உள்ளம் குமுறினார். அதைக் கேட்டு நான் வியப்புடன் அவரை நோக்கினேன். இந்த மனிதனால் அந்த நினைப்பே இல்லாமல் இருக்க முடிகிறதா? எப்படி? அப்படி அவரும் பிரமாதப் பணக்காரரில்லையே! இந்த அழகான ஆபீஸ் வழக்கங்களும் அவர் அறியாததா? முன்பு ஒரு பஞ்சாபிக்காரன் பெரிய தொகை எடுத்துக் கொண்டு ஓடி விட்டான். அவன் பிள்ளையும் ஏதோ பிஸினஸ்தான். ஆனால் ஆபீஸ் சட்டம், 'ஷ்யூரிட்டி' போட்டவர்களை யல்லவா பிடித்தது? அவர்கள் தவித்த தவிப்பு என்ன! முகமறியாத அந்த ஓடினவன் மகனிடம் பிச்சை கேட்டார்கள். நல்ல காலம்! பிள்ளை அப்பனைப் போல் அல்லாமல் தானாக முன்வந்து தந்தையின் கடனை அடைத்தான். ஆனால் இந்த மணியத்தின் பிள்ளைகள்...?

நாங்கள் பிரியும் இடம் வந்தது. ''என்னானாலும் சங்கர் தைரியசாலிதான். அந்த ஆஸ்பத்திரிச் சூழ்நிலையும் அலங்கோலமும், அந்தம்மாளின் முகமும் எங்களைக் கலங்க வைத்தபோது அவர் எத்தனை தைரியமாக மணியத்தின் அருகில் சென்று அடையாளம் தெரிகிறதா என்று விசாரித்து, சார்ட்டுகள், மருந்துகளையெல்லாம் சோதித்துஅறிந்தார்!'' எல்லோரும் என்னைப் பாராட்டியபோது அவர்கள் என்னுள் குடையும் பயத்தை அறியாதபடி அசட்டுச் சிரிப்பை வழிய விட்டேன். நான் பயந்தது 'யமன்' என்ற மூன்

HERE'S QUBIRAMA SO BRIGHT AND NEW
DESIGNED FOR USE AND AMUSEMENT TOO

Icecream fans (and who isn't) will cheer for Qubirama the wide mouth vacuum flask with *serving spoon for scooping out generous portions *patented expandable stopper which helps keep constant temperature *sturdy handle for easy carrying.


Spend your leisure moments picking out the cubes, diamonds, squares and other patterns in Qubirama's vibrant kaleidoscopic 3-D design. Qubirama comes in four sparkling colours: *Acapulco Amber, Barcelona Blue, Gambia Green & Bermuda Black *each topped by a frost-white cup. Qubirama features that longtime quality which makes Eagle the most trusted name in flasks around the world.

(Model: Q-350 Trd. capacity ½ litre)

EAGLE VACUUM BOTTLE MFG. CO. PVT. LTD.

144-46, Sheriff Devji (Chuckla) Street, Bombay 3.







SERVING SPOON TOO

CBEY-17

தொழுத்துக்காரனுக்கல்ல; 'பணம் அல்லது கடன்' என்ற மூன்று அக்ஷரத்துக்குத் தான் என்பதை யாரறிவார்?

"மணியம் எப்படி இருக்கிறார்? என்னவாயிற்று?" ராஜி உண்மையான கவலையுடன் விசாரித்தாள். எனக்கு வியப்பாகக் கூட இருந்தது.

"எனக்கு என்னவோ நம்பிக்கையில்லை." எதையோ மனத்தில் வைத்துப் பேசினேன்.

"சே... எதற்கு அப்படிச் சொல்கிறீர்கள்? பாவம், அந்தம்மாள் குணத்துக்காகவாவது அவருக்கு நல்லபடியாக வேண்டும்." ஒரு பெண்ணுக்கு இன்னொரு பெண் கேட்கும் மாங்கல்யப் பிச்சையாக இருந்தது அது.



நான் மௌனமாகவே இருந்தேன். மேலே பேசினால் அவள் எங்கே பணத்தைப் பற்றிக் கேட்டுவிடுவாளோ என்ற பயம் எனக்கு. ஆனால் மூச்சுக்கு மூச்சு அன்று முழுதும் ராஜி அந்த விபத்துப் பற்றியே பேசுவதும், அவர் பிழைத்தெழ வேண்டும் என்று பிரார்த்திப்பதுமாகவே இருந்தாள். ஒருகால் நானாகப் பேசுகிறேனோ என்று நோட்டம் விடுகிறாளா?

ஆபீஸுக்குள் நுழையும்போதே 'சோக'மென்றிருந்த சூழ்நிலை விஷயத்தை அறிவித்துவிட்டது. அன்று விடியற்காலையில் மணியம் கதையாகி விட்டார். வாய் விட்டு அழுதனர் சிலர். கண் கலங்கினர் பலர்; நான் செயலிழந்து போனேன். மணியத்தின் மனைவி பிள்ளைகளுக்கும் பணம் கேட்டதாகச் சாம்பு ஆபீஸில் வாங்கிச் சென்றார். செய்தி காற்றினும் கடிதாகப் பரவியது.

"'ஸார்! நீங்களும் சாம்புவும்தானே அவருடைய 'லோனு'க்குக் கையெழுத்துப் போட்டீர்கள்?" திடீரென்று ஒருவர் அநுதாபம் என்மீது திரும்பியது.

"ஆமாம், அதற்கென்ன?" - என் குரல் நடுங்கியது:

"பஞ்சாபிக்காரன் இந்தர்சிங்குக்காக சவாலி மாட்டிக் கொண்டது போல்தானோ?" இன்னொருவர் வயிற்றெரிச்சலைக் கிண்டினார்.

"சே... மணியம் அப்படியில்லை. ஆனால் பிள்ளைகள் அப்பன் கடனுக்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லிவிட்டால்?" ஒரு மகானுபாவன் மனத்தைக் குழப்பினார்.

என் தலை சுற்றியது. எப்படியோ பதினைந்து நாட்கள் ஓடிவிட்டன. அன்று சாம்பு தம்முடன் என்னை அழைத்தபோது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அன்றுதான் தலைமையிடத்திலிருந்து எங்களுக்கும் மணியத்தின் பணத்துக்குத் தகுந்த ஏற்பாடு செய்யும்படி எச்சரிக்கைக் கடிதம் வந்திருந்தது. அதை எடுத்துக் கொண்டு வீட்டுக்குள் நுழையவே பயந்துகொண்டிருந்த என்னுடன் கலந்தாலோசிக்கத்தான் அவர் அழைத்திருக்க வேண்டும். ஆனால் இதென்ன?

யார் வீடு இது? முன்பு ஒரு முறை 'தன் குடில்' என்று ஒரு பெரிய வீட்டுக்கல்லவா அவர் அழைத்துச் சென்றார் என்னை? தயக்கத்துடன் அவர் பின் அந்த வீட்டுக்குள் நுழைந்தேன்.

"வாருங்கள்" எதிரே நின்ற உருவத்தைக் கண்ட என் உடம்பு ஒரு முறை நடுங்கியது. பளபள வென்று தேய்த்த குத்து விளக்குக் திரி கருகித் தூக படுத்தது போல் நின்றது ஸ்ரீமதி மணியம்தான்!

"எனக்கு உங்களிடமெல்லாம் பேசவே வெட்கமாக இருக்கிறது. அவர் இருந்தவரையில் ஒரு பால்காரனிடம் கூடத் தவணை கேட்டதில்லை நான்."

நான் பூமியை நோக்கினேன். மனம் ஏதோ கணக்கிட்டு அழித்துக் கலங்கியது.

"அதனால் என்னம்மா. ஏதோ நிர்ப்பந்தம் நேர்ந்துவிட்டது. உங்களிடம் சொல்லவில்லை என்று பின்னால் பேச்சு வரக் கூடாதே என்பதற்காகத்தான் மத்தியானம் வந்து ஆபீஸ் கடிதத்தைக் காட்டினேன். ஆனால் அதற்காகப் பணத்தை நீங்கள் உடனே கட்ட வேண்டும் என்று நான் கேட்டதாக நினைக்கக் கூடாது. சங்கரும் அப்படிப்பட்டவரல்ல." சாம்பு அவளைச் சமாதானப்படுத்த ஏதோ பேசினார்.

"அப்படிக் கேட்டாலும் தவறில்லை. நான் முந்திக் கொண்டு கொடுக்காவிட்டால்தான் தவறு."

நான் திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்தேன்.

"இதோ முப்பது பவுன் நகைகள். இவற்றைக் கல்யாணத்தின்போதே நான் அழித்தோ விற்றோ உபயோகிக்கலாம் என்றேன். ஆனால் அவர் தாம் இருக்கும்வரை அவைகளை நான் கழற்றுவதை விரும்பவில்லை போலும்! ஆனால், கடவுள் இன்று பிடுங்கி எறிந்துவிட்டார்! இதுபோல் ஊரில் கையகல நிலம் ஒன்றுண்டு! அதையும் அன்று அவர் விற்க விரும்பாமல் தான் கடன் வாங்கினார். கடனை அடைத்து விடலாம் என்று நம்பினார். ஆனால் அதற்குள் அவருடைய சோற்றுக் கடன் இந்தப் பூமியில் தீர்ந்துவிட்டதே!" அந்தம்மாள் விம்மினாள்.



என் நெஞ்சை ஏதோ அடைத்தது.

சாம்புவுக்கும் குரல் கரகரத்தது. ''அப்படி ஒன்றும்அவசரமில்லையம்மா இருக்கட்டுமே விடுங்கள்!''

''நன்றாக இருக்கிறதே! காலத்தின் முன் எது அவசரம், எது இல்லை என்று நம்மால் கணக்கிட முடியாது என்பதற்கு அவர் கதை தான் எடுத்துக்காட்டாகி விட்டதே! சாம்பு மாமா, மறுக்கக் கூடாது. அவர் பிள்ளைகளைக் கூடத் தம் கடமைக் கடனாகத்தான் வளர்த்தார், பிரதி எதிர்பார்க்காமல்! அதுபோலவே அவர்களும் 'கடனில் எங்களுக்குப் பங்கில்லை' என்று தங்கள் கடமையை மட்டும் கிரியைகளுடன் முடித்துவிட்டு மனைவிமார்களுடன் சென்றுவிட்டனர். பிள்ளையாவது, பெண்ணாவது, எது உறவு? ஆனால் நான் அவர் மனைவி; சட்டப்படி, சாஸ்திரப்படி அவரில் பாதி! அதாவது கையெழுத்துப் போட்டுப் பத்திரம் எழுதாமலே அவருக்கு ஜாமீன் நான்தான். அவருடைய சுக துக்கம், கடன், வரவு எல்லா வற்றிலும் எனக்கும் பொறுப்பு உண்டு. இந்தக் கடன் தீர்ந்தால்தான் அவர் ஆத்மா சாந்தியடையும் என்று எனக்குத் தெரியும். அதுவும் அன்றுமட்டும் அவருக்குப் பேச முடிந்திருந்தால் கட்டாயம் நண்பர் சங்கரிடம் வாய்விட்டே சொல்லியிருப்பார் இதை! ஏனெனில் அவர் பல முறைகள் சொல்லியிருக்கிறார்: 'சங்கர் எத்தனை நல்ல பையன்! அதிகப் பழக்கம் இல்லாமலே தாமதிக்காமல் கல்யாணம் என்றதும் கடன் கையெழுத்துப் போட்டானே!' என்ற நன்றி அவருக்கு எப்போதும் உண்டு.''


முதன் முறையாக என் கண்டத்திலிருந்து ஒரு விம்மல் வெடித்தது. ஒருகால் என் தவிப்பையும் அவர் ஆத்மா புரிந்து கொண்டிருக்குமோ! மனசை ஏதோ உறுத்தியது! என் மனைவி பணத்தைப் பற்றிக் கேட்காதது எனக்குப் புரிந்தது. பெண்களுக்கு முன் ஜாக்கிரதை அதிகம். ராஜி என்னைக் கையெழுத்திடத் தடுத்தது போல் மணியத்தின் மனைவி கடன் வாங்கவே தடுத்திருக்கிறாள். ஆனால் காரியம் கைமிஞ்சிய பின் ஆபத்து என்றால் அதாவகிய பலாபலன் பற்றி யோசனைகளைப் போட்டுக் குடையாமல், காரியத்தில் இறங்குவதிலும் அவர்கள் தேர்ந்தவர்கள். அதனால்தான் ராஜி பணத்தை மறந்து பரிவு கொண்டாள்! இந்த அம்மாளும் துயரை மறந்து கடமையை நிறைவேற்ற முன் வந்தாள்.

சிந்தனை நெஞ்சைக் கிளறக் கிளறக் கண்கள் பொங்கிப் பெருகின. இது மணியத்தை எண்ணி நான் வடிக்கும் கண்ணீர் என்று அவர் மனைவி நினைக்கலாம். ஆனால் என் அறியாமையைக் கரைக்கும் புனித நீர்ப் பெருக்கு என்று யாரறிவார் அதை?

பேழையில் இருந்த நகைகள் சிரித்தன. அந்தம்மாள் கணவனுக்குத் தன் கடமையைச் செய்துவிட்ட கம்பீர நினைவுடன் எதிரே நின்றாள். சாம்பு எப்போதும் போல் சலனமற்று அமர்ந்திருந்தார். ஆனால் நான் என் நெஞ்சின் பாரம் தீர அழுது தீர்த்தேன். ஆம், அன்று பிணத்தின் முன் கூடப் பணத்தை எண்ணி ஏங்கிய நான், நண்பர் மணியத்துக்கு என் கண்ணீர்க் கடனைத் தீர்க்க வேண்டாமா?

போர்ஹான்ஸ் டபிள்-ஆக்ஷன் டூத்பிரஷ்

பற்சிதைவை இரு வழிகளில் தடுக்கிறது!



பல்லிடுக்குகளில் சிக்கிக் கொள்ளும் உணவுத் துணுக்குகள் பற்சிதைவிலே கொண்டுபோய் விடும். போர்ஹான்ஸ் டபிள்-ஆக்ஷன் டூத் பிரஷ்ஷில் உள்ள உறுதி-யான நீலநிறக் குச்சங்கள் அத் துணுக்குகளை அகற்றுவதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளன; ஆகவே, பற்சிதைவைத் தடுக்க உதவுகின்றன.

ஈறுகளை அசட்டை செய்தால் கொடிய பற்கோளாறுகள் ஏற்படக்கூடும். போர்ஹான்ஸ் டபிள்-ஆக்ஷன் டூத் பிரஷ்ஷில் இருக்கும் மென்மையான வெண்ணிறக் குச்சங்கள் உங்கள் ஈறுகளைத் தேய்த்து வலுப்படுத்துகின்றன. இதன் மூலம், ஈறுகளை உறுதியாகவும் ஆரோக்கியத்துடனும் திகழச் செய்கின்றன.

இன்றே உபயோகிக்கத் தொடங்குங்கள்

போர்ஹான்ஸ் டபிள்-ஆக்ஷன் டூத்பிரஷ் போர்ஹான்ஸ் பற்பசைக்கு உற்ற துணை.

ஜாப்ரே மானேர்ஸ் அண்ட் கோ. லிமிடெட்

CHTB-1-T36

வட்ட மேஜை

- சிறப்பு மலர்
- சிறப்புக் கதைகள்
- பாம்புக்கு வார்த்த...
- சர்க்கார் தொல்லை

'கல்கி' சிறுகதைச் சிறப்பு மலர் கண்டேன். மலரா அது? இல்லை — தொடுத்த மாலை அது. முன்னம் தாங்கள் வெளியிட்ட விவசாய மலர், நகைச்சுவை மலர், ரயில்வே மலருடன் இதையும் பாதுகாத்து வைத்துள்ளேன்.

ஸ்ரீரங்கம்
29-7-65 அழகிரி விசுவநாதன்

நீங்கள் 8-ம் தேதி இதழில் வெளியிட்டிருந்த திரு தாமரை மணாளனின் "இலஞ்சம் ஒழிந்தது" என்ற சிறுகதையை நானும் எனது நண்பர்களும் படித்து வெகுவாக ரசித்தோம். உள்ளதை உள்ளவாறே நயம்பட விவரித்திருக்கும் கதாசிரியரும் ரெவின்யூ இன்ஸ்பெக்டராக இருந்து அநுபவப்பட்டவராகவே இருக்க வேண்டும்! வேறு யாராலும் இவ்வளவு துல்லியமாக வர்ணிக்க இயலாது. சிறப்புக் கதையாக வெளியிட்டிருந்த தங்களுக்கு நன்றி. கதாசிரியருக்கு எங்கள் பாராட்டு.

விருத்தாசலம் கே. ராஜேசுவரன்,
9-8-65 கே. ஜகந்நாதன்,
டி. ராஜரத்தினம்,
ஆர். கோவிந்தராஜன்,
ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள்

திரு ரா. கணபதி அவர்களின் லக்ஷ்மி சிரிக்கவில்லை என்ற சிறப்புச் சிறுகதை சிந்தனைக் கருவூலத்தை நன்கு தூண்டி விடுமளவுக்கு அமைந்துள்ளது.

"சாதல் இல்லையேல் காதல்" என்னும் 'சோ' எழுதிய நாடகத்தை அணு அணுவாக ரசித்தேன். மேலும், பல நாடகங்களைத் தமிழ்கூறும் நல்லுலகத்துக்குக் 'கல்கி' மூலம் எதிர்பார்க்கிறேன்.

ஆழ்வார் திருநகரி
13-8-65 சின்ன ஜெயகாந்தன்

டோக்கியோ சமாதானக் குழுவுக்கு கம்யூனிஸ்ட் நபர் ஒருவரை இந்திய சர்க்கார் அனுப்பியது. மோகன் சிங் சேதி என்ற அவர் சமாதானக் குழுவில் இந்தியாவை அமெரிக்காவுக்கு வால் பிடிக்கும் நாடு என்றும், மிக மோசமானவர்களால் ஆளப்படும் நாடு என்றும் உலகப் பிரதிநிதிகள் கூடிய கூட்டத்தில் வெளுத்து வாங்கியிருக்கிறார். இதுமட்டுமல்ல; சீனாதான் உண்மையான ஜனநாயக ஆட்சி நடத்தும் நாடு என்று சீனாவுக்குத் துதி பாடியிருக்கிறார். உலகப் பிரதிநிதிகள் சபையில் இந்திய கௌரவமே காற்றில் பறந்தது. இந்த இடதுசாரிக் கம்யூனிஸ்டுக்கு இந்திய அரசாங்கம் ஏன் டோக்கியோ செல்ல அனுமதி அளித்தது? டோக்கியோவில் இருந்து திரும்பிய மோகன் சிங் சேதி மீது என்ன நடவடிக்கை எடுத்தது? இப்படித் தேசத் துரோகிகளையெல்லாம் அன்னிய நாடு செல்ல ஏன் இந்த அன்னியச் செலாவணி நெருக்கடிக் காலத்தில் அனுமதிக்க வேண்டும்?

சேலம்,
14-8-65 பாம்பருகன்

'சிறு சேமிப்புத் திட்டம்' என்ற ஒரு முறையைச் சர்க்கார் ஏற்படுத்தி, அதனால் சிறு தொழில் செய்து பிழைக்கும் வியாபாரிகளுக்குச் சர்க்காரும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் கொடுக்கும் தொல்லைகளுக்கு எல்லையே இல்லை.

அன்றாட வாழ்க்கைப் பிரச்னைக்குப் போராடிக்கொண்டிருக்கும் சிறு வியாபாரிகள் சர்க்காரின் சிறு சேமிப்புத் திட்டத்துக்கு ரூபாய் இரண்டாயிரம், மூவாயிரம் கொடுத்தே தீர வேண்டுமென்று சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் கட்டாயப்படுத்தி வரும் செய்கின்றனர். "நாங்கள் ஏதாவது உங்களிடம் குற்றம் கண்டுபிடித்து, அதில் பிடித்து உங்களை அமுக்கிக்கொள்வோம். அப்போது செலவு செய்யும் பணத்தை இப்போது கொடுத்து விடுங்கள்" எனச் சொல்லி அச்சுறுத்துகின்றனர்.

ஜீனி கோட்டா உள்ள ஒவ்வொரு வியாபாரியும் ஒரு மூட்டைக்கு ரூபாய் நூறு வீதம் கொடுக்க வேண்டுமென்று மூடைக் கணக்கிட்டுக் கேட்கின்றனர். இப்படி எத்தனையோ தொல்லைகள்.

சர்க்காரின் கொள்கையும், அதைத் தன் தலைமேல் தாங்கி நடக்கும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் போக்கும் மிகப் பயங்கர எண்ணத்தையும், சூழ்நிலையையும் ஏற்படுத்துகின்றன. சர்க்காரின் எல்லையில்லாக் கோரப் பசிக்கு நாங்களெல்லாம் பலியாகித்தான் தீர வேண்டுமா?

மதுரை சிவகங்கை தாலுகா சிறு வியாபாரி
16-8-65 கள், சிறு தொழில் செய்பவர்கள்.

ஆகஸ்டு 8-ந் தேதி 'கல்கி' இதழில் 'கடல் அலை' என்னும் பொருள் பற்றிப் பல ரசமான கருத்துக்கள் வெளியிடப்பட்டன. அலையிற் காணும் ஒரு பக்தன் கருத்தை ஆழ்வாரொருவர் வெளியிட்டிருக்கிறார்:

"தன்னுளே திரைத்தெழுந்
தரங்கவெண் தடங்கடல்
தன்னுளே திரைத்தெழுந்து
அடங்குகின்ற தன்மைபோல்
தன்னுளே பிறந்திறந்து
நிற்பவும் திரிபவும்
நின்னுளே அடங்கி நின்ற
நீர்மை நின்கண் நின்றதே"

என்னும் பாடலில் அலையெறியும் கடலுக்கும் கருணையலை யெறியும் இறைவனுக்கும் அழகியதோர் உவமை காணப்படுகிறது.

மதுரை,
10-8-65 'கம்பர்' டி. திருவேங்கடம்

Edited printed & published by T. Sadasivam on behalf of Messrs. Bharathan Publications Private Ltd., at the Kalki Press, Kilpauk, Madras-10



REGISTERED No. M. 4392

Registered as a Newspaper in Ceylon